# பிரம்மோபதேசம்



ஜெயகாந்தன்


பிரம்மோபதேசம்
ஜெயகாந்தன்

http://www.pustaka.co.in

# பிரம்மோபதேசம்

## இரு குறுநாவல்கள்

# Brahmopadesam

## Two Short Stories

Author:

## ஜெயகாந்தன்

## Jayakanthan

For more books

http://www.pustaka.co.in/home/author/jayakanthan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

இலக்கணம் மீறிய கவிதை

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

# முன்னுரை

எனது முந்தைய கதைத் தொகுதிக்கு முன்னுரையொன்று எழுதாதது பெரிய குறை என்று புத்தகம் வெளிவந்தவுடன் நானும் உணர்ந்தேன்; நண்பர்கள் பலரும் உணர்த்தினார்கள்.

அந்த ஒரு காரணம் பற்றி மட்டுமல்லாமல், கதைகளில் சொல்லமுடியாத... சொன்னால் கதைத் தன்மை குலைந்து போகக் கூடிய - ஆனால் நான் கதை எழுதும் நோக்கம் வலுப்பெறச் சொல்லியே தீரவேண்டிய - கதை பற்றிய கருத்துக்களைப் பேசுவதற்கு நூலின் முன்னுரை ஒரு சௌகரியமான தளம் என்பதால் இந்தச் சில பக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வது சமுதாயக் கண்ணோட்டத்துடன் இலக்கியப் பணிபுரியும் என் போன்றவர்க்கு இன்றியமையாததுமாகும்.

என்னைப் பற்றி எனது நண்பரும் விமர்சனக்காரருமாகிய அன்பர் க.நா.சு. அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்து என் நினைவுக்கு வருகிறது.

'ஜெயகாந்தன் முற்போக்குக் கொள்கைகளை ஆதரிப்பவர் எனினும் இவரது கதைகளில் முக்கால்வாசி முற்போக்குக் கொள்கைக்கு ஒத்துவராது'.

இந்த 'பிரம்மோபதேசம்' வெளிவந்தவுடன் எனது ஒரு வகை நண்பர்கள் 'இது முற்போக்கா, பிற்போக்கா அல்லது இரண்டுக்கும் நடுவே சமத்காரமாகச் செய்யப்பட்ட ( compromise ) விட்டுக் கொடுத்து உடன்பாடு காணும் போக்கா?' என்று சந்தேகித்தார்கள்; அல்லது குற்றம் சாட்டினார்கள்.

அதுபோலவே நண்பனும் அல்லாத விரோதியுமில்லாத பெயரோடு எதிர் வந்து முகம் காட்ட மறுக்கும் ஒரு பேர் வழி ஒரு பகுத்தறிவுப் பத்திரிகையில் ‘இவர் என்ன கம்யூனிஸ்டு! பார்ப்பனீயத்துக்குத் தாக்குப் பிடிக்க ஒரு கதை எழுதி அதில் வரும் கம்யூனிஸ்டை ஒரு சனாதனப் பார்ப்பானின் வாதத்தின் முன் பணிய வைக்கிறாரே' என்று

கலைக்கண்ணவிந்து காற்றில் கைவீசி என் 'கம்யூனிஸ்ட் தன'த்தைக் காப்பாற்ற அல்லது காற்றில் பறக்கடிக்க முனைந்தார்.

இதற்கெல்லாம் தனிப்பட்ட முறையில் இவர்கள் என் மீது கொண்டுள்ள வெறுப்பே காரணம் என்று நான் சொல்லமாட்டேன்.

ஆனால் 'முற்போக்கு' என்பதை இவர்கள் தவறாகவும் சரியில்லாத முறையிலும் புரிந்துகொண்டு அதன் மீதொரு வெறுப்பும், தவறான கண்ணோட்டமும் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்கிறேன்.

மற்றொரு சாரார் ஓர் அரசியல் கட்சியின் இன்றைய உடனடிப் பிரச்சனைகளுக்கு ஏற்ப நான் எழுதுவதே ‘முற்போக்கு' என்று எண்ணி, கட்சிக்குச் சம்பந்தமில்லாத அல்லது கட்சியின் கவனத்திற்குக் கொண்டுவரப்படாத, கட்சி கறாராகத் தீர்மானிக்காமல் விட்டு வைத்திருக்கிற காரியங்களுக்குக் கட்சியைப் பிணிக்கப் பார்க்கிறார்கள்.

ஆகையினால்தான் இப்படிப்பட்ட கருத்துக்களை மிகுந்த பொறுப்புணர்வோடு அவர்கள் - அந்த விமர்சகர்கள் - வெளியிடுகிறார்கள். விமர்சனங்களைப் பற்றி எனக்கு இப்போது கவலை இல்லை.

உண்மையில் முற்போக்கு என்பதுதான் என்ன? நான் வரித்துள்ள முற்போக்குக் கலைநோக்குதான் யாது? என்று இங்கே தெளிவுபடுத்துவது எனது வாசகர்களுக்கும், எனது கலைப் பணிக்கும் உதவிகரமாயிருக்கும் என்று கருதி இந்தக் கதையில் வரும் பாத்திரங்களைக் கொண்டே ஓரளவு விளக்கம் தர முயல்வேன்.

குடுமி வைத்திருப்பவன் பிற்போக்காளன்; கோயிலுக்கப் போகிறவன் பிற்போக்காளன்; நமது புராணங்கள் யாவும் பிற்போக்கானவை; நமது சாஸ்திரங்கள் யாவும் பிற்போக்கானவை என்பது ஒரு முற்போக்கான கொள்கையாய்க் கொண்டாடப் படுகிறது!

பெயரை மாற்றிக்கொண்டால் முற்போக்கு; நாத்திகம் பேசினால் முற்போக்கு, பிரியாணி சாப்பிட்டால் முற்போக்கு; தொட்டதற்கெல்லாம் மேனாட்டைப் பற்றி பேசுவது முற்போக்கு; நம்மை நாமே இழித்துப் பேசிக் கொள்வதும் நமது விக்கிரகங்களை உடைத்தெறிவதும் முற்போக்கு என்பது மற்றோரு கொள்கை.

உண்மையில் இந்த இரண்டு தன்மைகளை வைத்து மட்டும் முற்போக்கு - பிற்போக்கை இனம் பிரிப்பது அறிவாளிகளின் செயலாகாது.

எவனொருவன் தன்னலம் மறுத்து, மனிதகுலத்தின் ஒரு பிரிவின் மீதோ பல பிரிவுகளின் மீதோ துவேஷம் வளர்க்காமல் பொதுவான மனிதகுலத்தின் வளர்ச்சிக்கும் உன்னத வாழ்க்கைக்கும் பாடுபடுவதற்குத் தானோர் உதாரண புருஷன் என்ற லட்சிய வேட்கையோடு செயலாற்றுகிறானோ, தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொள்கிறானோ அவன் அந்த அளவில் மனித இதயங் கொண்டோரின் மரியாதைக்குரிய முற்போக்குவாதிதான்.

அவ்விதம் பார்க்கையில் நமது பழைய பெருமைகளையும் இந்தியாவின் ஆன்மாவையும் கொன்று, வரட்டுச் சீலம் பேசி, வேற்றுமை வளர்த்து, இரட்டை வேடம் போட்டுத் திரியும் ஜாதிப்பித்திலும் வரட்டுக் கௌரவத்திலும் தன்னை அழித்துக் கொண்டே அழிவை மறைத்துப் புது வேடம் போட்டு வாழும் பாமரப் பிராமணர்கள் நடுவே இந்தக் கதையில் வரும் சங்கரசர்மா ஒரு மகத்தான புரட்சிக்காரர்!

நான் கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கும் தத்துவங்களுக்கும் முரணான ஒரு கொள்கையை ஒரு சீலத்தை எனது சர்மா தழுவியிருக்கலாம். எந்த நோக்கத்திற்காக நான் ஒரு கொள்கையைத் தழுவியுள்ளேனோ அதே நோக்கத்திற்காக எனக்கு மாறுபட்ட ஒரு கொள்கையை சங்கர சர்மா தழுவி நிற்பதால் எனது கண்டனத்துக்கும் தூற்றுதலுக்கும் அவரை ஆளாக்குவது தர்மமுமன்று; பெருந்தன்மையுமன்று.

அவரது பிராமண குலம் கடமை வழுவி நிற்கிறது என்பதில் எந்த நாஸ்திக - பிராமண துவேஷியையும்விட அவர் அந்த சமூகத்தை சினந்து கொள்கிற ஆஸ்திகச் செம்மல்!

பழைய பெருமைகளை உயிர்ப்பிக்க வேண்டுமென்பதில் ஓர் இயக்கத்தின் முழுநேர ஊழியனுக்கு இணையான சித்த உறுதியுடன் அவர் வாழ்கிறார். மனித குலத்துக்கு அறிவுத் தொண்டு புரிந்து ஆன்மீகப் பண்பை வளர்க்க வேண்டும் என்ற அவரது மனிதாபிமானப் பண்பு எந்த உண்மையான முற்போக்குவாதிக்கும் முரணல்ல.

ஆம்; அவர் வேதம் புதுமை செய்ய முயல்கிறார் - மனித வாழ்வைப் பற்றி அவருக்குச் சில தீர்க்கமான கருத்துக்கள் உள்ளன. அவர் ஆஸ்திகர்; ஆன்மீகவாதி. அதற்காக அவரது உண்மையான சமுதாய நோக்கைச் சந்தேகிக்கக் கூடாது என்று உணர்கின்றான் உண்மையான நாஸ்திகனும், லோகாயதவாதியும், கம்யூனிஸ்டுமான சேஷாத்திரி.

மேலும், ஒரு பலவீனமான இயக்கத்தின் பலம் மிக்க ஒற்றைப் பிரதிநிதியான சர்மா, பழைய பலத்தை நம்புகின்ற போதே புதிய 'பலவீன'ங்களினால் தாக்குப் பிடிக்க இயலாமல் வரட்டுப் பிடிவாதத்திலும் அல்லது வரட்டு நம்பிக்கையிலும் வாழ்கிறார் என்று உணர்ந்த, வாழ்கின்ற மனிதனான சேஷாத்திரி, தனது வாதத் திறமையால் அவரை நிராயுதபாணியாக்கிப் பணியவைக்க விரும்பாமல் சிரித்து விலகி செயலாற்றலில் அவரைத் தூக்கி எறிந்து விட்டுப் போகிறான்.

இதைச் செய்யாமல் ‘ஆத்திகர்களும் மனிதர்களின் தெய்வ நம்பிக்கையுமே இன்று நீங்கள் பேசுகிற கலை, கலாச்சாரம் யாவற்றையும் வளர்த்தன்' என்று - சேஷாத்திரியும் உணர்ந்து ஒப்புக்கொள்ளத் தகுந்த - ஒரு பழைய உண்மைக்கு சர்மா மார் தட்டுவதைச் சகிக்காமல் 'உங்கள் நாத்திகம் உலகத்தைக் குட்டிச் சுவராக்கும்' என்ற அவரது வார்த்தைக்கு ஆத்திரப்பட்டு நாத்திகர்களின் அண்ட வெளிப்பயணத்தையும் புதிய கலாச்சாரத்தின் விஞ்ஞானப்

புரட்சிகளைப் பற்றியும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் சேஷாத்திரியின் பாத்திரம் பலவீனமுற்றுவிடும். பாத்திரப் படைப்புக்கு, என் கதையமைப்புக்கு அது புறம்பு.

இற்று விழுகின்ற ஒரு புராதனப் பண்பாட்டைக் கண்டு பொங்கி எழுகின்ற பாரதத்தின் ஆன்மாவும், வைராக்கிய சித்தமும், தர்மாவேசமும் எவ்விதம் புதிய ரூபம் பெற நிர்ப்பந்திக்கப் படுகின்றன என்பதற்கோர் எடுத்துக்காட்டு சர்மா.

வெற்றிகளை ஈட்டிவரும் புதிய சக்தியின் விளைவு சேஷாத்திரி. அது வீண் ஆரவாரம் கொட்டாது; அது ஆத்திகத்திடம் அறிவுத்துறையில் மிக நெருக்கமாய் நெருங்கி நின்று செயல்படும். ஆத்திகத்தின் பெயரால் மூடர்கள் பெருகியதற்கிணையாகவும் அதிகமாகவும் பல்கிப் பெருகிப் போன நாத்திக மூடர்களைப்போல் அநாகரிகமான செயல்களில் இறங்கி பாரதத்தின் பெருமைகளைக் கலைக்காது. இருக்கின்ற பெருமைகளைக் குலைக்காது. இருக்கின்ற பெருமைகளைக் கபோதித் தனமாய் நிராகரித்து அந்நிய மோகம் என்ற அடிமைத் தனத்துக்கு இரையாகி புதுமை என்ற போலிச் சரக்குக்குப் புத்தியை விலையாக்காது. பழைய பெருமைகளைப் புரிந்துகொண்டு புதிய பெருமைகளையும் அவாவி வாழ்ந்து வளர்ந்து வரும் அறிவின் முனைப்பில் ஒளிவிடும் ஒரு புதிய தத்துவம்; அது மாறக்கூடியதும் மாற்றக் கூடியதுமான விஞ்ஞானம், அந்த சித்தாந்தத்தின் பிரதிநிதி சேஷாத்திரி. இதைப் புரிந்து கொண்டால் அரைகுறை முற்போக்கு வாதியினரும். அவசர விமர்சனக்காரர்களும் கூறுவதுபோல் நான் விட்டுக் கொடுத்து உடன்பாடு காணும் போக்கிலோ முற்போக்குக் கொள்கைக்கு ஒத்துவராத போக்கிலோ இதை எழுதவில்லை என்பது என் மதிப்பிற்குரிய வாசகர்களுக்குத் தெளிவாகும் என நம்பகிறேன். இதில் உள்ள மற்றொரு கதையான “இலக்கணம் மீறிய கவிதை" பற்றி ஒரு வார்த்தை.

இது ஒரு 'விடனை’ப் பற்றிய, ஒரு விபசாரியைப் பற்றிய கதை. அவர்கள் ‘அவை' மட்டுமல்ல; அதற்கு மேல் என்று தங்களுக்குள் நிரூபித்துக் கொள்கிற கதை, நிரூபித்துள்ளார்களா என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

கடைசியாக இந்த முன்னுரையில் சொல்ல விரும்புவது ஒன்று உண்டு. உங்கள் கையில் விரிந்து கிடப்பது ஒரு புத்தகமல்ல; எழுதியவனின் இதயம் என்பதை லட்சியப்படுத்தி இதய பூர்வமாய்க் களங்கமற்றுப் படியுங்கள்!

21-5-63

த. ஜெயகாந்தன்

*****

# பிரம்மோபதேசம்

## பிரம்மோபதேசம் இலக்கணம் மீறிய கவிதை

## 1

சங்கர சர்மா என்றால் சென்னையிலுள்ள சாதாரண மக்களுக்குத் தெரியாது. மத்தியதர வர்க்கத்தவர்க்குக் கூட அநேகமாகத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் சாதாரண மக்களுக்கெல்லாம் பெயர் சொன்னால் தெரியக் கூடிய மந்திரிமார்கள், நீதிபதிகள், பெரிய வியாபாரிகள், கூட்டங் கூடி வேடிக்கை பார்க்கத்தக்க அபூர்வப் பிறவிகளான நட்சத்திர நடிகர்கள் போன்ற மேல் தட்டுப் பிரமுகர்களுக்குச் சங்கர சர்மா என்ற பெயரைச் சொன்னால் நிச்சயம் தெரிந்திருக்கும்.

சிலருக்கு அவரது பெயரைக் கேட்டவுடன் சர்மாவின் உருவம் நினைவுக்கு வராவிட்டாலும், கவர்னருக்களித்த வரவேற்பு விருந்தில் பரிமாறப்பட்ட, சர்மாவின் புரிய கண்டுபிடிப்பான 'டொமேட்டோ பாதுஷா’வின் நினைவால் நாவில் நீர் உரும்.

ஆமாம்; டொமேட்டோ பாதுஷாதான்: செக்கச் செவேலென்று பார்ப்பதற்கே அழகாய் ஒரு முழுத் தக்காளிப்பழமாக அதன் உள்ளே வாதுமைப் பருப்பும் சர்க்கரை ஜீராவும், குங்குமப் பூவுமிட்டு நெய்யில் பொரித்து... அதில் சேர்த்துள்ள பொருள்களையும் செய்முறையையும் அவரே விளக்கினால்தான் புரியும். அதன் பிறகு ஒவ்வொரு வீட்டு விருந்திலும் இது இடம்பெறத் தவறியதே இல்லை. அதன் மகத்துவம் பரவிக் கொண்டே இருக்கும் போது, இன்னொரு இடத்தில் புதிய மாதிரியில் மற்றொரு ஸ்வீட்டோ, காரமோ அவரால் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் பிரபல்யம் பேச ஆரம்பிக்கப்படும். இவ்விதம் அவர் அந்த பெரிய வர்க்கத்தினரிடையே மிகவும் பிரசித்திபெற்ற சமையற் காரராக இருந்தார். அதற்காக அவர் வாங்கும் பணமும் அதிகம். அவரிடம் வேலை பார்க்கிற அவரது பத்து

அஸிஸ்டெண்டுகளுக்கு அவர் தருகின்ற சம்பளமும் அதிகம். ஆனால் அவர் வேலை செய்யும் நாட்களோ குறைவானவை. அதற்குக் காரணம் அவரிடம் வேலை வாங்கிக் கொள்ளும் வட்டாரம் மிகவும் சுருங்கியது என்பது மட்டும் மல்லாமல், ஒரு காரணமுமில்லாமல் தன்னிடம் வருகின்ற வாடிக்கைகளை அவர் மறுத்தும் விடுவார். அதற்கு ஒரே ஒரு உதாரணம் உண்டு; அவர் ஒரு அற்புதமான கலைஞர் என்பது தான் அது.

சங்கர சர்மா வேதகாலத்தில் வாழ்ந்திருக்க வேண்டிய பிராம்மணோத்தமர். அவருக்கிருந்த சாஸ்திரத் தேர்ச்சியும் பிரம்மஞான மேதாவிலாசமும் இந்த முற்றிய கலிகாலத்தில், மூடத்தனமே கொலுவீற்றிருக்கும் தமிழ்நாட்டில், கொள்ளிடக்கரையில் உள்ள ஒரு குக்கிராமத்து அக்ரஹாரத்தாருக்கு ஒத்துவரவில்லை.

சுமார் பதினேழு வருஷங்களுக்கு முன் மனைவியை இழந்த சர்மா. தன் இரண்டு வயதேயான மகள் மைத்ரேயியை தோளிலும், மடிசஞ்சியைக் கையிலும் தூக்கிக் கொண்டு தேசாந்தரம் கிளம்பினார்.

உலகமே அசட்டுத்தனத்தின், அறியாமையின், நாஸ்திகத்தின், உற்பாதமாக இருப்பது கண்டு மனம் வெதும்பினார். உலகத்தையும் மனிதரையும் பார்க்க அவர் மனசில் ஓர் அசூயையும் கர்வமுமே பிறந்தது.

'இது கலியுகம் கலி முற்றும்போது அதர்மம் பெருகும். ஆனால் இந்த நியதி தெரிந்த, ஞானம் கைவரப் பெற்ற பிராமணரும் கலிக்கு அடிமையாகிக் கடமை மறந்து விட்டால் பிறகு இந்த கலி எப்படி ஒழியும்? இந்த மனுஷ ஜாதியின் அறிவுக்கே பொறுப்பாளியான பிராமணன் மூடனாகிவிட்டால்...? சீ சீ! பிராமணனுக்கு முட்டாளாயிருக்கும் உரிமையில்லை. இவர்கள் எல்லாம் என்ன பிராமணர்கள்! பெயரளவில்தான்; தன்மையை, பிரம்ப தேஜஸைக் காணோமே!' என்று எண்ணிய சர்மா மற்ற யாரையும்விடப் பிராமணர்களையே அதிகம்

வெறுத்தார்; நிந்தித்தார். எனினும் அந்தச் சமூகத்தினருடன் தான் அவர் வாழ வேண்டியிருந்தது.

திருவல்லிக்கேணி என்று பேசப்படுகிற சென்னையின் ஓர் அங்கத்தில், எருமை மாடுகளும், வண்டிப் போக்குவரத்து இல்லாத சிறிய சந்து என்பதனால் மனிதர்களும், நின்று அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கும் நாற்றம் பிடித்த ஒரு தெருவில், ஒரு காலத்தில் ராஜ்யப் பிரமுகர்களாயிருந்தோரின் வழித்தோன்றல்களும் தற்காலத்தில் பிராமண சமூகத்தின் 'புராலிடேரியட்' பிரிவாகவும் விளங்குகின்ற ராயர் குடும்பங்கள் வாழும் ஒரு பழைய காலத்து இருண்ட வீட்டின் முன் போர்ஷனில்தான் சர்மாவும் அவரது மகளும் தங்கள் ஆசார ஜீவிதத்தையும் நடத்த வேண்டியிருந்தது. இருக்கட்டுமே, அதனால் என்ன?

எவ்வளவுதான் காலமும் விதியும் ஒரு மனிதனை நிர்ப்பந்தித்து, அழுகிப்போன ஒரு சமூகத்தின் நடுவே வாழ வைத்தாலும் தனி மனிதர்கள் தங்கள் அறிவின் தெளிவாலும், தாங்கள் சித்த உறுதியுடன் கடைப்பிடித்து ஒழுகி வரும் ஸ்ம்ஸ்காரங்களினாலும் தங்களைச் சுற்றி ஆத்ம ரீதியான ஒரு வேலி அமைத்துக் கொண்டு அந்தத் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இன்னும் சொல்லப் போனால் அதுவே. அவ்விதம் வாழவேண்டிய நிர்ப்பந்தமே சமூகத்துக்கும் சரி, தனி மனிதனுக்கும் சரி அவசியமாகிறது. ஏனெனில் ஒரு சிறந்த மனிதன் தன்னைச் சுற்றித் தானே அமைத்துக் கொள்ளும் அந்த வேலிக்கும் அவனது தனித்துவம்தான் பிற்காலத்தில் சமூகத்தில் சமூகத்தையே ஆள்கிறது. சமூகத்தின் அழுகலிலிருந்து காப்பாற்றப்படும் அந்த நெறியே பிறகு சமூகத்தின் சொத்தாகிறது. அவ்விதம் சமூகத்தை ஆள முடியாத தனிமனித நெறி காப்பாற்றப் படுவது பொருளற்றது அல்லவா? இப்படி ஒரு சமூகத்திலிருந்து தானே பிரிந்து ஒரு குறிப்பிட்ட நிலையில் அத்துடன் தானும் சங்கமமாகி, சமூகத்தைத் தன்வயப்படுத்தும் தனிமனிதர்கள்தான் ஞானிகள்; மேதைகள்; மஹா

புருஷர்கள். தனி மனிதனும், மஹா புருஷர்களும் சமூக இயக்கத்தின் விளைவுதான் என்று பின்னால் சமூகம் பெருமைப்படப் போவது சரியே என்றாலும் அந்த அளவு பெருமை அந்தத் தனிமனிதர்க்கும் உண்டு.

இந்தத் தீர்மானத்தில் தான், இந்த நம்பிக்கையில்தான் 'சுயமான' தூய்மையான பிராமணன் நான்' என்ற கர்வம் இருந்த போதிலும், தான் கற்ற சாஸ்திரங்களையும் தான் கண்ட வேத சாரங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, கொஞ்சமும் தளும்பாத நிறைகுடமாய், அசுத்தங்களிடையே அக்கினியாய் வாழ்ந்தார் சங்கர சர்மா.

சென்னையில் அவருக்குக் கிடைத்த முதல் நண்பரும் ஒரே நண்பருமான குண்டுராயர் தம்பதிகளையும் அவர்களின் கடுமையான உழைப்பையும் கண்ட பிறகுதான், அறிவின் முனைப்பில் நிற்பது பிராமணனுக்கு அடிப்படை என்றாலும், அத்துடன் அவன் சோம்பர்த் தொழில் புரிந்து வாழாமல் யாதானும் ஒரு தொழில் புரிவது அவசியமாகிறது என்று அறிந்தார் சர்மா, வேதபாராயணமோ, சடங்குகளோ செய்து பிழைப்பதைவிட, ஒரு தொழில் செய்து லௌகிய வாழ்வை நடத்திக் கொண்டு ஞான வேள்வி புரிபவனே இந்த யுகத்தில் சரியான பிராமணன்... என்ற முடிவில் கையில் நாலு இரும்புக் கரண்டிகளுடன் சமையற்காரரானார் சங்கர சர்மா.

எனினும், காலாகாலம் சந்தியாவந்தனம் செய்வதில் தவறாமலும், பிதுர்க்கடன் நிறைவேற்ற மறவாமலும் ஆத்ம நெறி வழுவாத ஒரு பெரியாராய், ஒன்பது சுற்று யக்ஞோப வீதத்துடன் 'பத்தாறு' தரித்து, பிராமணகுல தர்மத்திற்கோர் பிரதிநிதியாகவே திகழ்ந்தார் சர்மா.

அவரைப் பொறுத்தவரை, தம்மைச் சுற்றி வாழ்கின்ற பூணூல் தரித்த பிராமணர்கள் எல்லாம் 'பிராமண தர்மத்திலிருந்து வழுவிப்போய், அறிவுக்குப் பொறுப்பாளியாய் இருக்க வேண்டியவர்கள். அறிவுக் கிரணங்களின் சாயை கூடத் தம்மீது படாமல் கலியின்

இருளில் சிக்கிக் கெட்டழிந்த பார்ப்பனர்கள்' என்பது தீர்மானமான கொள்கை. தமது தொழிலுக்காக வைத்துள்ள அஸிஸ்டெண்டுகளாக இருப்பவர்களைக்கூட அவர் மனம் தூய அந்தணர்களாய் ஏற்க மறுத்தது. அனாசார நடவடிக்கைகளையும் கிராப்புத் தலையையும் சுட்டிக்காட்டி எப்பொழுதும் வைத்து கொண்டே இருப்பார். அதன் காரணமாய், ஊரில் உள்ளோரெல்லாம் மிகவும் சிலாகித்துப் பாராட்டும் தமது சமையலை அவர் இதுநாள் வரை ருசி பார்த்ததுகூட இல்லை. ஏனெனில், அசுத்தப்பட்ட பிராமணர்களின் கைகளால் செய்யப்படும் உணவை அசுத்தப்பட்ட பிராமணர்கள் மட்டுமே ஆசாரம் என்று எண்ணிச் சாப்பிடட்டும் என்ற முடிவுதான்...! அவருக்கு அதெல்லாம் பெரிய விஷயங்கள்.

அவருக்கு வலது கை போன்ற நண்பர் குண்டு ராயர். சர்மா இருக்கும் வீட்டின் பின்பகுதியில் அவர் தன் மனைவி கங்காபாயுடன் வெகுகாலமாய்க் குடியிருக்கிறார். குண்டுராயர் ரொம்ப காலமாய் ஒரு ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்தவர். சமீப காலமாய் ஹோட்டல் வேலையை விட்டுவிட்டு, சங்கர சர்மாவுடன் தொழில் புரிகிறார். குண்டுராயர் சர்மாவைவிடப் பத்து வயதே மூத்திருந்தாலும் நரைத்துத் தளர்ந்த கிழவராகக் காணப் படுவார். அவர் கைபட்டதைக்கூட சர்மா தொடமாட்டார். அப்படித் தொட நேர்ந்தால் குளித்த பின் தான் வீட்டுக்குள் நுழைவார். குண்டு ராயர் இவற்றையெல்லாம் பார்த்து மனசுக்குள் சிரித்துக் கொள்வதல்லாமல் வாய் திறந்து ஒரு வார்த்தை சர்மாவிடம் கேட்க மாட்டார். அதற்குக் காரணம் பயம் மட்டும் அன்று; சர்மாவின் சாஸ்திரப் புலமையும் வேத நம்பிக்கையுமேயாகும்.

*****

# 2

அப்பொழுது கல்யாண சீசன்.

"ஸ்வாமிகளே, காசும் பணமும் உங்களுக்கு பெரிசில்லே. இது எனக்குத் தெரியும்; லோகத்துக்கும் தெரியும். ஆனால் நீங்க வெறும் தனி மனுஷனில்லை... நீங்க பெரியவாள். புத்தி சொல்றேன்னு நெனச்சிக்கப்படாது. உங்க பொண்ணு மைத்ரேயி இன்னம் குழந்தையில்லே. அவளுக்கு ஒரு சுபகாரியம் நடக்கணும். எனக்குத் தெரியும். நீங்க அவளுக்காக உங்க மனசிலிருக்கிற பாசத்தைத் தவிர வேறே ஒண்ணும் வச்சில்லேன்னு. லோகத்துக்கு அது போறாது. அவளுக்குக் காதிலே மூக்கிலே ஒரு பொன் திருகாணி கூட இல்லேன்னு எங்காத்துக்காரி என்னண்டை வந்து கொறை பட்டுண்டா. அதனாலே நீங்க எல்லாத்தையும் யோசிச்சு" என்று குண்டுராயர் தயங்கித் தயங்கி லௌகிக காரியாதிகளை வற்புறுத்தியபோது சர்மா நேருக்கு நேராய் ராயரின் கண்களை உறுத்துப் பார்த்துத் தன் மனதைத் திறந்து காட்டினார்.

"ஓய், ராயரே! காலம் கெட்டுப்போனதால், நாமும் கொஞ்சம் பாதிக்கப்படறோம்... ஹ்ம்... ஒரு பிராமணப் பொண்ணு பத்தொன்பது வயது வர கலியாணமாகாமல் இருக்கலாமோ...? புஷ்பவதியாகறதுக்கு முன்னாலேயே தக்க வரன் தேடித் தன் மகளுக்கு விவாகம் செய்யாத தந்தை நிந்திக்கப்படுவான்'னு மநு சொல்லி இருக்கார். 'தக்க வரன்'னு சொல்லி இருக்கார் ஓய். அதைத்தான் நான் அதிகம் கவனிக்கிறேன். என் மனமும் எட்டு வருஷத்துக்கு முன்னாடியே அவளுக்கொரு வரன் தேடி முடிச்சுடணும்னு தவிச்சது ஐயா... நான் என்ன பண்ணுவேன்! என் வம்சத்து மூதாதையரெல்லாம் பிராமண தர்மத்துக்கே இலக்கணமா வாழ்ந்தவா நடுவிலே என் அப்பாதான் கெட்டுப்போனார். அதுக்கப்புறம் அவருக்குப் பதிலா அந்தப் புனிதக் கொடியை நான் தூக்கிண்டேன். 'எனக்கப் புறம்?'னு நெனச்சபோது... எனக்கொரு புத்திரன் பொறப்பான்னு இருந்தேன்... அந்தப் புண்ணியவதி இந்தப் பொண்ணைப்

பெத்துக் குடுத்துட்டுப் போயிட்டாள். இப்போ நான் ஓர் அசல் பிராமணனைத் தேடிண்டே வருஷங்களை முழுங்கிண்டிருக்கேன். அவன் உஞ்சவ்ருத்தி செய்யறவனா இருந்தாலும் நல்லது... ஆனா பிரம்மஞானமும் வேத நம்பிக்கையும் கொண்டு இந்த லோகத்தையே பரிபாலிக்கிற மேதையா இருக்கணும்... தேடறேன் கெடைக்கலியே! இந்த ஜாதிகெட்ட பிராமணப் பயல்களுக்கு அவளைத் தர்ரதை விட அவள் கன்னியாகவே இருந்துடட்டும். ஆனா, ராயரே! நிச்சயம் அப்படிப்பட்ட பிராமணன்கள் இந்த லோகத்திலே இருக்கா... இல்லாமல் போயிடமாட்டா... லோகம் அழியாம இருக்கிறது அவாளாலே தான்... என்ன. புரியறதா?" என்று தன் வயமிழந்து சர்மா பிதற்றிக் கொண்டிருக்கும்போது ராயர், வந்த சமையல் கிராக்கிகளுக்கெல்லாம் அவரைச் சம்மதிக்க வைத்து விட்டார்.

அந்த வருஷம் பங்குனி மாதத்திலிருந்து ஆனி மாதம் வரை எத்தனை முகூர்த்த தினங்கள் இருந்தனவோ அத்தனை தினங்களிலும் ஏதாவது ஒரு வீட்டில் சர்மாவுக்கு வேலை இருந்தது.

அப்படிப்பட்ட வேலை நெருக்கடியின் போதுதான் குண்டு ராயர் சேஷாத்திரியை அழைத்துக்கொண்டு சங்கர சர்மாவிடம் வந்தார்.

ஒருநாள் காலை வெளித்திண்ணையில் அமர்ந்திருந்த சர்மாவிடம் குண்டுராயர், சேஷாத்திரியுடன் வந்து "சுவாமி" நான் சொன்ன சேஷத்திரி இவன்தான்; நல்ல பையன். யூனியன்லே சேர்ந்திருக்கிறதினாலே அந்த ஹோட்டல்காரன் வேலையிலிருந்து அனுப்பிச்சுட்டான்; மத்தப்படி வேலையிலே ரொம்ப கெட்டிக்காரன்" என்று அவனை அறிமுகப்படுத்தினார்.

“வணக்கம்” என்று கைகூப்பினான் சேஷாத்திரி.

அவனை ஏற இறங்க ஒருமுறை பார்த்தார் சர்மா. அவன் அதிக உயரமில்லை என்றாலும் குண்டுராயரின் பக்கத்தில் நிற்கும்போது அதிக உயரம்போல் தோன்றினான். மாநிறம்;

கிராப்புதான் வைத்திருந்தான்; வெள்ளை ஷர்ட்டும் நாலு முழ வேஷ்டியும் உடுத்தியிருந்தான்: நெற்றி வெறிச் சென்றிருந்தது. நீண்ட மூக்குக் கீழே, இருப்பது தெரியாமல் இருந்த அவனது மீசையையும் பார்த்தார் சர்மா.

வாயிலிருந்த புகையிலைச் சாற்றை எட்டித் தெருவில் துப்பிவிட்டுத் திரும்பிய குண்டுராயர் "இவன் தகப்பனாரை எனக்கு ரொம்ப காலமாகத் தெரியும். ரொம்பத் தங்கமானவன். போன வருஷம் காலமாயிட்டான்" என்றார். சர்மா குண்டுராயர் பக்கமே திரும்பாமல் சேஷாத்திரியைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவனிடம் கேட்டார் சர்மா:

“பிராமணப் பிள்ளை என்கிறாய், நெத்தியிலே விபூதி கூட இல்லையே?"

"எனக்கு அதில் நம்பிக்கை இல்லை” என்றான் சேஷாத்திரி.

"எதில்? நீ பிராமணன்ங்கறதிலேயா?" அவனும் அழகாகப் பதில் சொன்னான்.

"இல்லை; விபூதி அணிந்தால்தான் பிராமணன் என்பதில்...”

"ஓ!” என்று தாடியை நிமிண்டியவாறு பார்வையை வானத்தில் பதித்தார் சர்மா.

'இவன் என்ன பிள்ளை, வேலைக்கு வந்த இடத்தில் விவகாரம் பண்ணுகிறானே, அதுவும் சர்மாவிடத்தில் என்று நினைத்த ராயர், நிலைகொள்ளாமல் உட்கார்ந்திருந்தார்.’

"அது என்ன புஸ்தகம்...?” என்று சேஷாத்திரியிடமிருந்த ஒரு புத்தகத்தைப் பார்த்துவிட்டுக் கையை நீட்டினார் சர்மா. அதை மௌனமாக அவரிடம் கொடுத்தான் சேஷாத்திரி. அதை வாங்கிப் பார்த்த சர்மா ஒரு நாலைந்து பக்கங்களைத் தள்ளிப் படிக்கவே ஆரம்பித்துவிட்டார். குண்டு ராயரும் சேஷாத்திரியும் அவர் எதிரே மௌனமாய் உட்கார்ந்திருந்தனர். ஐந்து நிமிஷமாயிற்று பத்து நிமிஷமாயிற்று. சர்மா கால்மேல் கால் போட்டு நிமிர்ந்து

உட்கார்ந்து இடையிடையே படிக்கின்ற விஷயத்திற்கு எதிரான பதில்கள் மனசில் உருவாவதால் முகத்தில் அலட்சியப் புன்னகை தோன்றித் தோன்றி மறையப் படித்துக் கொண்டே இருந்தார்.

குண்டுராயர் வெற்றிலை போட்டுக் கொண்டார். சாவதானமாக விரலில் இருந்த சுண்ணாம்பைக் சுவரில் தேய்த்து விட்டுப் புகையிலைப் பொட்டணத்தைப் பிரித்து ஒரு கொத்து எடுத்து இடது உள்ளங்கையில் போட்டு நெறித்தவாறே, சர்மா புத்தகத்தில் ஆழ்ந்திருப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். சேஷாத்திரி அந்த வைதிகப் பிராமணர் இவ்வளவு பொறுமையாய் இந்தப் புத்தகத்தைப் படிப்பதைக் கண்டு முதலில் ஆச்சரியமும் பிறகு மனத்தில் அவர்மீது ஒரு மதிப்பும் பிறக்க அவரை அளக்க முடியாமல், அவர் சந்நிதானத்தில் கட்டுண்டு கிடந்தான்.

திடீரென உள்ளே இருந்து ராயரின் மனைவி கங்காபாய் கன்னடத்தில் என்னவோ சொல்லி அழைப்பது கேட்டுக் கையிலிருந்த புகையிலையை வாயில் போட்டுக் கொண்டு சேஷாத்திரியிடம் "இரு, வந்துவிட்டேன்" என்று கையாலேயே சைகையில் சொல்லிவிட்டு, விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடினார் ராயர்.

வீட்டில் சமையல் உள்ளில் அடைபட்டுக் கிடந்த சர்மாவின் புதல்வி மைத்ரேயி, தன் வேலைகளையெல்லாம் முடித்து வாசலில் நின்றிருந்த தந்தையை அழைக்க வந்த போது அவரைக் காணாமல், திண்ணையிலிருப்பார் என்று எண்ணி அறைக்குள் சென்று சன்னல் வழியாகப் பார்த்தாள். சர்மாவின் முதுகுப்புறத்திற்குப் பின்னால் இருந்த அறைச் சன்னலின் உள்பக்கமாயிருந்து அவள் எட்டிப் பார்க்கும் போது, புத்தகத்தில் லயித்திருக்கும் அவர் எதிரில் உட்கார்ந்திருக்கும் சேஷாத்திரி யதேச்சையாய்த் தலைநிமிர்ந்து பார்த்தான். புகைபடிந்த சன்னலினூடே இருண்ட பின்னணியில் ஒளிவீசும் சௌந்தர்யமாய்த் தோன்றிய அந்த முகத்தை - கனவுகள் மலர்வன போல் விரிந்த பெரிய விழிகள் அன்னிய இளைஞன் ஒருவனைக்

கண்ட திகைப்பில், அவன் விழிகளை நேருக்குநேர் நோக்கிய நாணத்தில் பெரிய, இமைகள் கூசிப் பரபரத்த கோலத்தை, 'அப்பா' என்று கூப்பிட விலகித் திறந்த இதழ்களின் மீது பயத்துடன் படிந்து பொத்திய மருதாணியணிந்த அழகிய விரல்களோடு, அவளது சித்திர எழிலையும் கண்டு ஒரு கணம் அவன் திகைத்தபோது, புத்தகத்தில் கவிழ்த்திருந்த பார்வையை மீட்டார் சர்மா. இந்தப் புத்தகம் பாரத நாட்டு மகத்துவத்தை ஆராய்கிற காரியத்தைச் செய்தாலும், ஒரு நாஸ்திகப் போக்கில் தானே எழுதப்பட்டிருக்கு...? நான் முழுக்கப் படிக்கல்லே; படிச்சவரைக்கும் எனக்கு அப்படித் தோன்றுகிறது..." என்று தன்னிடம் திடீரென்று பேச்சுக் கொடுத்த குரலால், அவளைக் கண்ட உணர்வு திடுமெனத் தறிக்கப் பட்டதும் சேஷாத்திரிக்கு முகம் முழுவதும் குப்பென வியர்த்தது.

"ஆமாம்" அதில் ஒரு நாஸ்திகப் போக்கு இருக்கலாம். “அதை எழுதியவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்...” என்று பதில் சொன்னான்.

"நீ கூட அந்தக் கட்சியைச் சேர்ந்தவன் தானா?" என்று புன்னகையோடு கேட்டார் சர்மா.

சேஷாத்திரி சில வினாடிகள் தயத்துடன் யோசித்தான்.

"சும்மா ஏதாவது பேசுவோமே என்றுதான் கேட்கிறேன். குண்டுராயர் வார்த்தைக்கு இந்த மாதிரி விஷயங்களில் மறுவார்த்தை கிடையாது. என்னிடத்திலே... உனக்கு நிச்சயம் வேலை உண்டு" என்று இன்னும் சற்று அதிகம் சிரிப்புடன் விளக்கினார் சர்மா.

அவர் பார்வை குறுகுறுவென்று அவன் கண்களை உறுத்தியது. தான் ஒரு கம்யூனிஸ்டு என்று சொல்லத் தயங்கியதற்கு நாணியதுபோல் தலையைக் குனிந்தவாறு உதட்டைக் கடித்துக் கொண்ட சேஷாத்திரி, முகம் நிமிர்த்தி "ஆமாம்; நான் அந்தக் கட்சியைச் சேர்ந்தவன்" என்றான்.

"கம்யூனிஸ்டுன்னா... அவாள்ளாம் நாஸ்திகர்களாச்சே?"

"ஆமாம், நானும் கூட நாஸ்திகன்தான்" என்று அவன் சொன்னதைக் கேட்டுவிட்டுச் சற்றுநேரம் சிந்தித்திருந்த பின் சர்மா தன் தாடியை நெருடிக்கொண்டே சிரித்தார்.

சிரிப்பின் இறுதியில் அவர் உள்ளத்தினின்றும் கைத்துப் போன அந்த வார்த்தைகள் வெளிவந்தன: "அது உத்தமம் தான்! தன்னையொரு பிராமணன்னு சொல்லிண்டு பிராமண தர்மத்துக்குப் புறம்பா நடக்கறவாளைவிட "நான் நாஸ்திகன்"னு ஒதுங்கிக்கிறது உத்தமம்."

“ஏன், பிராமணன் நாஸ்திகனா இருக்கக்கூடாதா?”

புருவ விளிம்பை உயர்த்தி உதடுகளைக் குவித்து அவன் கேள்வியால் சிந்தனைக் கிளர்ச்சியுற, புறங்கையால் மேவாயைத் தேய்த்திழுத்து முகத்தையே ஒருமுறை தடவி விட்டுக் கொள்ளும்போது 'ஹாஹா' என்ற குரலெடுத்து அவனது தர்க்கஞான விசேஷத்தைச் சிலாகித்துக் கொண்டே முகத்தைக் கண்டிப்புடன் மாற்றி ஆள்காட்டி விரலை அவன் முன்னே நீட்டி, 'நீ நாஸ்திகனா இருந்தாலும், பிராமணன்'னு சொல்லிக்கிறவாளைவிடக் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சவனாத்தான் இருக்கே. சொல்றேன் கேள்; நீ யாரை மனதில் வைச்சிண்டு. 'பிராமணன் நாஸ்திகனா இருக்கக்கூடாதான்னு கேக்றேன்னு எனக்குப் புரியறது, கூடாதுங்கறது இல்லே; 'முடியாது’ங்கறதுதான் அதுக்குப் பதில். நாஸ்திகன் பிரம்மத்தை, பிதுர்க்களுக்குச் செய்ய வேண்டிய கடன்களை ஸம்ஸ்காரங்களை ஆசாரங்களை யெல்லாம் மறுக்கறவன். ஒரு பிராமணனுக்கும் ஒரு பிராமண ஸ்திரீக்கும் மகனாப் பொறந்துட்ட ஒரே காரணத்துனாலே ஒருத்தன் பிராம்மணன் ஆயிடறதில்லே. பிராமணனுக்கு ஒரு ஜன்மத்திலே ரெண்டு பிறவி; பிறவியிலே எல்லா மனிதரையும் போல் அவனும் ஒரு மிருகமாகத்தான் பிறக்கிறான். பிறகு வளர்ந்து குணங்களினாலும் கடமைகளாற்றுவதனாலும் ஒருவன் மனிதனாகிறான். அப்படி ஒரு ஜாதியுமற்ற மனிதனாய் வளர்ந்த ஒரு பிராமணனின் மகனுக்கு யக்ஞோபவீதாரணம் செய்து, பிரம்மோபதேசம் செய்தபின், அவன் பிராமணனாகிறான். தனக்கு உபதேசிச்ச

மந்திரத்தை எப்படி அவன் தொடர்ச்சியாகக் கடைப் பிடிச்சுத் தன் கடமைகளைத் தொடர்ந்து செய்து ஞானத்தை வளர்த்துக்கொண்டு ஜன சமூகத்துக்கு அறிவுத் தொண்டு புரியறான்ங்கறதைப் பொறுத்துத்தான் அவனைக் கடைசி வரைக்கும் பிராமணன்னு சொல்ல முடியும். இதுக்கு நாஸ்திக வாதம் சரிப்பட்டு வராது.

“அதனாலே நான் நாஸ்திகர்களை நிந்திக்கிறேன்னு நினைக்காதே. ஹிந்து மதத்தில் நாஸ்திகப் பெரியோர்களும் இருந்திருக்கா. ஆனா அவா பிராமணனா இருந்திருக்கான்னு நான் சொல்லமாட்டேன். நீ உன்னை நாஸ்திகன்னு சொல்லிண்டா. பிழைப்புக்காகப் பூணூல் போட்டுண்டு இந்தப் பிராமணா வீட்டு விசேஷத்தலே உக்கிராண வேலை செஞ்சாலும் என்னிடத்திலே ஒரு பிராமணன்னு தயவு செய்து உரிமை கொண்டாடாதே! இந்த உலகம் உன்னை ஒத்துண்டாலும் என் ஆத்மா ஒப்புக்காது ஸ்வாமி" என்று கும்பிட்டார் சர்மா!

அறைக்குள் சன்னலோரமாய் மறைந்திருந்த சேஷாத்திரியை மட்டுமல்லாமல் தன் தந்தையின் பேச்சையும் கவனித்துக் கொண்டிருந்தாள் மைத்ரேயி.

'நீங்க பெரியவர்; இவ்வளவு தூரம் நான் உங்களிடத்திலே தர்க்கம் பண்றதுக்காக மன்னிச்சுக்கணும். என் அபிப்பிராயத்தை நான் சொன்னா தப்பா நெனச்சுக்க மாட்டேளே...!” என்று பவ்யமாய் அவன் கேட்டதும் சர்மா பதறிப் போனார்.

"சிவா சிவா...! இதென்ன? உன் அபிப்பிராயத்தை நீ சொல்றதுக்கு என் மன்னிப்பா? அறிவு பூர்வமா ஒருத்தன் பேசறதைக் கண்டு பயப்பட்டா நான் கடைப் பிடிக்கிற தர்மத்திலே எனக்கு நம்பிக்கையில்லேன்னு அர்த்தம். பலஹீனமான தத்துவங்களைப் பிடிச்சுண்டு தொங்கறவாதான் பொறத்தியார் பேசவே படாதுன்னு நினைப்பா: நீ தாராளமான உன் அபிப்பிராயத்தை என்னிடம் சொல்லாம்" என்று சர்மா மேல் துண்டை இழுத்துப் போர்த்திக் கொண்டு மார்பின் மீது கைகளைக்

கட்டி நிமிர்ந்து உட்கார்ந்து அவன் வார்த்தைகளைக் கேட்கலானார்.

அவன் சொன்னான்: "நீங்கள் என்னைப் பிராமணன் என்று ஒப்புக் கொள்ளாதது ரொம்ப சரி. நீங்கள், சொல்கிற மாதிரி நான் அப்பபடிப்பட்ட உரிமை கொண்டாட வரல்லே. ஆனா, நான் உலகம் போற போக்கிலே இந்தப் பழைய வேதத்தைவிட ஒரு புதிய வேதம் வேணும்னு நெனச்சு அப்பிடி ஒரு புதிய வேதத்தை ஏத்துண்டவன், மத்தப்படி நீங்க சொல்ற பழைய சடங்குகளையெல்லாம் இப்ப பிராம்மண சமூகமே ஒரு விலங்கா நெனச்சு சித்தத்துக்கு ஏற்காம செய்து தீர்க்கணுமேன்னு சிலர்தான் செய்யறா. ஆனா இந்தப் புதிய வேதத்தை ஒத்துண்டவா அதில் சொன்ன புதிய தர்மங்களைக் கடைபிடிச்சு, புதிய ஞானம் பெத்துண்டு, அறிவையும் வளர்த்துக்கறா; முக்கியமா - நீங்க சொன்னேளே - ஜன சமூகத்துக்கு அறிவுத் தொண்டு புரியறதுன்னு... அதையும் அந்த அளவுக்கு மத்த விஷயங்கள்ளேயும் தொண்டு செய்யறா. அப்படிப்பட்ட புதிய பிராம்மணன் நான்னு சொன்னா தப்பில்லையே...?"

"ம் பழசுக்கு அடிப்படை ஆஸ்திகம்ங்கறது மாதிரி இந்த புதுசுக்கு நாஸ்திகம் அடிப்படை: இல்லையா...? ஒண்ணு மட்டும் சொல்றேன் நீ என்ன தான் புதுசு பழசுன்னு பேசினாலும், என்னோட ஆஸ்திகம் எவ்வளவு பழசோ அவ்வளவு பழசு உன்னோட நாஸ்திகமும். ஆனா வழறதுக்கு மனுஷ ஜாதிக்கு, பெரிசா இப்பப் பேசறாளே கலாசாரம் கலை அது இதுன்னு, இதை எல்லாத்தையும் வளர்த்தது எங்கள் ஆஸ்திகம்தான். அப்பவும் யாரோ சில தனி மனுஷ்ய அறிவாளிகள் தான் நாஸ்திகம் பேசிண்டிருந்தா, ஜனங்கள் எப்பவுமே ஒத்துக்கலை. அதனாலே தான் சமூகம் வளர்ந்தது. ஜனங்களே நாஸ்திகத்தை ஒத்துண்டான்னா லோகமே குட்டிச்சுவர்தான். அதனாலே இந்த நாஸ்திகத்தை எதிர்த்து லோகத்தைக் காப்பாத்தணும்..." என்று சர்மா குரலை உயர்த்திப் பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கும்போது உள்ளேயிருந்து குண்டுராயர் வந்தார்.

“ஸ்வாமிகளே! அங்கே உங்க பொண்ணு போஜனமெல்லாம் ரெடி பண்ணிட்டு அப்பாவைக் காணமேன்னு காத்திண்டிருக்கா. இன்னுமா உங்க தர்க்கம் முடியலே?” என்றார் ராயர்.

"என்னைக்குமே முடியற தர்க்கமில்லே ஐயா இது" என்று எழுந்து உள்ளே போனார் சர்மா.

சர்மா போனதும் குண்டுராயர் அம்பியிடம் விசாரித்தார்:

"என்னடா அம்பி சர்மா என்ன சொல்றார்? அவர்கிட்டே போயி உன் கம்யூனிஸத்தை அவிழ்த்து விடுவியா?”

"இல்லேண்ணா, அவர் பெரிய மேதை! - ஞானக் கடல்!” என்று புகழ்ந்தான் சேஷாத்திரி.

"போடா போடா நான் அதைக் கேக்கலே. விவாதம் பண்ணி வேலை தர்த்தைக் கெடுத்துண்டியோன்னு கேட்டேன்.”

"அவர் அந்த மாதிரிக் குணங்களையெல்லாம் கடந்துட்டவர்...” “அந்தவரைக்கும் சரி. இன்னம் எதுக்கு அந்த ஹோட்டல்லே பொட்டியும் படுக்கையும் வெச்சிருக்கே, அவன்தான் வெரட்றான்னு அழுதியே! சாயங்காலமே போயி உன் சாமான்களை எடுத்துண்டு இங்கே வந்துடு. "பாவம், தாய் தகப்பனில்லாத பையன். நம்ம ஆத்திலேயே இருக்கட்டுமேன்னு சொல்றா, மாமி... விஷயம் என்ன தெரியுமோ? அவளுக்குப் பக்கத்திலே வெச்சுண்டு கொஞ்சறதுக்குப் புள்ளையோ குட்டியோ ஒண்ணுமில்லியோன்னோ? அதுக்குத்தான் உன்னை வந்துடச் சொல்றா" என்று ராயர் கண்களைச் சிமிட்டிச் சிரித்தவாறு சொல்வதைக் கேட்டு, “உங்காத்திலேயா?” என்று இழுத்தான் சேஷாத்திரி.

"என்னடா, உங்காம்... எங்காம்? நம்ம வீடுதானே இது... வா வா, உங்க மாமி இலை போட்டுட்டா" என்று சேஷாத்திரியைத் தோளில் கை போட்டு உள்ளே இழுத்துச் சென்றார் குண்டுராயர்.

*****

# 3

சேஷத்திரி, ராயர் குடும்பத்தில் ஓர் அங்கத்தினனாயும், சர்மாவின் சமையற்கார கோஷ்டியில் ஒருவனாயும் சேந்து இப்பொழுது மூன்று மாதத்திற்கு மேலாகிறது.

கல்யாண சீசன் முடிந்த பிறகு முன்போல் மாதத்தில் அதிக நாள் வேலை இல்லை எனினும் சேஷாத்திரிக்கு எப்போதும் ஒய்வு ஒழிச்சல் கிடையாது. அவனுக்குச் சங்க வேலைகளும், கட்சி வேலையும் வாழ்க்கையின் லட்சியம் போல இரவென்றும் பகலென்றும் பாராமல் அதில் முனைந்து கிடப்பான். சதா நேரமும் படிப்புதான். இரவில் திண்ணையின் மீது சர்மா வீட்டு அறைச் சன்னலுக்கு நேராகத்தான் அவனுக்கு படுக்கை. அப்பொழுதும் கூடத் தெருவிளக்கு வெளிச்சத்தில் வெகு நேரம் வரை படித்துக் கொண்டு ஒரு பைண்டு நோட்புக்கில் குறிப்பெடுத்துக் கொண்டும் இருப்பதைப் பல சமயங்களில் சர்மா கவனிப்பார். சதா நேரமும் மைத்ரேயி கவனித்துக் கொண்டேயிருப்பாள்.

மைத்ரேயி தான் பிறந்த கொள்ளிடக்கரை கிராமத்திலேயே வாழ்ந்திருந்தால் எவ்விதம் வளர்ந்திருப்பாளோ அவ்விதம்தான் சென்னையிலும் வளர்ந்திருந்தாள். கங்காபாயின் துணையோடு மாலை நேரங்களில் கோயிலுக்குப் போய் வருவதைத் தவிர அவளுக்கு வெளியுலகமே பார்வைக்குத் தெரியாது. அறிவாலும் மனத்தாலும் உலகத்தை ஓரளவு அளந்துகூட வைத்திருந்தாள். கங்காபாய் அவளுக்குப் புத்தகங்களும் பத்திரிகைகளும் கொணர்ந்து தருவாள். வீட்டுக்காரிகங்களுக்கு உதவியாகக் கடைக்கோ காய்கறி வாங்கவோ போவதெல்லாம் ராயர் மனைவிதான்.

காலையில் சர்மாவுக்கு முன் மைத்ரேயி எழுந்து அவரை போலவே ஆசாரத்துடன் குளித்து முழுகி, அவருக்கு வேண்டிய அநுஷ்டானங்களுக்காக தண்ணீரும் திருநீறு சம்புடமும் தயாராக எடுத்து வைத்திருப்பாள். அவரது

பசிநேரம் அறிந்து "ஆச்சா?" என்று அவர் கேட்பதற்கு முன் "அப்பா வாங்கோ" என்று அவள் அழைத்து நிற்பாள்.

அவரது அறிவும் லட்சியமும் அவளுக்குப் புரிந்ததோ என்னவோ, அவரது ஆசாரங்களும் கட்டுப்பாடும் அவளுக்கு மிகவும் பிடித்தது. அது மிகவும் உயர்வு என்ற நம்பிக்கையால் அவள் ஒரு வைதீகப் பிராமணரின் புத்திரி எவ்விதம் இருக்க வேண்டுமோ அவ்விதமே திகழ்ந்தாள். வயசு ஆக ஆக அதுவும் இப்பொழுது கொஞ்ச நாளாக கங்காபாய் சொல்லும் - "இந்த மனுசன் ஒரு பத்தாம் பசலியாகவே இருக்காரே..." இப்படி இருந்தா இந்த லோகத்திலே என்னடிம்மா ஆகும். கிளியாட்டமா ஒரு பெண்ணையும் குடுத்து மனுஷனுக்கு இப்படி ஒரு புத்தியையும் கொடுப்பானோ பகவான்! 'என்ற வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டும், தன் தந்தையின் அசைக்கவொண்ணா உறுதிமிக்க அபிப்பிராயங்களை நேரில் பயத்துடன் கேட்பவர்கள் கூடப் பின்னால் போய் "மனுஷன் இந்த லோகத்துக்கு லாயக்கில்லே" என்று பேசும் அலட்சியமான பரிகசிப்பைப் பார்த்தும் கேட்டும் உலகத்தில் தன்னையொத்த பிராமணப் பெண்களின் நடவடிக்கைகளைக் கண்டும் உணர்ந்தும், சர்மாவின் லட்சியங்கள் மீது அவளுக்கிருந்த பிடிப்பு சற்றே நழுவி, 'அப்பாவின் போக்கால் தன் வாழ்க்கை என்னவாகுமோ?' என்ற அச்சமும் உருவாக ஆரம்பித்தது அவளுள்.

இந்த சமயத்தில்தான், யாருமே துணிந்து பேசவோ விவாதிக்கவோ விரும்பாத தன் தந்தையிடம் மிகவும் மரியாதையுடன் அவரது அபிப்பிராயங்களை மறுத்துப் பேசிக் கொண்டிருந்த சேஷாத்திரியைக் கண்டபோது அவனது துணிவும் அவன் கூறிய வாதங்களில் இருந்த நியாயமும் அவள் மனசுக்குப் பிடித்தன. எனினும் அவன் தன்னை ஒரு நாஸ்திகன் என்று சொல்லிக் கொண்டதும், சர்மா அவனை 'நாஸ்திகனான நீ பிராம்மணனாக முடியாது' என்று கூறியதும் அவளுக்கு வேதனையளித்தன.

ஓடித் திரியும் குழந்தையாக இருந்த காலத்தில் அனுபவித்த தந்தையின் பாசத்தைத் தவிர, வளர்த்த பாசத்தை எண்ணி

அவர் மீது மைத்ரேயி பாசம் கொண்டிருந்தாளே - யல்லாமல், இப்பொழுது அவர் பொறுப்பற்று, தனக்கு வயது வந்த பெண் ஒருத்தி இருக்கிறாள் என்ற பிரக்ஞையே இல்லாதிருக்கிறாரே என்ற நினைவில் உள்ளூரத் தந்தையிடம் மனஸ்தாபம்தான்.

அவள் மனம் ஒரு தனி உலகம். அதில் ஏற்படும் சலனங்கள் வெளியே தெரியாது. பெண்ணின் மனத்தில் ஏற்படும் கொந்தளிப்புக்களையும், தினந்தோறும் பூத்துப்பூத்து மணம் வீசி, ஏறெடுத்துப் பார்ப்பார் இல்லாமையினால், வாடி வாடி உதிரும் உள்ளத்தின் பூச்சிதறலும், உதிர்ந்த உலர்ந்த பூக்களே சேர்ந்து இதயம் முழுவதும் கனத்து, இன்னும் நூறு கனவுகள் அதிகம் பூக்க எருவாவதும், பூத்த மலர்களின் வெறிமிக்க மணம் வெளியே போக முடியாது தடைவிதித்து, உள்ளடைத்து, அந்தப் போதையில் கிறங்கிக் கிறங்கித் தவிக்கும் அந்த வேதனையும் – ‘இந்தத் தனிமை வாழ்வுக்கோர் விடிவே இல்லையா?' என்ற பிரமிப்பில் நாளுக்கு நாள் பெருகும் - அந்தத் துயரமும் மைத்ரேயியின் கண்கள் என்ற ஹிருதய மாளிகையின் சாளரத்தின் வழி நோக்குபவர்க்குப் புரியும். ஆனால் பெண்மையின் குணநலன்களால் சித்தி வேலை செய்த, மருட்சி நாணம் போன்ற திரைகள் விலகி சாளரத்தினூடே காட்சி தெரிவது துர்லாபம். ஆனால் அதிர்ஷ்டவசமாகவோ விதிப்பயனாலோ அன்று சேஷாத்திரி அவள் கண்களை நேருக்குநேர் சந்திக்கும் பாக்கியம் பெற்றபோது அவளது மன இருளில் வரைந்திருந்த ஓவியங்களை உணர்ந்தான். சர்மாவைப் பார்க்கும் போது அவருக்கு மகளாக வாய்த்த இவளை அவர் எவ்விதம் வைத்திருப்பார் என்பதை அவனால் உணர முடிந்தது. அதன் பின்னும் சில சமயங்களில் அவளது திக்கற்ற தனிமைக்குத் தான் என்ன செய்ய இயலும் என்று அவன் சிந்தித்ததுண்டு. ஆயினும் என்ன? பொது வேலைகளிலும் அரசியல் ஞான போத நூல்களிலும் அமிழ்ந்து கிடந்த அவன் சிந்தனை பரந்த உலகத்தையும் எண்ணற்ற பாமரர்களையும், உழைப்பாளி வர்க்கத்தையும் பற்றிப் பொறுப்போடு தேசபக்தி உணர்வோடும் ஆராய்ந்து கொண்டிருக்கையில் இந்த ஒரு

தனிப்பட்ட பெண்ணுக்காகப் பெரிதும் சிரமம் கொள்ள அவனுக்கு நேரமில்லை......

அப்படி அவன் என்னதான் செய்திருக்க முடியும் அவளுக்கு?

ஆனால் மைத்ரேயி, சேஷாத்திரியின் பார்வையில் தானோ தன் பார்வையிலே அவனோ பட நேரும்போதெல்லாம் ஒரு புதிய உணர்ச்சிக்கு ஆளானாள். சமயங்களில் இவருடைய விழியொளியும் ஓடிப்பாய்ந்து ஒன்றினில் ஒன்று மோதிக் கவ்வும்போது சர்வாங்கமும் சிலிர்க்க, அவளது பார்வை அவன் முகதரிசனத்தால் திடீரெனத் தான் மூர்ச்சையானதே போன்று அவன் பாதங்களில் வீழ்ந்து எதையோ யாசிக்கும்.

அவனுக்கும் அது புரியும். அது அவனுக்குப் புரிகிறது என்று அவளுக்கும் தெரியும். இந்த மூன்று மாதங்களில் இரண்டு நெஞ்சங்களும் சேர்ந்து பார்வையால் பின்னிப் பின்னி வளர்த்த அந்த வலையினில் தாங்கள் இருவருமே விடுபட முடியாத அளவுக்குச் சிக்கிக் கொண்டதையும் தூரத்தே பிரிந்திருந்தும் விலக முடியாமல் விழுந்து பிடித்துக் கொண்ட ஏதோ ஒரு உறவில் கட்டுண்டு கிடப்பதையும் இருவருமே உணர்ந்தனர். இருந்தபோதிலும் இன்னும் அவர்கள் இருவரும் பரஸ்பரம் ஒரு வார்த்தை கூடப் பரிமாறிக் கொண்டதில்லை.

அன்று பகலெல்லாம் சேஷாத்திரியைக் காணாமல் ஏங்கும் கண்களோடு இரவு வெகுநேரம் ஆகும் வரை - சன்னலுக்கு நேரே திண்ணையில் படுக்கை விரிக்க அவன் வருவதைக் காணக் காத்திருந்து காணாமல் - ஏமாந்து உறங்கிப் போனாள் மைத்ரேயி.

திடீரெனக் கனவில் விளைந்த அவன் நினைவால் கண் விழித்த மைத்ரேயி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள்; சர்மா படுத்திருக்கும் அறையின் இருளைக் கடந்து, சன்னலுக்கு அப்புறம் அவள் பார்வை நீண்ட போது, திண்ணையின் மீது விரித்த படுக்கையில் உட்கார்ந்து என்னவோ எழுதிக் கொண்டிருந்த சேஷாத்திரியின்மேல் அவள் கண்கள் நிலைத்தன.

இந்த நடுராத்திரியிலே என்ன படிக்கிறார்...! மணி என்ன இருக்கும்...? ரெண்டோ, மூணோ...? என்று அவள் மணம் முனகியது. அறை மூலையில் சுடர் குறைந்து நீல மணிபோல் எரிந்து கொண்டிருந்த 'பெட்ரூம் லைட்'டை நகர்த்தி ஒளி கூட்டினாள். பிறகு எழுந்து போய் செம்பிலிருந்து தண்ணீர் குடிக்கும்போது அண்ணாந்த முகத்தில் விரிந்த விழிகள் இரண்டும் கீழ் இறங்கித் திண்ணையையே பார்க்க, இங்கு ஏற்பட்ட சலனத்தால் எழுதுவதை விடுத்து அவனும் உள்ளே பார்த்துக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது.

மீண்டும் வந்து படுக்கையில் அமர்ந்த மைத்ரேயிக்கு வெளிச்சத்தைக் குறைக்கவோ உறக்கம் கொள்ளவோ மனம் வரவில்லை. படுக்கையில் கவிழ்ந்து படுத்து முகத்துக்கு நேர விளக்கை இழுத்து வைத்துக் கொண்டாள். அருகிலிருந்த ஒரு புத்தகத்தை விரித்துக் கண்களுக்குக் கீழே பிடித்துக் கொண்டு சன்னலையே பார்த்தாள்.

'ஆ! எவ்வளவு பெரிய கண்கள்!' சன்னல் கொள்ளாமல் இந்த இரண்டு விழிகளும் பேரொளியாகப் பரந்து விரிந்து வந்து தன்னைத் தழுவி...

'அந்த உதடுகளின் அசைவுதான் எவ்வளவு அழகாக இருக்கு...!' என்று பெருமூச்செறிந்தான் சேஷாத்திரி.

சற்று நேரத்திற்குப் பின், அவனைப் பற்றியும் தன்னைப் பற்றியும் எண்ணிப் பார்த்த மைத்ரேயி, தன் தந்தையின் நினைவு வரும்போது - தன் ஆசை நிறைவேறுமா என்று யோசிக்காமல் இவ்விதம் கற்பனைகளை வளர்த்துத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் பேதமையை நினைக்க. அவள் பெரிய விழிகளில் நீர் சுரந்தது. அவன் அதைக் கவனிக்காதிருக்கும் பொருட்டு, இமைகளை மூடிக் கண்களைத் தாழ்த்தினாள். பிறகு அதுவும் பயன் தராது என்று அறிந்து விளக்கின் சுடரைக் குறைத்து இருளாக்கி விட்டுத் தலையணையில் முகம் புதைத்து விம்மினாள். அப்பொழுது அவள் அதிர்ச்சியுறத் தக்க காரியம் ஒன்று நடந்தது. அவன் தன் பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை

எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு மீண்டும் தனது எழுத்து வேலையை ஆரம்பித்தான். 'தூக்கத்தைப் போக்கிக் கொள்ள இப்படி ஒரு கெட்ட பழக்கமா... என்னதான் எழுதுகிறாரோ?' என்று மனம் நைந்தாள் மைத்ரேயி.

மறுநாள் காலை...

குண்டுராயர் குடியிருக்கும் பின்பகுதியில் உள்ள முற்றத்தில் ஒரு ஸ்டூலில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் சேஷாத்திரி. கங்காபாய் அவனுக்கு முன்னுள்ள சன்னல் விளிம்பில் காப்பியை ஆற்றி வைத்து விட்டு உள்ளே போனாள். ஏதோ கை வேலையாய்க் கொல்லைப்புறம் வந்த மைத்ரேயி தூரத்தில் நின்று அவனைப் பார்த்தாள். அப்போது வேட்டிமுனையை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு தாவடமாய்ப் போட்ட பூணூலைக் காதில் செருகி, கையில் செம்பு ஜலத்துடன் முற்றத்தைக் கடக்கப் போன குண்டுராயர் சேஷாத்ரியை நோக்கிக் கை நீட்ட அவன் தன் சட்டைப் பையிலிருந்து சிகரெட் பெட்டியையும் தீப்பெட்டியையும் எடுத்து அவர் கையில் தருவதையும் கவனித்தாள் மைத்ரேயி.

தலை நிமிர்ந்து அவளைப் பார்த்த சேஷாத்திரி. அவளது கண்கள் சிவந்து வீங்கி இருப்பதைக் கண்டு இரவு நடந்ததை எண்ணி "ராத்திரி தூக்கமில்லே போலிருக்கு"! என்று முதன் முறையாக அவளிடம் பேசினான். அவன் தன்னை நேருக்குநேர் கண்டு, எதிர்பாராத விதமாய்ப் பேசிய அதிர்ச்சியினால் அவள் கண்கள் மட்டுமல்லாமல் முகமே சிவந்தது. அப்போது வெளியே வந்த கங்காபாயைப் பார்த்துப் பதில் சொன்னாள் மைத்ரேயி; “நான் என்ன மத்தவா மாதிரி ராத்திரியும் பகலுமான தூக்கம் முழிச்சு உடம்பைக் கெடுத்துண்டு உலகத்துக்கு உழைக்கிறவளா? நன்னாத்தான் தூங்கினேன்!” என்று சொல்லவும் கங்காபாய் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்து, முகத்தில் ஒரு குறும்புச் சிரிப்புடன் சொன்னாள்; "ஆமா... அவனுக்கு என்ன குடும்பமா கட்டா? கால்லே ஒரு கட்டு விழற வரைக்கும் இப்படித்தான் கட்சின்னும்

மீட்டிங்குன்னும் சுத்திண்டிருப்பான்..." என்று தனது தொளதொளத்த கையை நீட்டி நீட்டிப் பேசினாள்.

"அது சரி மாமி... ராயர் மாமாகூட அந்தக் கட்சி தானா?” என்று நைஸாகக் கேட்டாள் மைத்ரேயி.

"ஆமாண்டி அம்மா, அவருக்குக் கட்சி ஒண்ணுதான் கொறைச்சல்!” என்று குழாயடியில் இருந்த குடத்தை எடுத்து 'பொத்’தென இடுப்பில் இருத்திக்கொண்டு உள்ளே போனாள் கங்காபாய்.

"இல்லை; அவரும்கூட சிகரெட் பிடிக்கிறார் போல இருக்கேன்னு கேட்டேன்." என்று விஷயத்தை உடைத்தாள் மைத்ரேயி.

"ஏன், சிகரெட் பிடிக்கிறது அவ்வளவு பெரிய தப்பா? என்று மெல்லிய குரலில் நெருங்கி நின்று பேசத் தகுந்த த்வனியில் - கேட்டான் சேஷாத்திரி.”

"உங்க கட்சியிலே சிகரெட் பிடிக்கத்தான் வேணும்னு ஏதாவது நிபந்தனையோ?”

அதற்கு பதில் சொல்லுமுன் அவன் சிரித்தான். “பிடிக்கக் கூடாதுன்னு நிபந்தனை இல்லை, அவ்வளவு தான்...”

"நடுராத்திரியிலே முழிச்சிண்டு பார்த்தா, திண்ணையிலேருந்து ஜன்னல் வழியா, 'குபுகுபு’ன்னு ஒரே புகை: ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் எதுக்கு கண் முழிக்கணும்?”

"நேத்து ராத்திரி ஹோட்டல் தொழிலாளர்கள் சங்கத்திலே ஜெனரல்பாடி மீட்டிங்... வர நாழியாயிடுத்து. அதோட தீர்மானங்களையெல்லாம் காப்பியெடுக்க வேண்டியிருந்தது... தூக்கம் வர்ர போது சிகரெட் குடிச்சா."

"ஆமா நீ இப்பிடி அசுத்த பிராம்மணனா இருந்தா எப்படி அவ அப்பா பொண்ணை உனக்குத் தருவார்...?" என்று அவர்கள் மனநிலையறிந்த கங்காபாய் அவனைக் கண்டிப்பது போல குரலைத் தாழ்த்தி அவனிடம் வந்து கேட்டாள்;

"போங்கோ மாமி" என்று திரும்பினாள் மைத்ரேயி... “நீங்க நெனைச்சிண்டிருக்கேளா... அவ அப்பா, அவரை மாதிரி ஆசாரமா இருக்கிற ஒரு பிராமண்ணுக்குத்தான் தன் மகளைக் கொடுப்பார்...” என்று சேஷாத்திரி கூறும்போது திரும்பிப் பார்த்த மைத்ரேயியின் கண்கள் கலங்கியதை அவன் கண்டான்.

"மைத்ரேயி...” என்று அவன் மனம் பதைத்து, உதடுகள் சப்தமில்லாமல் அவளை அழைத்தன. அவள் அங்கிருந்து ஓடிப்போனாள்...

"ஆமா... போகச் சொல்லு அந்தப் பிராமணரை. என்னவோ இவளைப் பெத்த புண்ணியவதி அல்பாயுசா போயிச்சேர்ந்தா... இல்லேன்னா இவர் இந்தப் பொண்ணை வெச்சிருக்கும் லட்சணத்தைப் பார்த்தாலே தெரியறதே, அவளை எவ்வளவு பொறுப்போட கவனிச்சிருப்பார்னு: இவரை மாதிரியே ஒருத்தனுக்கு இவளையும் பண்ணி வெச்சுட்டா விடிஞ்சு போகும்!” என்று கங்காபாய் சலிப்புடனும் எரிச்சலோடும் சொன்ன வார்த்தை தன் வீட்டுக்குள் வந்து நுழைந்த மைத்ரேயியின் காதுகளில் விழுந்தன.

ஹிருதயத்தின் மடை திறந்து கொண்டது போல் அவளுக்குக் கண்ணீர் பெருகிற்று.

*****

# 4

மயிலாப்பூரில் ஒரு தனவந்தர் வீட்டு விருந்துக்குப் பரிசாரகராகத் தனது பரிவாரங்களுடன் போயிருந்த சர்மா வேலை முடித்துக் கூலி வாங்கித் தனது வேலையாட்களுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்து முடித்துத் திரும்புவதற்குள் சந்தியா காலம் நெருங்கி வரவே கபாலீஸ்வரர் கோயில் களத்திற்குச் சென்று குளித்து முழுகிச் சந்தியா வந்தனாதிகளை முடித்து கரையேறிக் கோயிலுக்குள் நுழைந்தார்.

ஸ்வாமி தரிசனம் முடிந்து கோயில் பிரகாரத்தில் வந்து சற்று நேரம் நிஷ்டையில் அமர்ந்தார் சர்மா.

திடீரென, தேவநாதம் போல் லயமிகுந்த மானுடக் குரல் கோயில் பிரகாரத்துக் கருங்கற் சுவர்களில் மோதிக் கனம் பெற்று எதிரொலிப்பதைக் கேட்டு மெய்சிலிர்த்துக் கண் திறந்தார் சர்மா.

அந்தக் குரல்...

"அரியானை, அந்தணர்தம் சிந்தனையானை...

குரல் வந்த திக்கை நோக்கி நடந்தார் சர்மா, மேலப் பிரகாரத்திலிருந்து வந்து வடபுறம் திரும்பிய சர்மா, அந்தக் கடையில் சுகாசனமிட்டு, மார்பின் மேல் கைகளைக் குவித்து, கண்களை மூடி, நெற்றியில் திருநீறும் கட்டுக் குடுமியுமாய், பிரம்ம தேஜஸ் ஒளிவிடும் வதனனாய் அமர்ந்து இறைவன் துதிபாடும் இருபது வயது மதிக்கத்தக்க ஓர் உருவத்தைக் கண்டார். அவன் அருகே வந்து, எதிரில் கண்களை மூடி அமர்ந்தார்.

**... "கரியானை நான்முகனைக்**

**கனலைக் காற்றைக்**

**கனைகடலைக் குலவரையைக்**

**கலந்து நின்ற**

பெரியானை..."

“கனலை காற்றை. கனைகடலை...” என்று ஒவ்வொரு பதத்திற்கும் ஒரு அழுத்தமும் நிறையும் தந்து அவன் பாடும் போது மூடிக்கிடந்த சர்மாவின் விழிகளுக்குள் ஒவ்வொரு சித்திரம் விரிந்து இவற்றுக்கெல்லாம் காரணனான இறைவனின் தோற்றமும் அவற்றின் மீது பிரதிபிம்பம் செய்து கொண்டிருந்தது.

தன்னை மறந்து தான் இருக்கும் சூழ்நிலையை மறந்து பாடுகின்ற குரலுக்குரியவனை மறந்து! அந்த நாதத்தையே யாகமாய் உபாசித்துக் கொண்டு எவ்வளவு நேரம் இருந்தாரோ...

பாடிக் கொண்டிருந்தவன் கண் திறந்து எதிரே அமர்ந்து யோகத்தில் இருக்கும் பிராமணரின் கோலத்தைக் கண்டு "ஸ்வாமி என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று சாஷ்டாங்கமாக அவர் முன் விழுந்து வணங்கினான். அப்பொழுது கண்விழித்த சர்மா அவனைப் பார்த்து, "எனக்குத் தெரியும், பிராம்மண தர்மத்தை அனுசரித்து வாழும் அந்தணர்கள் நிறையவே இருக்கிறார்கள்... உன் வயதை உத்தேசித்து உன்னை ஆசீர்வதிக்கிறேன். எழுந்திரு...” என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது நிமிர்ந்தெழுந்த அவனது மார்பில் யக்ஞோபவீதம் இல்லாதது கண்டு திகைத்தார்.

'மன்னிக்க வேண்டும்; நான் அந்தணனல்ல, சில ஆண்டுகளுக்கு முன் மாடவீதியில் தேவராப் பாடசாலை நடத்திக் கொண்டிருந்த சொக்கலிங்க ஓதுவாரின் மகன்... என் பெயர் சதானந்தன்’ என்றான் அவ்விளைஞன்.

"சதானந்த ஓதுவார் என்று சொல்" என்று அவனைத் திருத்தி தான் அவனைத் தவறாக முதலில் கணித்ததை மாற்றிக் கொண்டார் சர்மா.

"உனக்கென்ன தொழிலோ...?”

"தொழிலா? சிவனின் புகழ் பாடுவதும், மற்றவர்களைப் பாடவைப்பதும் தான். என் தகப்பனாருக்குப் பின் அந்தப்

பாடசாலையைத் தொடர்ந்து நடத்த நான் பெரிதும் முயன்று பார்த்தேன். மாணாக்கர்களும் வரவில்லை; பணம் தந்து ஆதரித்தவர்களும் தொடர்ந்து உதவ முன்வரவில்லை. 'சைவமும், தமிழும் தழைக்க உழைப்பதுதான் நம் தொழில்' என்று என் தந்தையார் எனக்குச் சொல்லி இருக்கிறார்கள்; என்ன செய்வது? தமிழையும் சிவனையும் பாடுவதால் நான் பட்டினி கிடந்து இறந்துபடத்தான் வேண்டுமென்றால் அவ்விதச் சாவையே ஒரு 'பேறா'ய்க் கருதுவேன்." - அவன் இலக்கண சுத்தமாய்ப் பேசினான். அவன் பேச்சைக் கேட்கும்போது சர்மாவுக்கு மனசை என்னவோ செய்தது, ஆ... இது ஒரு பிராமணன் பேசத் தகுந்த பேச்சல்லவா...?' என்று வாய்விட்டு வியந்தார்: "ஏன், எதற்குப் பட்டினியால் சாக வேண்டும்?" என்று பதைத்தார் சர்மா.

அவன் தன் கழுத்தில் சிவப்புக் கயிற்றில் கோத்துக் கட்டிய ருத்ராக்ஷத்தை நெருடியவாறு தொடர்ந்து சொன்னான்: "என் தகப்பனார் என்னை ஆசாரமான வாழ்க்கை நடத்தப் பழக்கப்படுத்திவிட்டதால் கிடைத்த இடத்தில் வயிற்றை நிரப்பிக் கொள்ள மனம் வரவில்லை. கிடைத்ததைக் கொண்டு நானே சமைத்துத்தான் சாப்பிடுவது வழக்கம். இல்லாவிட்டால் கோயில் தரும் பிரசாதம்..."

"நீ இன்று என்னோடு என் வீட்டுக்கு வந்து சாப்பிட வேணும்... உன்னைப் பார்த்ததிலே எனக்கு பரம சந்தோஷமாயிருக்கு... வரலாமோன்னோ?" என்று அவர் அவனை அன்புடன் அழைக்கவே அவருடன் சதானந்தன் புறப்பட்டான்.

கோயில் வாசலிலிருந்து வெளியே வரும்போது எதிரேயிருந்த வெற்றிலைப் பாக்குக் கடை அருகே குண்டுராயரும், சேஷாத்திரியும் வாயில் சிகரெட் புகையுடன் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட சர்மா திகைப்பும் கோபமும் கொண்டார்.

"அவன்தான் நாஸ்திகன்... இந்த ராயனுமா?" என்று வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார்.

அவன் நாஸ்திகன், இவன் ஒரு ‘ரெண்டுங்கெட்டான்' என்று தன்னுள்ளேயே சமாதானம் கூறிக்கொண்டு தெருவெல்லாம் சதானந்தத்திடம் பிராமண தர்மத்தின் பெருமைகளையும், அது மதிக்கப்படாத நிலையையும் குறித்துப் பிரலாபித்தவாறே வழி நடந்தார் சர்மா.

வீட்டிற்கு வந்ததும் சதானந்தனை முற்றத்திலுள்ள குழாயில் கைகால் அலம்பிக் கொண்டு வரச் சொன்னார். பிறகு உள்ளேயிருந்த மகளிடம், "வந்திருக்கும் பையன் பிராமணனில்லே; ஆனாலும், என்ன பக்தி! என்ன ஆசாரம்! இவனைப் பார்த்து நான் அழைச்சிண்டு வரும்போது, பிராமணன் வயிற்றிலே பொறந்த சேஷாத்திரியும் இந்த ராயனும் சிகரெட்டை ஊதிண்டு நிக்கறான்கள்... கர்மம் கர்மம்! கர்மம்!” என்று தலையிலடித்துக் கொண்டார். மைத்ரேயின் முகம் கறுத்தது.

கால் கை அலம்பி வந்த சதானந்தனை, அவன் என்ன தான் ஆசார சீலனாய் இருந்தபோதிலும் பிராமணன் அல்லாத காரணத்தால் முன்னறையிலேயே மணை போட்டு உட்காரச் சொல்லி மகளை அவனுக்கு உணவு பரிமாறச் சொன்னார் சர்மா.

“நீங்கள் சாப்பிடவில்லையா?” என்று வினவினான் சதானந்தன்.

"இல்லை; நான் இரவில் சாப்பிடுவதில்லை. பழமும் பாலும்தான்" என்று சொல்லிவிட்டுச் சற்றுத் தள்ளிக் கிடந்த விசிப் பலகையின் மீது அமர்ந்தார் சர்மா. சதானந்தன் சாப்பிடும்போது வாத்சல்யத்தோடு அவனைப் பற்றிய உயர்வான சிந்தனைகளின் வயப்பட்டிருந்த சர்மா கூறினார்:

"ஓதுவாரே சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொள். அப்பொழுதுதான் ஆசாரம் கெடாமல் நீ வாழமுடியும்" என்று சிரித்துக்கொண்டே மேலும் தொடர்ந்து சொன்னார். “ஏன்னா, நீ நல்ல பிரம்மச்சாரி. நல்ல பிரம்மச்சாரிதான் நல்ல கிருஹஸ்தனாகவும் இருக்க முடியும்... பிரம்மச்சாரின்னா கல்யாணம் பண்ணிக்காம

இருக்கிறவன் மட்டுமில்லே; 'பிரம்மத்தை 'ஸ்தோத்திரம் பண்ணிண்டு ருஷிக் கடன் தீர்க்கறவன்'னு தான்னு சாஸ்திரம் சொல்றது... இல்லாட்டா ஓட்டல்லேயும் கண்டவிடத்திலேயும் உனக்கும் எனக்கும் சாப்பிட முடியறதா...? என் சமையலைப் பத்தி எல்லாரும் புகழறதைக் கேக்றபோது எனக்குச் சிரிப்புத்தான் வரது, சமையல்னா என்ன புனிதமான காரியம்! என் பொண்ணு அந்த வெங்கலப் பானையைத் தங்கப் பானையாக்கி அடுப்பிலே ஏத்தி இறக்கும்போது, பயபக்தியோட கும்பிடுவா, அப்படி சமைக்கறதைச் சாப்பிடறதனாலதான் அது உடம்பிலே ஒட்டறது... மத்ததெல்லாம் என்ன கண்றாவி சமையல்! அங்கே நான் பண்ணற சமையலையும் சேர்த்துத் தான் சொல்றேன் - என்னமோ இரும்பை உருக்கி வார்க்கற தொழிற்சாலை மாதிரி - சமையல் செய்றவன் கொல்லன் பட்டறையிலே வேலை செய்றவன் போல் வேர்த்து வேர்த்துக் கொட்ட, ஒரு கையாலே வேர்வையை வழிச்சுண்டு. அந்தக் கண்றாவியைப் பார்க்கும்போது மனசை என்னவோ பண்றது, சோத்துப்பானை வாயிலே ஒரு கோணியைப் போட்டுக் கட்டி, சாக்கடை ஓரத்தலே உருட்டி விட்டுடுவான்கள் என்னவோ அப்பா அதெல்லாம் நமக்கு லாயக்கில்லை! என் மகள் சமையல்தான் எனக்குத் திவ்யம்...” என்று தன்னை அவர் புகழ்ந்து கொண்டே இருப்பது கண்டு, "போறும் சாப்பிடறவாளுக்குப் பதிலே நீங்களே எல்லாம் சொல்லிண்டிருந்தா? அவரை நன்னால்லேன்னாலும் ஒண்ணும் சொல்லாதீங்கோங்கிற மாதிரி இருக்கு. ஒரு விருந்தாளி வாரார்ன்னு முன்னாடியே சொல்லியிருந்தால் நானும் ஏதாவது தயார் பண்ணி இருப்பேன்' என்று அவர் வாயை அடைத்தாள் மைத்ரேயி

"அதுக்கென்ன கொழந்தை, அதிதின்னா இருக்கிறதை அன்போடு பகிர்ந்துக்கறவாதான். என்ன ஓதுவார். சாப்பாடு ரொம்ப மட்டமோ? பொண்ணு ஒரேயடியா பீடிகை போடறாளே" என்று சர்மா கேட்டபோது அவன் சுருக்கமாய்ப் பதில் சொன்னவாறே எழுந்தான்.

“சாப்பாடு, எளிமையாய்ப் புனிதமாயிருந்தது, ஸ்வாமிகளே...”

*****

# 5

சங்கரசர்மா சென்னைக்கு வந்த பதினைந்து ஆண்டுகளில் அவருக்கு ஏற்பட்ட குண்டு ராயரின் நட்புக்குப் பிறகு தன்னிலும் எத்தனையோ ஆண்டு இளையவனும் வேற்று ஜாதியைச் சேர்ந்தவனுமான சதானந்த ஓதுவாரோடு ஏற்பட்ட சினேகம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தித்த சில நாட்களிலேயே அவர்கள் ஒருவரையொருவர் சரியாகவும் நன்றாகவும் புரிந்து கொண்டனர்.

சதானந்தனுக்குச் சர்மாவின் நினைவு வரும் போதெல்லாம் சிரம் தாழ்ந்து மனம் அஞ்சலி செய்தது. அவர் சாதாரண, வெறும் பிராமணர் அல்ல. அவரை ஒரு மகா புருஷர் என்றும், தனக்கு வாழும் நெறி அறிவிக்க வந்த ஞானி என்றும் அவன் நம்பினான்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம், அவரைப் பார்க்க அவனோ, அல்லது அவனைப் பார்க்க அவரோ போய் விடுவது வழக்கமாகி விட்டது. சதானந்தத்துக்குத் தமிழ்ப் புலமை மட்டுமே உண்டு. ஸம்ஸ்கிருதம் தெரியாது. சர்மாவுக்கோ இரண்டிலும் ஆழ்ந்த பற்றும், ஸம்ஸ்கிருதத்தில் தேர்ந்த புலமையும் உண்டு. அவர் அவனோடு பேசும் போதெல்லாம் ஸம்ஸ்கிருத ஸ்லோகங்களையும் உபநிஷத்துக் கதைகளையும் அவனுக்குக் கூறி, விளக்கம் தெரிவிப்பார். அவரிடமிருந்த ஞானச் செல்வங்களைக் கண்டு குரு - சிஷ்ய பாவமில்லாது நட்புமுறையில் அவர் அவனோடு சம்பாஷித்த போதிலும் குருவினிடத்தில் பாடங் கேட்கும் ஒரு சிஷ்யனின் ஸ்தானத்தில் இருந்தே அவரிடமிருந்து அவன் விஷயங்களைக் கிரகித்துக் கொண்டான்.

அவர்களின் முதல் சந்திப்புத் தினத்துக்குப் பின் பல நாட்கள் அவனைத் தன் இல்லத்துக்கு அழைத்து வந்து உபசரிப்பதில் ஒரு மனச் சாந்தியும் நிறைவும் பெற்றார் சர்மா.

ஒரு வாரமாக சேஷாத்திரி ஊரில் இல்லை. வெளியூரில் என்னவோ மகாநாடு என்று சர்மாவிடம் தெரிவித்து உத்தரவு பெற்றுக் கொண்டுதான் போயிருந்தான். கங்கா பாய்க்கு அவன் இப்படி அதிகம் பொது வேலை நிமித்தமாக சுற்றிக் கொண்டிருப்பது பிடிக்கவில்லை. அவனைப் பொறுப்புடைய ஒரு குடும்பஸ்தனாக்க வேண்டியது தன் கடமை என்று என்ன காரணத்தினாலோ அவள் முடிவு செய்துவிட்டாள்.

அன்று காலை ஊரிலிருந்து அவன் வந்ததும் வராததுமாய்த் தனது உபதேசத்தை ஆரம்பித்தாள் கங்காபாய். வழக்கம்போல் முற்றத்தில் கிடந்த ஸ்டூலில் அமர்ந்து சேஷாத்திரி பேப்பர் படித்துக் கொண்டிருந்தபோது, அவனுக்குக் காப்பி ஆற்றிக்கொண்டு வந்த கங்காபாய் சொன்னாள்: “அம்பி, நான் சொல்றதைக் கேளு, இந்த மைத்ரேயி போலப் பொண் கெடைக்கறதுக்கு நீ குடுத்து வைக்கணும்... அப்பிடிப் பொண்ணு. சொல்லு; உனக்கு பேச வெக்கமா இருந்தா சர்மாவண்டை நான் பேசி முடிச்சுடறேன். உனக்கு அந்த எண்ணமே இருக்கறதா எனக்குத் தெரியலே... அந்தக் கூட்டம், இந்தக் கமிட்டின்னு நீ இப்படிச் சுத்தறதுனாலே தான் உனக்கு அந்த எண்ணம் இல்லே. இப்படியே வயசைக் கழிச்சுட்டியானா பின்னாலே வருத்தப்படணும். இப்படி அநியாயமாத் திரிஞ்சுண்டு உடம்பையும் கெடுத்துக்கறயே...” என்று குற்றம் சாட்டினாள்.

'தனக்கிருக்கும் எண்ணத்தையே புரிந்து கொள்ளாத இவள், அவளது எண்ணத்தை எங்ஙனம் அறிந்திருக்க முடியும்' என்று எண்ணிய சேஷாத்திரி "அது சரி மாமி, இதுக்கு என்னோட எண்ணம் மட்டும் போதுமா? மைத்ரேயி மனசு இப்படி இருக்குமோ...” என்று சொல்லிக் கொண்டான்.

“அட, அசட்டுப் பிள்ளை! இவ்வளவு தானா நீ? அவ மனசைக் கழட்டித் தாம்பாளத்தில் வெச்சு உன்னண்டை கொண்டு வந்து நீட்டினாத்தான் நீ நம்புவியோ? போ, போ, கொழந்தை இந்த ஒரு வாரமா நீ ஊர்லே இல்லாதப்போ என்னமா தவிச்சுண்டிருந்தா! இங்கே வரும்போதெல்லாம் நீ அவ

அப்பாவண்டே பேசினதைப்பத்தி, ராத்திரியெல்லாம் நீ படிக்கிறதெப்பத்தி, ஏழுதறதெப்பத்தி - ஏதாவது உன்னைப் பத்திப் பேசிண்டேதான் இருந்தா... எனக்கு அவ மனசு புரிஞ்சுடுத்து;' உன்னைத்தான் புரியலை இல்லாட்டா நீ ஊர்லேருந்து வர்ரதுக்குள்ளே நானே அவ அப்பாகிட்ட பேசி இருப்பேன்."

தன் மீதுள்ள அன்பை இவ்வளவு வெளிப்படையாக அவள் காட்டிக் கொண்டதைக் கங்காபாய் கூறக் கேட்டு உள்ளில் விளைந்த ஒரு சிலிர்ப்புடன் அவன் சொன்னான்.

"சரி மாமி, எனக்குச் சம்மதம்; நீங்க அவர்கிட்டே போயிப் பேசிப் பாருங்க. ஆனா, ஒண்ணு... நான் ஒரு காரியத்தை சாதிக்கணும்னு முடிவு பண்ணினா அந்தக் காரியத்தை முடிக்காமல் இருக்கமாட்டேன். அவ அப்பா எங்கேயாவது மானத்திலே நின்னுண்டு வேதாந்தம் பேசி 'முடியாது'ன்னாலும், இந்தக் கலியாணம் நடக்கும். அப்போ நீங்க கைவிட்டுடப்படாது" என்று தன்னுள்ளிருக்கும் உறுதியை வெளிக்காட்டினான் அவன்.

"நன்னாச் சொன்னே அம்பி! நானும் அப்பிடித்தான் நெனச்சேன். அந்தக் கிறுக்குப் பிராமணன் ஏதாவது உள்றிண்டு ஒரு பொண்ணைப் பாழ்பண்றது. நாம் காரியமெல்லாம் பண்ண ஆரம்பிச்சுட்டா, கடைசியிலே தானா நம்ப வழிக்கு வந்து சேர்ந்துடும். நாம் செய்றதை சாஸ்தி ரோக்த்தமா பின்னாடி ஆசாரக் குறை சொல்லாம பண்ணிடணும்... ஆமா, உனக்கு ஜாதகம் இருக்கோ?"

"எனக்கேது மாமி, சாதகமும் பாதகமும்...?"

"அப்படிச் சொல்லக்கூடாது... உனக்கு நம்பிக்கையில்லாட்டாலும் அவ அப்பா அதனாலே ஒரு குறை சொல்லப் படாது... பாரு. பொறந்த தேதியை குறிச்சு என்கிட்டே குடு. கூடத்தாத்து சாஸ்திரி மாமாகிட்டே கொடுத்து ஜாதகம் கணிச்சுப் பொருத்தம் பார்க்கச் சொல்றேன்" என்று அவள் வற்புறுத்தவே அவனும் ஒப்புக் கொண்டான்.

“அம்பி, பாத்ரூம் காலி... போயிக் குளிக்கலாம்...” என்று குளிக்கும் அறையிலிருந்து இடுப்பில் கட்டிய ஈர அரைத் துண்டுடன் சொட்டச் சொட்ட ஓடிவந்த குண்டு ராயர் கங்காபாயின் எதிரே நின்று "துண்டு குடுடி, துண்டு! குளிக்கப் போகும்போது கொண்டு போக மறந்துட்டேன்...” என்று வெடவெடத்தார்.

“குழந்தைதான்!” என்று சிரிப்பை மறைக்கும் கோபத்துடன் துண்டை இழுத்து அவர் முகத்தில் போட்டாள் கங்கபாய்.

அன்று மத்தியானம் முன்னறையில் விசிப்பலகையின் மீது அமர்ந்து வேதாந்த ஆராய்ச்சியில் ஒரு கட்டுப் புத்தகங்களின் நடுவே லயித்திருந்த சர்மாவிடம் "என்ன சர்மா உன்னண்டை ஒரு விஷயம்னா பேசணும்னு வந்திருக்கேன்" என்று சொல்லிக்கொண்டே வாசற்படியருகே வந்து உட்கார்ந்தாள் கங்காபாய்.

குண்டுராயரைப் போல் பயந்த சுபாவமோ, சர்மாவின் சாஸ்திர ஞானத்தைப் பற்றிய மதிப்போ இல்லாததனாலும் தன்னைவிடச் சர்மா இளையவர் என்பதாலும், ஆரம்ப காலத்தில் இருந்தே அவரிடம் 'நீ' 'நான்' என்று ஒருமையில்தான் பேசி வந்திருக்கிறாள் கங்காபாய்.

ஏதேது, கங்காபாய்! கூடத்துப் பொம்மண்டாட்டிகளை யெல்லாம் விட்டுட்டு இந்தப் பக்கம் வந்துட்டேள்! நீங்க விஷயம்னு பேச ஆரம்பிச்சு விவகாரமாக்கிடுவேள்னு கூடத்திலேயுள்ள உங்க சிநேகிதிகள் பேசிண்டா... அந்த மாதிரி விஷயம் இல்லியே?” என்று கையிலிருந்து புத்தகத்தை மூடி வைத்தார் சர்மா.

"நான் விஷயமாத்தான் வந்திருக்கேன். அதை விசேஷமாக்கறது உன்கையிலே இருக்கு... உன் பொண் ஜாதகத்தையும், நம்ப அம்பி சேஷாத்திரி ஜாதகத்தையும் கூடத்தாத்து சாஸ்திரியிண்டே குடுத்துப் பார்க்கச் சொன்னேன். ரொம்ப திவ்வியமாப் பொருந்தியிருக்காம். இந்தப் பொண்ணுக்கு அந்த மாப்பிள்ளைதான்னு பிரம்மா விதிச்சி இருக்கானாம்... சாஸ்திரி சொல்றார். பையனைப் பத்தி நான் உனக்குச் சொல்லணுமா? உனக்கும் ஒரு

பொறுப்பு விட்டது... அதுக்கப்புறம் எந்த தொந்தரவுமில்லாம நீயும் 'சிவனே ராமா'ன்னு இருக்கலாம். பொண்ணும் உன்னை விட்டு எங்கேயும் போயிடாம வயசான காலத்திலே உன்னோடேயே இருப்பா..." என்று சற்றும் தயக்கமின்றி விஷயத்தைப் போட்டு உடைத்த காங்காபாய் அவர் முகத்திலும் உணர்ச்சிகளிலும் ஏற்படும் கொதிப்பை லட்சியம் செய்யாமல் பேசிக்கொண்டே போகையில் சர்மா வெறிகொண்ட குரலில் சிம்மம் போல் கர்ச்சித்து உறுமினார்:

"வாயை மூடுங்கோ! எந்த சாஸ்திரி சொன்னான்...? சாஸ்திரீன்னா, வானத்தைப் பார்த்து கிரகங்களை அளக்கிறவன், தற்குறிகளுக்குப் பஞ்சாங்கம் பார்த்து நாள் சொல்றவன் தானே இவன்! இவன் சொல்லிட்டான்னு வந்துட்டேளோ...? அது சரி, மைத்ரேயிக்கு மாப்பிள்ளை பார்க்கிற சிரமத்தை நீங்க எதுக்கு இழுத்துப் போட்டுண்டேள்?" என்று முதலில் கோபமாக ஆரம்பித்தவர், குரல் இறங்கிக் கேட்டார்.

"ஏன் அவனுக்கென்ன கொறைச்சல்? குலம் கோத்திரம் எதிலேயும் கொறையில்லே... நீ உன் வரட்டுப் பிடிவாதத்துக்கும் வேதாந்தத்துக்கும் அந்த பொண்ணு வாழ்க்கையைப் பாழடிக்கிறது, நீ கும்பிடற சாமிக்குக் கூடப் பொறுக்காது! இது உன் குடும்ப விசயம்னாலும் ரெண்டு வயசிலே தாயில்லாப் பிள்ளையா இங்கே நீ கொண்டு வந்ததிலேருந்து பார்த்துப் பழகின தோஷத்தினாலே, நீ மொகத்திலே அடிச்ச மாதிரிப் பேசுவேன்னு தெரிஞ்சும் செல்ல வந்தேன்" என்று கண் கலங்கிக் கூறினாள் கங்காபாய்.

"நீங்க பெரிய மனசு பண்ணி என்னை மன்னிச்சுக்கணும். ஒரு நல்ல பிராம்மணனுக்கு என் மகளைக் கொடுக்க எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனா அவன், தான் பிராம்மணனே இல்லேன்னு சொல்லிக்கிறவன். நீங்க தான் குலமும் கோத்திரமும் பேசறேள்... ஒரு நாஸ்திகனுக்கு நான் பொண் கொடுக்கறது தர்மத்துக்கு விரோதம். என் மகளுக்குச் செய்யற துரோகம்... அதனாலே இது நடக்காத

காரியம்; அவ்வளவுதான் சொல்வேன். இதெப்பத்தி இனிமே பேசவேண்டாம்...” என்று முடிவாகச் சொன்னார் சர்மா.

"என்னமோ அப்பா... நான் சொல்லணும்ங்கறதினாலே சொல்லிட்டேன். நாளைக்கு உன்னாலே உன் மகளுக்கு ஒரு பேர் வரக்கூடாதோன்னோ...” என்று அரை குறையாகச் சர்மாவின் காதில் படும்படி சொல்லிவிட்டு எழுந்தாள் கங்காபாய்.

"ஹோ... மைத்ரேயி, பவித்திரமான பிராம்மண குலத்திலே பொறந்தவ. யாரையும் இழுத்துண்டு ஓடிடமாட்டா, நீங்க பயப்படாதேங்கோ...” என்று அழுத்தலுடன் கூறி விட்டுப் புத்தகத்தில் ஆழ்ந்தார் சர்மா.

'அதையும் பார்ப்போம்' என்று உள்ளுக்குள் முனகியவாறு விறைப்பாய் எழுந்து நடந்தாள் கங்காபாய்.

*****

# 6

சேஷாத்திரி, சர்மாவிடம் கங்காபாய் பேசியதன் முடிவைத் தெரிந்து கொண்டு மைத்ரேயின் பொருட்டுப் பெரிதும் மனத்துயர் கொண்டான். தனது நண்பர்களிட மெல்லாம் அது பற்றிக் கலந்து பேசினான். அவர்கள் அவனிலும் தீவிரமானவர்களானபடியால் அந்தப் பிராம்மணனின் திமிரை அடக்கிக் கல்யாணம் செய்து கொள்வதுதான் சிறந்த காரியம் என்று அவனுக்கு யோசனை கூறினர். பெண்ணின் மன உறுதி இருந்தால்தான் இது நடக்க முடியும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

கங்காபாய், தான் மைத்ரேயிடம் போய்ப் பேசும் போதெல்லாம் அவள் ஒன்றும் சொல்லாமல் கண்ணீர் சிந்தி அழுது கொண்டிருப்பதாக சேஷாத்திரியிடம் வந்து கூறினாள்.

சேஷாத்திரி மிகவும் தீவிரமாகவே யோசித்தான். மைத்ரேயியின் சம்மதத்தைத் தெரிந்து கொண்டால், சர்மாவை மட்டும் என்ன, உலகத்தையே ஒதுக்கிவிட்டுக் கூடத் தங்கள் கல்யாணத்தை நடத்திக் கொள்ளலாம் என்று உறுதி பூண்டிருந்தான் சேஷாத்திரி. அவளைத் தன் வாழ்க்கைத் துணைவியாக்கிவிட்டால் தனது லட்சியங்களுக்கும் கொள்கைகளுக்கும் உகந்தவளாய் அவள் மாறி எவ்வளவு உறுதுணையாய் இருப்பாள் என்றெல்லாம் கற்பனை செய்ய ஆரம்பித்து, சர்மா இல்லாத நேரம் பார்த்து அவள் சம்மதத்தை அறிய அவள் வீட்டுக்குள் நுழைந்தான் சேஷாத்திரி.

இருண்ட அறை மூலையில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, ஒளியற்ற தன்மன இருள் போக்க ஒரு சுடர் ஏற்றி வைக்குமாறு தெய்வத்தைப் பிரார்த்தித்து வணங்கித் தலை நிமிரும்போது அந்த தியானத்தின் பலனே போன்று தன் எதிரில் அவன் வந்து நிற்பது கண்டு மனமும் உடலும் பரவசமுற அவனருகே ஓடிவந்தாள் மைத்ரேயி... அவன் அவளது கரங்களைப் பற்றிக்கொண்டு... அவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளில் விழவில்லை: அந்த

ஸ்பரிசத்தால் அவள் அநுபவித்த - துன்பத்தின் கட்டுகள் இற்று விழும் வேதனையில் அவள் சர்வாங்கமும் பதறிற்று. அந்தச் சிலிர்ப்பில் மூர்ச்சையாவது போல் துவண்டாள் மைத்ரேயி.

அதே போழ்தில் சதானந்தத்துடன் வார்த்தையாடியவாறு வீடு திரும்பிய சர்மா, அவனை திண்ணையில் உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தார். அங்கே அவர் கண்ட காட்சியில் அவரது கண்களே குருடானது போல் முகத்தை மூடிக்கொண்டார். அவர் செவிகளில் மைத்ரேயி சேஷாத்திரியிடம் சொல்லிய வார்த்தைகள் விழுந்து நெஞ்சை நொறுக்கின.

"இனிமேல் நீங்கள் தான் என் தெய்வம்... இப்பவே கூட நீங்க அழைச்சிண்டு போறதானாலும் நான் தயார், அப்பாவின் கொடுமை எனக்குப் போறும்! போறும்...!" என்று அவள் அழுதாள்.

சர்மா தன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டு திண்ணைக்கு ஓடினார்.

"சரி மைத்ரேயி... நீ வருத்தப்படாதே... கங்காபாய் மாமிகிட்டே பேசி எல்லா ஏற்பாடும் பண்றேன்... வர்ர ஞாயிற்றுக்கிழமை. நாம ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு போயி”

"வேண்டாம். ஏதாவது ஒரு கோயிலில்..." என்று பேச முடியாமல் திணறினாள் மைத்ரேயி.

“சரி, சரி... நான் உன் அப்பாவிடமும் சொல்லிவிட்டுத் தான் எல்லாம் செய்யப்போறேன்; கடைசி நேரத்திலாவது அவர் மனசு மாறாதா?" என்று அவன் தன் தந்தையைப் பற்றிப் பேசியதும் அவர் நினைவால் அவள் நெஞ்சு கனத்தது.

“அப்பா...! அப்பா...!” என்று விம்மி விம்மிக் குழந்தை போல் அழுது கொண்டு சமையல் உள்ளுக்குத் தனிமையை நாடி ஓடினாள் மைத்ரேயி.

அவள் துயர் கண்டு கலங்கி கண்களும் உறுதியால் கனத்து நிமிர்ந்த நெஞ்சுமாய் வெளியே வந்த சேஷாத்திரி

திண்ணையில் உட்கார்ந்திருக்கும் சர்மாவைக் கண்டு திகைத்தான், சற்று மௌனமாய் நின்று யோசனையுடன் அவரைப் பார்த்தான். பிறகு பின் கட்டுப் போனான்.

"ஸ்வாமி! ஏன் என்னவோ போல் உட்கார்ந்து இருக்கிறீர்கள்!” என்று வினாவினான் சதானந்தன்.

“ஒண்ணுமில்லேப்பா, வயசாச்சில்லையா. தலை சுத்தறது! வா. உள்ளே போகலாம்” என்று சதானந்தன் பின் தொடர வீட்டுக்குள் வந்த சர்மாவைக் கண்டு, கண்களைத் துடைத்துக் கொண்டு சமையல் உள்ளேயிருந்து வெளியே வந்தாள் மைத்ரேயி

உள்ளே வந்து வெகுநேரமாகியும் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருக்கும் தந்தையிடம், "ஓதுவாருக்குச் சாப்பிட இலை போடவா?” என்று மெதுவாக வந்து கேட்டாள் மைத்ரேயி.

தலையை அண்ணாந்து கூரை முகட்டைப் பார்த்தவாறு "ஓதுவாரைப் போன்ற ஆசாரமுள்ளவர்களோ, நானோ இனிமேல் உன் கையால் சமைத்ததைச் சாப்பிட முடியாதம்மா! நீ உன் வேலையைப் பார்!” என்று உறுதியால் கரகரக்கும் குரலில் அமைதியாய் நெஞ்சை அழுத்தும் கனத்துடன் சொன்னார் சர்மா. பிறகு எழுந்து போய்த் தூக்குக் கூடையிலிருந்து வாழைப்பழச் சீப்பையும் பால் செம்பையும் தானே எடுத்துவந்து பெஞ்சின் மீது வைத்துக் கொண்டார்.

"ஓதுவாரே! போய்க் கைகால் அலம்பிக்கொண்டு வா. இன்னிக்கி உனக்கும் விரதமாக இருக்கட்டும்" என்று சலனமில்லாத குரலில் சொன்னார். அப்போது அந்தப் பக்கம் வந்த குண்டு ராயரைப் பார்த்த சர்மா, "ஓய் ராயரே! கொஞ்ச நேரம் கழித்து, உம்ம வீட்டிலே இருக்கானே நாஸ்திகன் அவனையும் கூட்டிண்டு பீச்சுக்கு வாரும். அவனோடு சில விவகாரம் தீர்க்க வேண்டி இருக்கு" என்று அதட்டுகின்ற குரலில் சொன்னார்.

"அதற்கென்ன... பேஷா அழைச்சிண்டு வந்தா போச்சு!” என்று கும்பலாக பீச்சுக்குச் செல்லவிருக்கும் குஷியில் உடல் குலுங்க உள்ளே ஓடினார் குண்டுராயர்.

தந்தையின் முகத்தைப் பார்க்க முடியாமல் இருட்டு மூலையில் போய் உட்கார்ந்து மௌனமாய்க் கண்ணீர் சிந்தி அழுது கொண்டிருந்தாள் மைத்ரேயி.

“என் மகள் வெங்கலப்பானையைத் தங்கப் பானையாக அடுப்பில் ஏற்றிக் கும்பிட்டு இறக்கும் அந்தச் சமையல் தான் எனக்குப் பரமானந்தம். ஒரு வேளை சாப்பிட்டாலும் அது தான் என் உடம்பில் ஒட்டறது...” என்ற சர்மாவின் குரல் அவளுக்கு நினைவு வர, 'தன் சுயநலத்தால் தந்தைக்குப் பாபம் செய்கிறோமோ?' என்ற பயத்தில் மனம் குழம்பி, விம்மி விம்மி அழும்போது அவளது ஓரிரு விம்மல்கள் முன்னறையிலிருந்த சர்மாவுக்கும் கேட்டன. ஆனால் அவர் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

இரவு ஒன்பது மணிக்குமேல் சதானந்தனை மயிலாப்பூருக்கு வழியனுப்பிவிட்டு, மெரினாவுக்கு வந்தார் சர்மா. மெரினா பெஞ்சுகளின் மீது ராயருடன் உட்கார்ந்திருந்த சேஷாத்திரி மரியாதையுடன் எழுந்து நின்றான். மௌனமாக வானத்தை வெறித்தவாறு யோசனையிலாழ்ந்திருந்த சர்மா திடீரென்று வானத்தில் இடி உருள்வது போன்ற த்வனியில் சேஷாத்திரியிடம் பேச ஆரம்பித்தார்.

"விவகாரம் அவள் சம்பந்தப்பட்டதுதான்! ஆனாலும் புருஷாள் பேசும்போது அவள் கலந்து கொண்டு விடுவாளோங்கற பயத்திலேதான் இங்கே வரச் சொன்னேன்" என்று திடுமெனச் சொன்ன சர்மாவின் பேச்சு ராயருக்குப் புரியவில்லை.

"என்ன சொல்றேள்? நேக்கு ஒண்ணும் புரியலியே" என்ற ராயரின் அசட்டுத்தனம் சர்மாவின் கோபத்தைக் கிளறியது.

“உமக்கு என்ன ஒய் புரியும்! நீரும் ஒரு புருஷன்னு இருக்கீரே...? போய் உம்ம பொண்டாட்டியைக் கேளும்"

என்று சர்மா சீறவே ராயர் ஒன்றையும் புரிந்து கொள்ளாமலே மௌனமானார்.

மீண்டும் சற்று நேர மௌனத்திற்குப் பின் மறுபடியும் சர்மா ஆரம்பித்தார்.

“நீ நாஸ்திகனானாலும் யோக்கியன்னு நெனைச்சேன்... என்னை உனக்குத் தெரியும். என் மகள் எப்படிப் பட்டவனுக்கு மனைவியாகத் தகுந்தவள்னும் உனக்குத் தெரிஞ்சிருக்கும். நீ அவள் மனசைக் கெடுத்து எனக்குத் தெரியாமல் என்னிடமிருந்து அவளை அபகரிச்சிண்டு போறது நியாயமா?”

அவன் தயங்கித் தயங்கி மூக்கையும் முகவாயையும் தேய்த்துக்கொண்டு அவரோடு சமரசம் காண விழையும் தோரணையில் விளக்கினான்.

"நீங்க என்னை தப்பா புரிஞ்சிண்டிருக்கேள்... உங்களுக்குத் தெரியாமலே இந்தக் காரியத்தைச் செய்யணும்னு நான் நினைக்கலே, உங்களுக்குப் பிடிக்காத காரியம் இதுன்னு எனக்குத் தெரியும். எங்க இரண்டு பேருக்கும் பிடிச்ச ஒரு காரியத்தை, நாங்க வயசு வந்தவாங்கற உரிமையினாலே செய்ய முடிவு பண்ணினோம். கங்காபாய் மாமியோடேயும் என் சிநேகிதர்களோடும் சேர்ந்து ஞாயிற்றுக் கிழமை திருநீர்மலைக்குப் போய் கலியாணம் பண்ணிக்கறதுங்கற முடிவை உங்ககிட்டே வந்து சொல்லணும்னு வந்தபோதுதான் ராயர் மாமா நீங்க அழைச்சிண்டு வரச் சொன்னாதா சொன்னார்.”

"ம்... இவனுக்கு என்ன தைரியம்!” என்ற கோபம் நெஞ்சுக்குள் கொதித்தெழுந்தபோது தமது மகள் தந்த துணிவே அது என்ற எண்ணத்தில் சர்மாவின் வாய் அடைத்துப் போயிற்று, பொங்கி வந்த அழுகையை விழுங்கினார்; 'சீ! நான் ஏன் அழணும்! இதனாலே எனக்கென்ன நஷ்டம்' என்ற நினைவில் நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொண்டு தொண்டையைப் பல சப்தத்துடன் கனைத்தார்.

"ஆமா எனக்கென்ன நஷ்டம்? ஒருவேளைச் சாப்பாடு, மன நிறைவோடு எனக்குப் போட்டவள்... போகட்டும். என் வாயில் மண்ணைப் போட்டுட்டு, ஆனால் அவளும் புத்தி கெட்டுப் போகிறாளேன்னு நெனக்கத்தான் வருத்தமாக இருக்கு..." என்று முணகினார் சர்மா.

"நான் உங்க பொண்ணை அபகரிச்சுண்டு போறது நீங்க நெனைக்கப்படாது; எப்பொழுதும் உங்களுக்கு மகளாகவே அவள் இருக்கலாம்."

"முடியாது... முடியாது..." என்று தலையை உலுப்பினார். "இனிமேல் அவள் என் மகளில்லை... எவ்வளவு செல்லமாய் வளர்த்தேன்...!" என்று அவளைத் தோள் மீது தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றியதை எல்லாம் எண்ணிக் கண் கலங்கினார். "பாவி...! பாவி...!" என்று பற்களைக் கடித்தார்.

"நாங்கள் எவ்வித பாபகாரியமும் செய்யத் துணியவில்லை. உங்கள் பிடிவாதத்தை நீங்கள் விட்டுக் கொடுத்து எங்களை ஆசீர்வதிக்கத்தான் வேண்டும். உங்கள் கொள்கைகளை நீங்கள் திணித்து அவற்றை ஏத்துக்க முடியாதவாளின் மீது கோபம் கொள்றது சரியில்லை..." என்று கரம் குவித்துக் கெஞ்சினான் சேஷாத்திரி.

'ஐயோ, தெய்வமே! என் வம்சத்தில் பிறந்தவள் - என் வயிற்றில் பிறந்த என் மகள் - கெட்டுப்போன பிராமணத்தியாய் விட்டாளேன்னுதான் வருத்தப்படறேன்; அவ்வளவு தான்" என்று மேல் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார் சர்மா.

வெகு நேரம் இருவரும் மௌனமாய் இருந்தார்கள். அவரைப் பார்க்க சேஷாத்திரிக்கு மனம் சங்கடப்பட்டது. என்றாலும் பிராமணனாகப் பிறந்த தன்னை மறுத்து, இவர் நினைக்கும் பிராமணன் கிடைக்க முடியாத காரணத்தால் பிடிவாதமாய் அவள் வாழ்வைப் பாழாக்கும் அவருக்கு விட்டுக்கொடுக்க அவன் தயாராயில்லை.

கடைசியாக எழுந்திருக்கும்போது சேஷாத்திரி உறுதியாகச் சொன்னான்.

'யார் வழியில் பார்த்தாலும் உங்கள் காரியம் சரிதான். நீங்கள் அடிக்கடி சொல்லுவேளே, அந்த உங்கள் மநுதான் சொல்லியிருக்கான்: "எந்த ஒரு பிராமணனும் தம் மகள் வயதுக்கு வந்த மூன்றாண்டுகளில் கல்யாணம் செய்து வைக்கத் தவறிவிட்டால், அந்தப் பெண். தனக்குப் பிடித்தமான புருஷனைத் தானே தேடிக்கொள்ளலாம்'னு" என்று அவன் சொன்னதைக் கேட்டு சர்மா திகைத்தார். அவன் சொன்ன உண்மையை அவரால் மறுக்கமுடியாது. தன்னுடைய, தான் நம்புகிற சாஸ்திரத்தின் ஒரு சூத்திரத்தாலேயே தன்னை அவன் மடக்கிவிட்டதும், அதற்குகந்த தவறுக்குத் தான் பொறுப்பாய் இருப்பதையும் அவர் உணர்ந்து மௌனமானார். பிறகு அமைதியாகப் பதட்டமற்ற குரலில் சொன்னார்: 'விதிப்படிதான் எல்லாம் நடக்கும். நான் மறந்திருந்த ஒரு உண்மையை, செய்த ஒரு குற்றத்தை நீ எனக்குக் காட்டினாய் அவள் செய்தது சரிதான்; அதை நான் எதிர்க்கக்கூடாது. ஆனால் அதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மநு சொல்லவில்லை. எனது மகள் என்ற உரிமையை அவள், தானே ரத்து செய்து கொள்கிறாள். போகட்டும் போகட்டும்... யாரோ ரெண்டுபேர் கல்யாணம் செய்துண்டா நான் எந்த அளவு ஆசீர்வதிப்பேனோ அந்த அளவு உங்க கல்யாணத்துக்கும் என் ஆசி உண்டு' என்று சொல்லும்போது தன்னை மீறிய புத்திர பாசத்தால் அவர் தொண்டை அடைத்தது.

“நீங்கள் வந்திருந்து...” என்று இழுத்தான் சேஷாத்திரி.

“எங்கே?”

"திருநீர்மலைக்கு"

"சீ; அது நடக்காது! அதுசரி, நீ ஏன் அங்கு போகிறாய்? உனக்குத்தான் அதில் எல்லாம் நம்பிக்கை கிடையாதே; இழுத்துக் கொண்டு போக வேண்டியது தானே?” என்று குத்தலாகப் பேசினார் சர்மா.

"அவள் அதையெல்லாம் நம்புகிறாள்." என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்து போனான் சேஷாத்திரி.

*****

# 7

ஞாயிற்றுக்கிழமை காலையில் வீட்டில் முன்னறையில் தனியாய் அமர்ந்திருந்தார் சர்மா. அவர் மனம் நிஷ்களங்கமாய் இருந்தது.

அன்று காலை, கங்காபாயின் ஆதரவும், சேஷாத்திரியின் தைரியமான வார்த்தைகளின் நம்பிக்கையளிப்பும் இருந்ததும் கூட, வாய்திறந்து ஒரு வார்த்தை பேசாமல் முன்னறையில் நின்றிருந்த தந்தையை மீறிப் போக முடியாமல் மைத்ரேயி அவர் காலில் விழுந்த வணங்கிய பின், அவரைக் கடந்து சென்ற காட்சி ஒரு சோக நாடகம்.

அவர்களோடு போக மறுத்து சர்மாவுடன் தங்கி விட்டார் குண்டுராயர்.

சோகமே உருவாய் சர்மாவின் முகத்தைப் பார்க்க அஞ்சித் திண்ணையில் உட்கார்ந்திருந்த ராயரைப் பின்புறமிருந்த சன்னல் வழியாகப் பார்த்த சர்மா கூப்பிட்டார்.

என்ன ஓய். ராயரே! நீர் போகலியா அந்தக் கல்யாணத்துக்கு? என்ற குரல் கேட்டுக் குளமாகியிருந்த கண்களை இரண்டு உள்ளங்கைகளாலும் அழுத்தித் துடைத்துக் கொண்டு உதடுகள் துடிக்க "இல்லை" என்று தலையாட்டினார் ராயர்.

சர்மாவுக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "சரி எழுந்து உள்ளே வாரும்" என்றழைத்தார். அவர் அழைப்புக்கும் விசாரிப்புக்கும் ஏங்கிக் கிடந்த சோகத்தால் குமுறி வந்த அழுகையுடன், கோபிக்கப்பட்ட குழந்தை, தாயிடம் திரும்பி வருவது போல் உள்ளே வந்த ராயர் சர்மாவை நோக்கிக் கரம்கூப்பி “எனக்கு ஒண்ணுமே தெரியாது ஸ்வாமி! எல்லாம் இந்தக் கங்காபாய் வேலை. நான் என்ன பண்ணுவேன். அவ நிலையா நிக்கறப்போ... எல்லாத்துக்கும் நான்தான் காரணம் அவனைக் கொண்டு வந்தது நான் தானே? என்னை மன்னிக்கணும். உங்களுக்கு விரோதமா இது நடக்கிறதிலே எனக்கும் சம்மதம் இல்லே...

இப்படியெல்லாம் நடக்கும்னு எனக்குத் தெரியாது" என்று விம்மினார்.

"சரிதான் விடுமய்யா இதுக்கென்ன பெரிசா வருத்தப் பட்டுண்டு பொட்டச்சிதானே. எவனோடயாவது போக வேண்டியவள். அவன் ஒண்ணும் மோசமானவனில்லே! எனக்கு ஒரு மகன் இருந்து, அவன் ஒரு நாஸ்திகனோடே சேர்ந்து கெட்டுப் போயிருந்தால் நான் வருத்தப்பட்டிருப்பேன்... இது மகள்தானே, தள்ளும்! பொண்ணுங்கறது வெறும் நிலம்தான். 'விதைக்கிற விதையைப் பொறுத்துத் தான் பயிரின் தன்மைன்னு சாஸ்திரம் சொல்றது. அங்கே கல்யாணம் நடக்கற அதே முகூர்த்தத்திலே இங்கே ஒரு திவ்யமான காரியம் நடக்கப்போறது உமக்குத் தெரியுமோ? சதானந்த ஓதுவாரை நான் பிராமணனாக்கப் போறேன்..." என்று சலனமில்லாமல் சொல்லி, பெஞ்சின் மீது இருந்த ஒரு மூட்டையைப் பிரித்துத் தங்கப் பூணூல், வெள்ளிப் பூணூல், மற்றும் ஹோமகுண்டத்துக்கு வேண்டிய சாமான்களை எல்லாம் எடுத்து வைத்தார் சர்மா.

"என்ன ஸ்வாமி, 'கலி கலி'ம்பேளே, அது உங்களையும் புடிச்சிடுத்தா? ஓதுவார்ப் பையனைப் பிராமணனாக்கறதாவது?" என்று அலறினார் ராயர்.

“உஸ் சும்மா கூப்பாடு போடாதீர்... நானும் நன்னா யோசிச்சு, சாஸ்திர வேத மரபுகளையெல்லாம் பார்த்துட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். என் முடிவைச் சொன்னப்போ அவனும் இப்படித்தான் கேட்டான்... ஓதுவாருக்குச் சொன்ன பதிலை உனக்கும் உலகத்துக்கும் கூட நான் சொல்ல வேண்டியிருக்கும்; சொல்றேன். இது எனக்கு ஒரு நல்ல வேலை. பிராமண தர்மத்துக்குப் புத்துயிர் கொடுக்கற வேலை ஐயா இது. 'பிறவியினாலே மட்டும் பிராம்மணனாகறது இல்லே’ங்கறது லோகத்துக்குத் தெரியாது. அப்பிடின்னா. தர்மங்களையெல்லாம் ஒருத்தன் கடைப் பிடிச்சு வந்தான்னா, 'பிறவி'ங்கிற விஷயம் தடையாயிருக்கிற தில்லேங்கறதுதானே! இதை நானாச் சொல்லலே... வசிஷ்டரின் வாயால் 'பிரம்மரிஷி' என்ற

பட்டம் பெற்ற விஸ்வாமித்திரன் பிறவியில் பிராம்மணனல்ல, ஐயா! கண்வ மகரிஷி கூட பிறவியில் பிராம்மணரல்ல. உமக்குத் தெரியுமோ...? அவர்கள் பிரம்மஞானம் பெற்று பிராம்மண தர்மங்களை அநுசரித்து பிராமணரானவர்கள், அதையெல்லாம் இந்தக் கலிகாலத்தில் நாம்தான் மறந்துட்டோம்; மூடி மறைச்சுட்டோம். அதனாலே சதானந்தன் மாதிரி ஒரு வேதநம்பிக்கையுள்ள பிரம்மச்சாரியைப் பிராமணனாக்கறது சாஸ்திரத்துக்கு உகந்ததுதான். நீர் இதுக்கு கவலைப்படாதீர்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, குளித்து முழுகிய சதானந்தன் அங்கு வந்தான்.

அவனுக்குப் பட்டும் பணியும் தந்து, எரியோம்பி, அதற்குமுன் அவனை இருத்தி மந்திர உச்சாடனங்களுடன் சடங்குகள் நிறைவேற்றிக் கொண்டிருந்த சர்மாவைத் தள்ளி நின்று திகைப்போடு வியப்போடும் பார்த்துக் கொண்டிருந்தார் ராயர்.

சர்மா சொல்லும் ஸ்லோகங்களையெல்லாம் சொல்லிக் கொண்டே வேள்வி வளர்த்தான் சதானந்தன்.

பிறகு அவனுக்குத் தங்கம், வெள்ளி, முப்புரி நூல்கள் அணிவித்து, பட்டுத் துணிக்குள் அவனையும் சேர்த்துப் போத்திக்கொண்டு அவன் செவிகளில் 'காயத்திரி மந்திரம்' கற்பித்து அவனுக்குப் பிரம்மோபதேசம் செய்வித்தார் சர்மா.

அவர் கண்களில், வாழ்வில் தனது லட்சியத்துக்கு ஒரு நிறைவேற்றமும், அது வளர்ந்து தழைக்கத்தக்க வழியும் கண்டுபிடித்துவிட்ட கர்வமும் ஆனந்தக் கண்ணீரும் ஒளி வீசின... "என்னோடு என் குலதர்மமே குறுகிய மடிந்து போகுமே என்று வருந்தினேன். மடியும் தர்மமல்ல இது - இப்படித்தான் இது காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. அதைக் கண்டுணர்ந்து செயல்படுத்திவிட்டேன்!" என்று ஆனந்த வெறியில் பிதற்றினார் சர்மா.

பிறகு அவர் காலில் நமஸ்கரித்து எழுந்து சதானந்தனை மார்புறத் தழுவிக் கொண்டு சொன்னார்:

'நீ இந்த வீட்டுக்கு அதிதியாக வந்தாய் - இனிமேல் இது நம் இருவருக்கும் பொதுவான வீடு. என் மகளுக்குப் பிறகு என் ஒரு வயிற்றுக்கு நானே சமைத்து உண்பதா என்று திகைத்திருந்தேன். இனிமேல் நீ பிராம்மணன், நீ சமைத்துப்போடு; நான் சாப்பிடுகிறேன். எனக்குத் தெரியும். இன்றைய உலகம் நம்மை ஏற்றுக் கொள்ளாதுன்னு, அது சரி தான். நானும் அந்த உலகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை...” என்று அவள் தோள் மீது கைபோட்டு உலகத்தையே மமதையோடு பார்த்தார் சர்மா.

அப்பொழுது குண்டுராயர் தன் வழக்கமான கள்ள மற்ற சிரிப்புடன் கேட்டார். “அப்படின்னா. இவருக்கே மைத்ரேயியைக் கல்யாணம் செய்திருக்கலாமே!”

"ஓய் நீர் பிராம்மணனா! அபத்தமாய்ப் பேசறீரே... தந்தை ஸ்தானத்திலே இருந்துதானேய்யா பிரம்மோபதேசம் செய்யமுடியும்? இப்போது இவன் என் மகன்!” என்று மகளைத் துறந்துவிட்ட துக்கத்தை மறந்து பெருமிதத்தோடு கூறிக்கொண்டார் சர்மா!

*****

# இலக்கணம் மீறிய கவிதை

## 1

ராமநாதன் கவிதைகள் கூட எழுதுவான்.

இலக்கியத்தின் எந்தத் துறையோடும் இம்மியும் சம்பந்தமில்லாத ஒரு வியாபார ஸ்தாபனத்தில் நூற்று ஐம்பது ரூபாய்க்கு 'டைப்பிஸ்டா'கப் பணிபுரியும் ராமநாதன் கவிதைகள் எழுதுவதும், அது ஒரு பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படுவதும் அவனது ஆபீஸ் நண்பர்களுக்கும், லாட்ஜ் சகாக்களுக்கும் அவன் மீது ஒருவித மதிப்பு ஏற்படும் காரணமாயிருந்தன. ராமநாதனுக்கும் வெளிப்படையாகப் பார்த்தால் அந்த மதிப்பைத் தவிர வேறு எந்தவித லாபமுமில்லை, கவிதை எழுதுவதன் மூலம். ஆனால் அவன் மதிப்பைக் கருதி எந்தவிதக் காரியமும் செய்வதில்லை; அவன் அதிகம் படித்தவன், படித்துக் கொண்டிருப்பவன், கவிதைகள் எழுதுகிறவன் என்றெல்லாம் தெரிந்தும் அவனது தான் தோன்றித்தனமான வாழ்க்கையைக் கண்டு நண்பர்கள் அனைவரும் அவன் மீது அசூயையும் வெறுப்பும் கொண்டிருந்தார்கள்.

ராமநாதனுக்கு வயது முப்பத்தைந்தாகிறது. வெளியூரிலிருக்கும் அவனது பெற்றோர் எத்தனையோ தடவை இங்கு வந்து வற்புறுத்தியும் 'கல்யாணம் வேண்டாம்' என்று பிடிவாதமாக மறுத்துவிட்டான்.

பெற்றோரைப் பொறுத்தவரை பையன் சாமியாராகி விட்டான் என்ற வருத்தம். நண்பர்கள் மத்தியிலோ 'இவன் எப்போதும் கண்ட கண்ட பெண்களைத் துரத்திக் கொண்டு அலைகிறான்' என்று ஏளனப் பேச்சு!

சமீபத்தில் ஒரு தடவை, இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு எவளையோ அழைத்துக் கொண்டு லாட்ஜுக்கே வந்துவிட்டான். விடியற்காலை ஐந்து மணிக்கு மொட்டை மாடியில் நின்று தேகாப்பியாசம் செய்து கொண்டிருந்த கிருஷ்ணய்யர், ராமநாதனின் ரூமிலிருந்து

ஒரு பெண் வெளியேறுவதைப் பார்த்துவிட்டார். உடனே தேகாப்பியாசங்களைப் பாதியில் கைவிட்டுக் கீழே இறங்கி ஓடி, விழித்திருந்த சில ரூம்காரர்களிடம் ஆளைக் காட்டி, விஷயத்தையும் விளக்கினார். விஷயம் 'ஆல்கஹால்' கலந்த ஸெண்ட் மாதிரி அந்த லாட்ஜ் முழுவதும் நீக்கமறப் பரவி நின்றது.

அன்று மாலை ராமநாதன் ஆபீஸிலிருந்து வரும் போதே அவனைத் தொடர்ந்து சில லாட்ஜ் நண்பர்கள் அவன் ரூமுக்குள் நுழைந்தனர். அந்த லாட்ஜில் உள்ளவர்களிலேயே தனி ரூம், ரேடியோ, நிறையப் புத்தகங்கள் யாவும் வைத்திருப்பவன் ராமநாதன் மட்டும்தான். ரேடியோ கேட்பதற்கும், புத்தகம் இரவல் வாங்குவதற்கும் மற்ற ரூம்காரர்கள் அங்கு வருவதுண்டு. ஆனால் ஒரே சமயத்தில் நான்கு ஐந்து பேர் உள்ளே நுழையவும், 'என்ன விசேஷம்' என்று திரும்பிப் பார்த்த ராமநாதன், இன்னும் பலர் வராந்தாவில் கூட நிற்பதையும் கண்டான். காலையில் கண்ட பெண் விஷயமாக அவர்கள் விசாரித்தபோது, அவர்களில் பலர் ஆளுக்கொரு விதமாகப் பேசி ரகளையே உண்டாக்கினர். ராமநாதன் அமைதியாக உடை மாற்றிக் கொண்டு, நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து, அவள் நினைவால் முகத்தில் ஏற்பட்ட புன்னகையோடு அவளைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தான். அவள் ஒரு வடநாட்டுக்காரி யென்றும், குடும்பத்தோடு ஊர் பார்க்க வந்து முசாபரி பங்களாவில் தங்கியிருக்கிறாள் என்றும், சினிமாக் கொட்டகையில் சந்தித்த அவளை இங்கு அழைத்துவரத் தான் பட்ட சிரமங்களையும் விவரித்து, அவளுக்குத் தான் ஐம்பது ரூபாய் தந்ததாகவும் கூறி, அவளது அழகையும் குணங்களையும் வர்ணிக்க ஆரம்பித்தான்.

குற்றங்களை அவன் தலைமீது சுமத்தி, அவனை விசாரிக்கும் போது கையும் களவுமாய்ப் பிடிபட்டதனால் அவன் தலைகுனிந்து நிற்கப்போவதையும், 'சரி' இனி மேல் இப்படி நடக்கக்கூடாது' என்று எச்சரித்துவிட்டுத் தாங்கள் திரும்பப் போவதாகவும் கற்பனை பண்ணிக் கொண்டு

வந்தவர்கள் அவனது முரட்டுத்தனத்தைக் கண்டு திகைத்து நின்றனர். கடைசியாக ஒருவர் அவன் முன்னே வந்து கைகளைக் கூப்பிக்கொண்டு, "அப்பனே! நீ எப்படியும் கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போ! லாட்ஜுக்கு அழைச்சிண்டு வந்து லாட்ஜு பேரைக் கெடுக்காதே...!" என்று வேண்டிக் கொண்டார்.

அவன் சாவதானமாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பதில் சொன்னான்; நீங்களும் என்னை மாதிரி லாட்ஜ்லே இருக்கறவங்க தானே? எனக்கு லாட்ஜப் பத்தியில்லாத அக்கறை உங்களுக்கு மட்டும் எதுக்கு? ஏதாவது சொல்லணும்னா லாட்ஜ்காரன் வந்து சொல்லட்டும்; நீங்க போகலாம்! என்று அவன் தாட்சண்யமற்றுப் பேசுவது கேட்டு அவர்கள் லாட்ஜுக்கு சொந்தக்காரரிடம் புகார் செய்யப் போனார்கள்.

இவ்வளவுக்கும் காரணமான பக்கத்து ரூம் கிருஷ்ணய்யர் மட்டும் அந்தக் கும்பலோடு செல்லாமல் எதோ ஒரு விசித்திரம் போல் ராமநாதனை வெறிக்கப் பார்த்தவாறு நின்றிருந்தார்.

அவர் மனம், சில நாட்களுக்கு முன் வந்து ராமநாதனின் முகவாயைப் பிடித்துக் கொண்டு 'கல்யாணம் செய்துகொள்' என்று கண்கலங்கக் கெஞ்சிய அந்தக் கிழவியைத் தான் கண்டது. அந்தக் கிழவியின் ஆசையை முகத்திலடித்தாற்போல் மறுத்துவிட்டு, பணத்தையும் பாழாக்கி, உடம்பையும் கெடுத்துக் கொண்டு கெட்ட பெயருக்கும் ஆளாகும் அவனைப் பார்க்க அவருக்கு ஒரு பக்கம் ஆத்திரமாகவும் இன்னொரு பக்கம் பரிதாபமாகவும் இருந்தது. அவனிடம் என்னென்னவோ கேட்க வேண்டும் போலிருந்தாலும் அவர் வாயிலிருந்து வந்த முதல் வார்த்தை "என்ன மிஸ்டர் ராமநாதன்! நிஜமாகவே ஐம்பது ரூவாயா குடுத்தீர்..." என்பதுதான். மனம் தாங்காமல் தான் அவர் கேட்டுவிட்டார். கிராமத்திலிருக்கும் குடும்பத்துக்கு மாதம் ஐம்பது ரூபாய் அனுப்புவதற்காக ஓட்டலில் சாப்பிடுவதை நிறுத்தி ஒரு ஸ்டவ்வை வாங்கி ரூமிலேயே வைத்து சமைத்து சாப்பிடுவதன் மூலம் இன்னும் கொஞ்சம்

மிச்சம் பிடிக்கலாம் என்று வாழ்ந்து வரும் அவருக்கல்லவா தெரியும், ஐம்பது ரூபாய் என்றால் அதன் மகிமை என்னவென்று...! அந்த மகத்தான ஐம்பதை ஓர் இரவு வந்து உறவாடிச் செல்லும் ஒரு வேசிக்குத் தூக்கிக் கொடுக்கும் ராமநாதனின் ஊதாரித் தனத்தை அவரால் தாங்க முடியவில்லை.

"இந்தப் பாரும்... நான் சொல்றேன்னு கோவிச்சுக்கப் படாது... ரொம்பக் கஷ்டப்படுவீர் பின்னாலே... இப்படி நீர் அநியாயம் பண்றது சரியில்லே. ஒரொருத்தர் அஞ்சுக்கும் பத்துக்கும் என்ன பாடுபடறா...! நீரே சமயத்திலே திண்டாடறதைப் பார்த்திருக்கேன்! கஷ்டப்பட்டு சம்பாதிக்கற பணத்தை இப்பிடி ஒழுக்கங்கெட்ட காரியத்துக்கு வாரி இறைக்கலாமா?" என்று கிருஷ்ணய்யர் படபடத்துப் பேசிக் கொண்டிருக்கும்போது, நாற்காலியிலிருந்து எழுந்து போய் ஷெல்பிலுள்ள ஒரு பத்திரிக்கையை எடுத்துக்கொண்டு வந்த ராமநாதன் அவரைப் பார்த்துச் சிரித்தவாறே சொன்னான்; ஸார், கிருஷ்ணய்யர் ஸார்...! நீங்க என் கோணத்திலிருந்து பார்த்தா என் காரியம் என் வரைக்கும் சரின்னு புரியும்!"

"யார் கோணத்திலிருந்து பார்த்தாலும் விபசாரம் பண்றது சரியாகாது நீர் ஸ்திரிலோலனா திரியறது நியாயமில்லே அவ்வளவுதான் எனக்குத் தெரியும்!" என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டு மூக்குப் பொடியை எடுத்து உறிஞ்சியவாறு முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டார் கிருஷ்ணய்யர்.

"நின்னுக்கிட்டே பேசறிங்களே, உட்காருங்க ஸார்!" என்று சொல்லிவிட்டு, சிகரெட் புகை அவர் பக்கம் போகாமல் மேஜையருகே சாய்ந்து நின்று சன்னல் பக்கம் ஊதினான் ராமநாதன்.

அவர் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவனும் ஏதோ சிந்தனையுடன் சிகரெட்டை இழுத்துக் கொண்டே நின்றான். பிறகு 'ஆஷ்டிரே'யில் சிகரெட் துண்டை நெரித்து அணைத்தவாறு அவரிடம் கேட்டான்: "ஏன் ஸார், உங்களுக்கு எத்தனை வயசிலே கலியாணமாச்சு?"

“அதுக்கென்ன இப்போ?” என்று சிடுசிடுத்தார் கிருஷ்ணய்யர்.

"சொல்லுங்களேன்” என்று கையிலிருந்த பத்திரிகையை அவர் முன் மேசைமீது போட்டுவிட்டு 'ஷெல்பி’லிருந்து ஒரு கனமான புத்தகத்தைத் தேடி எடுத்தான். கிருஷ்ணய்யர் தன் முன் அவன் வைத்த அந்தப் பத்திரிகையை எடுத்துப் புரட்டியவாறே, "எனக்கு இருபத்திரண்டு வயசுலே கல்யாணமாச்சு" என்றார். அந்தப் பத்திரிக்கையின் பெயர் 'சோதனை' என்றிருப்பது கண்டு. 'புரிதாயிருக்கிறதே, என்ற நினைப்பில் கையிலிருந்த பத்திரிகையில் அவர் கவனம் திரும்பியபோது அதில் அவன் பெயரால் வெளியாகி, பேனாவால் 'மார்க்' பண்ணப்பட்டிருந்த கவிதையைப் படிக்க முயன்றார். அவருக்குக் கொஞ்சம் தமிழ் ஞானம் உண்டு. இவன் என்னவோ எழுதுகிறான் என்று தெரியுமே ஒழிய இது நாள்வரை எதையும் அவர் படித்ததில்லை 'காதலின் விலை' என்ற தலைப்பைப் படித்து தம் மனசுக்குள் சிரித்துக் கொண்டார். அப்போது அவன், "ம்... உங்களுக்கு இருபத்திரண்டு வயசிலே கல்யாணம். எனக்கு இப்ப வயது முப்பத்தைஞ்சு ஆகிறது ஸார்" என்று கூறுவும் அதைக் கேட்டு ஆவேசம் வந்தவர் போல் கத்தினார் கிருஷ்ணய்யர்: "என்ன மனுஷனய்ய நீர்! பத்து நாளைக்கு முன்கூட - பாவம், வயசான காலத்திலே உம்ம தாயாருக்கு தோப்பனாரும் இங்கே வந்து உம்மை எப்படியாவது கலியாணத்துக்கு சம்மதிக்க வைக்கணும்னு ஆனபாடெல்லாம் பட்டா... நீர் இல்லாத சமயத்திலே இந்த லாட்ஜ்லே இருக்கிறவர் கிட்டேல்லாம் உமக்குப் புத்தி சொல்லச் சொல்லிக் கெஞ்சினா, நீர் என்னடான்னா 'எனக்கு வயசு முப்பத்தஞ்சு ஆச்சு, கல்யாணம் ஆகல்லே - அதனாலே கெட்டழிஞ்சு போறேன்'னு காரணம் சொல்லீரே?”

"கொஞ்சம் பொறுமையோட நான் சொல்றதைக் கேளுங்க ஸார். நான் சொல்லி முடிக்கறதுக்குள்ளே அடிக்க வர்ர மாதிரி பேசினா நான் என்ன பண்றது?”

"சரி சரி, சொல்லும் - நீர் ஏன் கல்யாணம் வேண்டாம்னு பிடிவாதம் பிடிக்கிறீர்?" என்று தனக்கு வந்த ஆத்திரத்தை சாந்தப்படுத்திக் கொண்டு மீண்டும் அந்த 'சோதனை' பத்திரிகையைப் பிரித்தார் கிருஷ்ணய்யர். அவன் அந்தப் பெரிய புத்தகத்தை மூடி மேசையின் மீதே போட்டுவிட்டு அவர் எதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

"நூத்தம்பது ரூபா சம்பளத்திலே கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழறதெவிட. ஒரு மனுஷன் தூக்குப் போட்டுக் கிட்டு செத்துடலாம்கிறது என் கொள்கை. இந்த ஓட்டல்ல ஒரு ரூம்லே நாலு பேர் இருக்கீங்களே, அந்த மாதிரி என்னாலே இருக்கமுடியாது, எனக்குத் தனி ரூம் வேணும். இன்னும் என்னென்னவோ இல்லேங்கற கொறையும் இருக்கு எனக்கு. இருக்கிற இந்த வசதிகளையும் விட்டுட்டு, எங்கேயாவது ஒரு வாடகைப் பொந்திலே என் கூட இன்னொருத்தியையும் சேத்துக்கிட்டு குஞ்சும் குளுவானுமா கொழந்தைகளைப் பெத்துகிட்டு, நோய்க்கும் வறுமைக்கும் ஒண்ணு ஒண்ணா சாகக் குடுத்துக்கிட்டு என்ன சம்சாரம் வேண்டிக் கிடக்கு..." என்று அவன் சலித்துக் கொண்டான்.

"தலைமுறை தலைமுறையா அப்படித்தான் சம்சாரம் நடத்திண்டு வந்திருக்கா, எல்லாருமே..." என்று பத்திரிகையிலிருந்த பார்வை மாற்றாமல் சொன்னார் கிருஷ்ணய்யர்.

"அது சரி... அந்தவித சம்சாரத்துக்கு நான் எதிரி; பன்றிகளும் நாய்களும் கூடத்தான் குட்டி போட்டுக் குடும்பம் நடத்துது...! மனுஷன் மனுஷனா வாழவேண்டாம்? ஒருத்தியோட வாழ்க்கையைப் பாழடிக்கவும் என் வாழ்க்கையை நரகமாக்கிக்கவும் தான் கல்யாணங்கிறது என் வாழ்க்கையிலே இடம் பெறும்னு எனக்குத் தோணுது. நமக்கு இவ்வளவுதான்னு தெரிஞ்சும் புதிசு புதிசா விலங்குகளை மாட்டிக்கிட்டு அவஸ்தைப்படறது புத்திசாலி தனமா என்ன...? என்னைக் கேட்டா, இப்ப சர்க்கார்லே கருத்தடைப் பிரச்சாரம் பண்றாங்களே, அதுக்குப் பதிலா

கல்யாணத் தடைப்பிரச்சாரம் பண்ணணும்பேன். குழந்தையில்லாம் ஒரு ஆணும் பெண்ணும் சுகம் அனுபவிக்கறது நியாயம்னா, கல்யாணமில்லாமல் ஆணும் பெண்ணும் சுகம் அனுபவிக்கறதிலே மட்டும் என்ன நியாயம் கெட்டுப் போயிடும்?"

"நியாயம்! எதுக்கு? கண்டபடி சோரம் போறத்துக்கா? நீர் இப்ப பொருளாதாரம் பேசறீர் இல்லையா! ஒரு ராத்திரிக்கு வந்துட்டுப் போற ஒரு வேசிக்கு ஐம்பது ரூபாயைத் தூக்கிக் கொடுக்க உம்ம பொருளாதாரம் இடம் கொடுக்கிறதோ?" என்று ஆத்திரத்துடன் கேட்டார். கிருஷ்ணய்யர்.

"ஆமாம்; இப்ப நான் பண்ணின செலவு செலவோட போச்சு. ஆனால் முடியறப்ப, முடிஞ்ச அளவுக்குத் தாராளமா இருக்கேன்' இதுக்காக என் செலவைத் தவிர வேறு எதையும் இழக்கறதில்லே. எங்கள் காதலில் சந்தோஷத்தை மாத்திரமே சேர்ந்து அனுபவிக்கிறோம். எங்கள் 'தாம்பத்ய'தில கஷ்டங்களைத் தனித்தனியாகத் தான் அனுபவிச்சிக்கறோம். வாழ்க்கையை சுலபமாக்கிக்கறது தப்பா?"

'ம்... காதல்! சுத்த அபத்தமா உளறாதீர். கஷ்டங்களைப் பகிர்ந்துண்டு, வறுமையிலும் செம்மையா வாழறதுக்குத் தானாய்யா அந்தப் பேரு பொருந்தும் அதை மிருக வாழ்க்கைன்னு சொல்லிட்டு, கண்டபடி போறதை மனுஷ வாழ்க்கைன்னு சொல்றீரே - என்ன அழகா இருக்கு தெரியுமா, உம்ம தத்துவம்!" என்று இளித்துக் காட்டினார் கிருஷ்ணய்யர்.

"காதல் வாழணும்னா அந்த வார்த்தைக்காக நாமே கஷ்டங்களைப் உற்பத்தி பண்ணிக்கிட்டுச் சாகணும்னு சொல்றீங்க - அப்படித்தானே?" என்று பதிலுக்குக் கிண்டல் பண்ணிவிட்டு இன்னொரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான் ராமநாதன்.

"அப்பிடிச் சொல்லலே: மனுஷ வாழ்க்கைக்கு ஒரு நெறிமுறை வேணும்ன்னு சொல்றேன். ஒருவனுக்கு ஒருத்தின்னு உயர்ந்த நெறி பிறந்ததுதான் மனுஷ

நாகரிகத்துக்கே அஸ்திவாரம். எவ்வளவு கஷ்டப்பட்டாவது அதை அழிக்கிறதுக்குப் பேருதான் துன்மார்க்கம்; சமூகக் கேடு. இதுக்கு என்ன நியாயம் வேண்டிக்கிடக்கு போ போ...!" என்று மனம் கசந்து பேசினார் கிருஷ்ணய்யர்.

அவர் எவ்வளவுக்கு எவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு அவசர அவசரமாகத் தனது உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்துக் கொண்டாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு பொறுமையுடனும் அமைதியுடனும், அவரது நியாயங்களை ஏற்கெனவே யோசித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன்போல் தர்க்கரீதியாகப் பேசினான் அவன், அவனது 'சமூக துவேஷ'ப் போக்கால் அவன் வார்த்தைகளில் ஓர் ஏளனமும் கலந்து தொனித்தது; "தன் பெண்டாட்டிங்கறதாலே அவள் நினைப்புக்குத் தாஜ்மஹால் கட்டினானே, அவன் தாம்பத்ய பெருமையெப் பேசினா அதுக்கு அர்த்தமிருக்கு... ஒரு புடவைக்கும், பொன் திருகாணிக்கும் ஒருத்தியெ கண்கலங்க வெக்கிறவனுக்குக் காதல் என்ன சம்சாரம் என்ன...! இங்கே சோரமும் ஒரு தொழிலா ஆயிடுச்சி, இப்போ! தலைமுறை தலைமுறையா நாம்ப வளர்த்த நாகரிகம் தான் வேசைகளையும் உற்பத்தி பண்ணி வெச்சிருக்கு. ஒண்ணு சொல்றேன். ஒழுக்கங்கெடணும்னு பொழுதுபோக்கா ருசி பார்க்கிறதுக்காக சோரம் போறவங்களுக்கு உங்கள் நியாயம் சரிதான். இங்கே வேறேவழி இல்லே... இருக்கிற வாழ்க்கை பாதிக்கப்படாம உடல் உணர்ச்சிக்குத் தீர்வு காணணும்ங்கற நிர்ப்பந்தம் தான் காரணம். 'மனுஷனாப் பொறந்தவங்களோட கடமை'ன்னு சொன்னீங்களே - ரொம்ப அருமையான வார்த்தை! அந்தக் கடமைங்கிற நெருப்பை இந்தச் சமூகத்தின் வேர்லே வெச்சா அது மகா பாவம்! ஒருவனுக்கு ஒருத்தியாம் வாழ்க்கை பூரா ஒருத்தியெ வெச்சுக் காப்பாத்த - மனுஷன் மாதிரிக் குடும்பம் நடத்த வழியில்லாத போது. இந்த 'நெறி' எவ்வளவு காப்பாத்தினாலும் நிக்காது. அதான் இந்த நிலைமை... ம் "ஒருவனுக்கு ஒருத்தி" என்று ஏளனமாய்ச் சிரித்தான்; பிறகு இன்னும் கொஞ்சம் அதிகச் சிரிப்புடன். என்னை மாதிரி ரொம்ப ஆம்பிளைங்க இருக்காங்க!

வேசிகளும் நெறைய இருக்காங்க. எல்லாம் சேத்துக் கணக்குப் போட்டா, அந்த நெறிப்படி 'ஒருவனுக்கு ஒருத்தி' சரியா இருக்கலாம்...”

"ஐயா! உங்க அசிங்கம் பிடித்த விவகாரத்திலே தயவு செய்து காதல் சம்சாரங்கிற வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, இது விஷயமாக மேலும் பேச்சைத் தொடர விரும்பாதவர் போன்று 'சோதனை' பத்திரிகையின் ஏதோ ஒரு பக்கத்தை மடக்கிக் கொண்டு படிக்க ஆரம்பித்தார் கிருஷ்ணய்யர். அவர் அப்பொழுது படித்துக் கொண்டிருந்தது அவனது 'காதலின் விலை' என்கிற கவிதையைத்தான். அதை அவர் படிக்கிறார் என்றறிந்து அவர் முகத்தைச் சலனமேதுமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ராமநாதன். முகம் சுளித்து அதைப் படித்துக் கொண்டிருந்த கிருஷ்ணய்யருக்கு முதலில் இப்படி ஓர் அபத்தத்தை எழுதிய அவன் மீது, பிறகு அதைப் பாராட்டி அது போன்ற கவிதைகளை வரவேற்று எழுதியிருக்கும் அந்தப் பத்திரிகை ஆசிரியர் மீதும் ஓர் அருவருப்பே பிறந்தது.

"உம்ம மாதிரிதான் இருக்கு, உம்ம கவிதையும்! ஒழுக்கத்தை மீறின மனுஷன்! இது இலக்கணத்தை மீறின் கவிதை!” என்று எரிச்சலுடன் குறிப்பிட்டுவிட்டு, பத்திரிகையை மூடி மேசையின் மீது போட்டுவிட்டு எழுந்தார்.

"இலக்கணத்தை மீறுவதாவது; ... எனக்கு இலக்கணமே தெரியாதே!” என்று கைகளை விரித்துக் கொண்டு சிரித்தான் ராமநாதன்.

"இலக்கணம் தெரியாமல் கவிதை எழுதுவானேன்?”

"கவிதை தெரியுமே..." என்று கூறிக்கொண்டே அவனும் எழுந்தான்.

"இது கவிதைன்னு உம்மை நீரே ஏமாத்திக்க வேண்டியதுதான்”.

"ஆமாம்; காதல், தாம்பத்யம், கலை, ஒழுக்கம், பண்பு - எல்லாமே இந்த உலகத்தில் நம்மை நாமே ஏமாத்திக்கறது தான்" என்று சன்னலருகே போய் வானத்தைப் பார்த்தவாறு - அவருக்கும் கேட்பது போல்... தனக்குள் முனகிக் கொண்டான் அவன்.

"இவன் அதிகம் படித்து அநியாயமா கெட்டுப் போயிட்டான்" என்று தோன்றியது அவருக்கு. அவன் மீது அவருக்கு அனுதாபமே பிறந்தது. அதே சமயத்தில் அன்றொரு நாள் இங்கு வந்து அவன் கன்னங்களைப் பிடித்துக் கொண்டு என் ராஜா! நீயே பார்த்து எனக்கு புடிச்ச பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கடா...!" என்று இந்த முப்பத்தைந்து வயது மகனைக் கண் கலங்கக் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட அந்த கிழவியின் அன்பு முகமும் அவருக்கு நினைவு வந்தது. அவர் அவன் பின்னால் மௌனமாக வந்து அவன் தோளைத் தோட்டார்.

"ராமநாதன்! உம்மெப் பாக்கறப்போ மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. உம்ம தாயார் என்கிட்ட சொன்னதுபோல் என்னாலே உம்மைத் திருத்த முடியாது. ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன் கேளும். நீர் பெரிசா உருகி உருகிக் கவிதை எழுதியிருக்கீறே அந்த வேசிகள் நீர் உம்மை ஏமாத்திக்கிற மாதிரி தங்களை ஏமாத்திக்கிறதில்லே. உம்ம கவிதைக்கும் உம்ம வாழ்க்கைக்கும் ஒரு இலக்கணமில்லாம இருக்கலாம். அந்த வேசிகளுக்கு ஒரு இலக்கணம் உண்டு... அதுதான் உம்மை ஏமாத்தி உம்ம பணத்தைப் பறிக்கிறது. கையில் காசில்லாமே மன்மதனே வந்து காதலிக்கிறதுன்னாலும் 'சீ! நீயுமாச்சு, உன் காதலுமாச்சு'ன்னு வெரட்டுவா. அதைப் புரிஞ்சுண்டா அவங்க உறவு எவ்வளவு மோசம்னு உமக்கே விளங்கும். நீர் படிச்ச மனுஷன். உம்ம அறிவைக் கொண்டே யோசிச்சு நல்ல முடிவுக்கு வாரும்..." என்று சொல்லிவிட்டு, மேலும், ஏதோ சொல்ல நினைத்து, "இவ்வளவு சொன்னது போதும்" என்ற திருப்தியுடன் "நான் வரேன்" என்று கூறி அறையை விட்டு வெளியேறினார்.

அவர் போனபின் மேசை மீது கிடந்த அந்தப் பத்திரிகையில் வெளிவந்துள்ள தனது கவிதையை எடுத்துப் பார்த்து "இலக்கணம் மீறிய கவிதை!" என்று முணு முணுத்துக் கொண்டான் ராமநாதன்.

'இலக்கணத்தோடு ஒட்டிக் கவிதை எழுதிவிட்டால் மட்டும் போதுமா?' என்ற கேள்வியும் அவன் மனத்தில் பிறந்தது.

*****

# 2

ஆபிசிலிருந்து ரூமுக்கு வரும் வழியில் பஸ் ஸ்டாண்ட் அருகேயுள்ள அந்தப் பத்திரிகைக் கடையில் அடுத்த இதழ் 'சோதனை' வந்திருப்பதைக் கண்ட ராமநாதன் பத்திரிகையை வாங்கி பிரித்தான். 'அடுத்த இதழுக்குச் சந்தா கட்டிவிட வேண்டும்' என்ற முணுமுணுப்போடு பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருக்கையில் தன் கவிதையைப் பற்றி ஒரு கட்டுரை வந்திருப்பதைக் கண்டு அங்கேயே நின்று படிக்க ஆரம்பித்தான்.

“காதலின் விலை" என்ற தலைப்பில் அவன் எழுதிய கவிதையையும் அதுபோன்ற கவிதை முயற்சிகளையும் கண்டித்து எழுதப்பட்ட அந்த விமர்சனக் கட்டுரை. 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை' என்ற பாடலுடன் ஆரம்பமாகி ராமநாதனின் கவிதையைப் பற்றிக் குறிப்பிடுகையில்...

"... சென்ற இதழ் சோதனையில் 'காதலின் விலை' என்ற தலைப்பில் பேரரசன் ஷாஜஹான் தன் புனிதமான காதல் நினைவுக்குக் கட்டிய உலகம் புகழும் எழிற்கோயில் தாஜ்மஹாலையும், ஒரு விடன் தன் சோர நாயகிக்குத் தரும் பொருளையும் உவமித்துப் பாடியிருக்கும் இந்த காளான் கவிஞரைத் தமிழுலகம் மன்னிக்காது. இந்த அருவருக்கத் தக்க 'பாடல்' (இந்தப் பிழைபட்ட உரைநடையைப் பாடல் என்பது பொருந்தாது. இது நிற்க) சொற்குற்றம் பொருட் குற்றம் மிகுந்து, இலக்கண அமைப்பிழந்து, தமிழுக்கே இழிவு தரும் இப்பிதற்றல், தமிழுள்ளம் கொண்ட சான்றோரும், கற்றறிந்த புலவரும் எள்ளி நகையாடற்பாலது. இதனை இவ்வேட்டின் ஆசிரியர் பாராட்டியும், பலபடப் புகழ்ந்து 'புதுக் கவிதை' எனப் போற்றியும் ஆதரவு தந்து அச்சேற்றியிருப்பது காணப் பண்புடையோர் உள்ளம் வெதும்புகின்றது.”

இந்தச் சமூகத்தையே புண்படுத்திவிட்ட எக்களிப்பில் அவன் தன்னை மறந்து அந்தப் பொது இடத்தில் நின்று.

பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற பிரக்ஞையற்று வாய்விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பின் எதிரொலி போன்று ஒரு பெண்ணின் குரல் அவனருகே கிளுகிளுத்து ஒலித்தது. அவன் திரும்பிப் பார்த்தபோது பஸ் ஸ்டாண்ட் கம்பத்தருகே அவனேயே பார்த்தவாறு ஒருத்தி நின்றிருந்தாள். அவள் அவனைப் பார்த்த பார்வையிலேயே அவளை அவன் புரிந்து கொண்டான்.

அவளும் அவனுக்கு புரிகின்ற விதத்தில் - ஒரு கண் சிறக்கணித்த உணர்த்தலினாலோ, குவிந்த இதழில் தேக்கி மறைந்த குறுநகையாலோ தன்னை மௌனமாகவே அறிமுகப் படுத்திக் கொண்டாள். பிறகு வலிந்திழுக்கும் ஒரு பார்வையை அவன் மீது விசிப்பிடித்து, அவள் அங்கிருந்து மெல்ல நகர்ந்து நடந்தாள். அவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவனுக்கு முன்னால் நடந்த அவள் சினிமா தியேட்டரில் பின்புறம் திரும்பும் சிறிய சந்தின் முனையில் அவனுக்காக நின்றாள். அறிமுகமற்ற யாரோ போல் பெரிய தெருவில் வந்த இருவரும் சந்தில் நுழைந்தபின் சேர்ந்து நடந்தனர். அந்தச் சிறிய சந்து நகரத்தின் பார்வைக்குத் தப்பி நகரின் நடுவிலேயே இருப்பது அறிந்து அவன் வியப்படைந்தான். அவன் இதுபோன்ற இடங்களில் சஞ்சரிப்பது கௌரவக் குறைச்சல் என்று நினைக்காதவன்தான். எனினும் இங்கு வரவேண்டிய சந்தர்ப்பம் அவனுக்கு இதற்கு முன் ஏற்பட்டதில்லை.

அங்கே குடிசைகளே நிறைந்திருந்தன. சந்தின் கடைக் கோடியில் மற்றும் எதிர் எதிரே சில ஓடு வேய்ந்த காரை வீடுகள் இருந்தன. ஒரு 'டீ'க்கடை சாயபு வைத்திருக்கும் ஒரு மளிகைக் கடை ஆகிய இரண்டு இடங்களிலும் கும்பல் நிறைந்திருந்தது. சாக்கடை ஓரத்தில் பழைய தகரத்தை அரணாக வைத்து அடுப்பு, மூட்டி ஒரு கிழவி வடை சுட்டுக் கொண்டிருந்த மணம் தெருவையே வாரிக் கொண்டு போயிற்று. குப்பை மேட்டின் மீது நின்று சில அழுக்குச் சிறுவர்கள் வானத்தைத் தொடும் முயற்சி போல் பட்டம் விட்டுக் கொண்டிருந்தனர்.

இவர்களையெல்லாம் கடந்து வந்து - வெகுகாலமாய்ச் சுண்ணாம்பு பூச மறந்துபோய், சுவரெல்லாம் செங்கல் வரிசைகள் தெரிகின்ற ஒரு சிறிய வீட்டின் முன் அவர்கள் இருவரும் நின்றனர். அவள் இடுப்பிலிருந்த சாவியை எடுத்து அந்தப் பலகைக் கதவின் பூட்டைத் திறக்கும்போது, தெருவில் நின்றிருந்த அவனையும் அவளையும், அந்த வீட்டின் எதிரிலும் பக்கத்திலும் இருந்த வீடுகளிலிருந்து அவளைப் போல் இருந்த, அவள் அளவு நாகரிகமில்லாத பெண்கள் பலர் பார்த்துக் கொண்டிருந்தனர். சிலர் முகத்தில் 'என்ன உணர்ச்சி', என்று சொல்ல முடியாத ஒரு வகைச் சிரிப்போடு பரஸ்பரம் ஒருத்திக்கொருத்தி கண் சிமிட்டிக் கொண்டனர்.

அவள் கதவைத் திறந்தபின் அவன் பக்கம் திரும்பிப் புன்னகையோடு அழைத்தாள். அவளைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள் செல்ல ஓரடி எடுத்து முன் வைக்கும்போது தான் அவனுக்குக் திடீரென்று நினைவு வந்தது...

...கையில் இருந்த பணத்தையெல்லாம் சில நாட்களுக்கு முன் அந்த வடநாட்டுக்காரிக்குக் கொடுத்துவிட்டதால் இந்த மாதம் அவனுக்கு ஏக நெருக்கடி, பஸ்ஸுக்காகக் கிடக்கும் சில்லறையைத் தவிர அவன் பாக்கெட்டில் பணமே இல்லை.

"கையில் காசில்லாமல் மன்மதனே வந்து காதலிக்கற தானாலும், சீ! நீயுமாச்சு, உன் காதலுமாச்சுன்னு...” என்று கிருஷ்ணய்யர் சொல்லாமலே அவனுக்குத் தெரியும்.

அவன் தயங்கி நிற்பதைக் கண்ட அவள், “உள்ளே வாங்களேன்..." என்று வாய் திறந்து அழைத்தாள்.

"இல்லே... வந்து... வீட்டைத் தெரிஞ்சிக்கிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். இன்னொரு நாளைக்கு வர்றேன்” என்று மெல்லிய குரலில் அவன் தெரிவித்தபோது அவளுக்கு ஓரளவு விஷயம் விளங்கிற்று. இருந்தாலும் சிரித்துக் கொண்டே கேட்டாள். "ஏன், இப்ப முகூர்த்தம் சரியில்லையா!”

ராமநாதனின் நிலை தர்மசங்கடமாக இருந்தது. இவளிடம் எதற்கு மறைத்து மறைத்துப் பேசவேண்டும் என்ற நினைப்பில், எந்த பீடிகையுமில்லாமல் நிஷ்கபடமான குரலில், "இப்ப என்கிட்ட பணமில்லை" என்று பளிச்செனக் கூறினான். அவள் அதை காதில் வாங்கிக் கொள்ளாதவள் போன்று, 'சரி; தெருவிலே நின்று எதுக்குப் பேசணும்? உள்ளே வாங்க, முதலில்' என்று உட்புறம் சென்றதும், அவளைத் தொடர்ந்து அவனும் சென்றபின் தெருக்கதவை மூடித் தாழிட்டாள். இருவரும் உட்புறம் சென்றதும், அவள் மூடிய கதவின் மீது சாய்ந்து நின்று, மார்பின் மீது கைகளைக் கட்டியவாறு அவனைப் பார்த்து, 'ஆத்திரமூட்டுவது போல் பலமாகச் சிரித்தாள். பிறகு ரொம்ப அலட்சியமாக, ஒரு ரௌடியைப் போன்ற தோரணையில் அவன் ஜிப்பாவைப் பிடித்திழுத்து 'என்ன' ஆலய்யா நீ! காசில்லாமல் இந்தக் காரியத்துக்கு வரலாமோ...? ம், பெரிசா காதல் பண்றதா நெனச்சி வந்தியா?" என்று கடுகடுப்புடன் கேட்டாள்.

அவளது 'ஆத்திர மூட்டும்' சிரிப்பிலும், ரௌடித் தனமான பேச்சிலுங்கூட, ஓர் ஆளை வசப்படுத்தும் சக்தியுள்ள நயமிக்க பெண்மை இயற்கையாகவே நிறைந்திருப்பதை ரசித்தான் ராமநாதன். தன் சட்டையைப் பிடித்திருக்கும் அவள் கையை அப்படியே பிடித்துக்கொண்டு, அவளைச் சமாதானப்படுத்தும் முறையில் அன்புடன் சொன்னான் அவன்: 'அசட்டுத்தனமா எதையும் நெனச்சி நான் வந்துடலே! இந்த மாதிரி சந்தர்ப்பத்தை நான் எப்பவும் விடறதில்லே. அந்தப் பழக்கத்தினாலே, கையிலே பணம் இருக்குங்கிற நெனப்பிலே வந்துட்டேன்... சரி; நான் போயிட்டு நிச்சயம் இன்னொரு நாளைக்கி வர்றேன்" என்று கதவைத் திறக்கச் சொன்றான்.

"உஸ் சும்மா இருங்க; மானம் போயிடும்!" என்று அவனைத் தடுத்தாள் அவள். 'என்ன சொல்கிறாள்?' என்று புரியாமல் நின்றான் ராமநாதன்.

"பின்னே என்ன... தெருவிலே நிக்கிற ஒவ்வொருத்தியும் நீங்க என்னோடு வர்ரதை எப்படி பொறாமையோடு

பார்த்துக்கிட்டு இருந்தாளுங்க...! இப்ப நீங்க உடனே வெளியே போனா, துட்டுலே தகறாரு பண்ணிக்கிட்டு போறீங்கன்னு கையைத் தட்டிச் சிரிப்பாளுங்க... குடுக்கறதைக் குடுங்கன்னு பேரத்துக்கு வருவாளுங்க... உங்களுக்குத்தான் ரொம்ப அவமானப் போகும்'! அதனாலே கொஞ்ச நாழி இருந்துட்டு அப்பறமாப் போங்க" என்று சொல்லிவிட்டு அவள் உட்புறம் வந்தாள். அவன் அங்கேயே நின்றிருந்தான். அவள் கூடத்து மூலையில் இருந்த பாயை எடுத்து உதறி விரித்தவாறே, "என்ன. அங்கேயே நிக்கிறீங்க? சும்மா, இப்பிடி வந்து உட்காரலாம் - அதுக்குப் பணம் வேண்டாம்!" என்று அவள் சொன்னதும் அவன் கூடத்துப் பாயில் வந்தமர்ந்தான் அவள் முற்றத்துக் கொடியில் கிடந்த ஒரு பழம் புடவையைக் கையிலெடுத்துக் கொண்டு, 'ஒரு நிமிஷம்' என்று நாகரிகமாக அவனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு கூடத்து அறைக்குள் போய், கதவை மூடிக் கொண்டாள். ராமநாதன் சட்டைப்பையிலிருந்த சிகரெட் பாக்கட்டை எடுத்தான். அதில் ஒரே ஒரு சிகரெட்தான் இருந்தது. சிகரெட் பாக்கெட்டை, சாம்பல் தட்டுவதற்காகப் பாயின் மீது வைத்து, சிகரெட்டைக் கொளுத்திக் கொண்ட பின் அந்த வீட்டைச் சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டான்.

தெருவாசற்படிக்கு நேரே உள்ள சிறு முற்றம், முற்றத்தின் பக்கத்தில் குண்டும் குழியுமாய்த் தரை பெயர்ந்த - இப்பொழுது அவன் உட்கார்ந்திருக்கும் சிறிய கூடம், கூடத்துக்கு நேரே - இப்பொழுது அவள் உள்ளே போய் உடை மாற்றிக் கொண்டிருக்கும் சின்ன அறை - இவ்வளவுதான் வீடு! வீட்டின் பின்புறம் ஊரின் கழிவையெல்லாம் சுமந்து செல்லும், நாற்றம் பிடித்த கால்வாய் ஓடுவதைப் பார்க்க முடியாவிட்டாலும், அடிக்கடி காற்று வீசும்போது உணரலாம். வீட்டின் முகட்டில் வேய்ந்திருந்த ஓடுகள் காலத்தால் பழமையாகிச் சிதைவுற்றிருந்தன. சுவரெல்லாம் மழை பெய்து ஒழுகிய கரைக்கோடுகளும், கூடத்து மூலையில் காகிதங்களைக் கொளுத்திய சாம்பல் பரப்பிக் கிடக்கும் மண் அடுப்பில் புகைந்த கரிப்பூச்சும் பரவிக் கிடந்தது, ராமநாதனுக்கு ஓர் 'அல்ட்ரா மாடர்ன் பெயிண்டிங்'கை நினைவூட்டிற்று அந்தச் சுவரின் கரைகளில் உற்றுப்

பார்க்கப் பார்க்க எத்தனையோ விதமான உருவங்களும் அவனுக்குத் தோன்றின. ஒருவேளை அங்கு வந்து போன மனிதர்களின் பிரதிபிம்பங்களோ, அவை...?

அதை அவன் ரசித்துக் கொண்டிருக்கையில் அறைக் கதவு திறந்த சப்தம் கேட்டுத் திரும்பினான்...

“இதைப் பார்த்துக்கிட்டு இருங்க...” என்ற குரலோடு அவள் இரண்டொரு தமிழ்ப் பத்திரிகைகளை எடுத்து அவனிடம் தந்த போது, புன்னகை தவழ்ந்த அவள் முகமும் வளையல்கள் குலுங்கும் ஒரு கரமும்தான் அவனுக்குத் தெரிந்தன. அறையின் கதவே அவள் உடலை ஆடையாய் மறைத்திருந்தது போலும். கதவு மீண்டும் மூடிக்கொண்டது. அவன் மௌனமாக உட்கார்ந்து பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருக்கையில், தனக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒரு நண்பரின் வீட்டிலோ, அல்லது உறவினரின் வீட்டிலோ தான் இருப்பது போல் உணர்ந்தான்.

சற்று நேரத்துக்குப் பின், கையிலெடுத்துச் சென்ற பழம் புடவையை அணிந்து கொண்டு, அறையிலிருந்து வெளி வந்த அவள் எதிரே தூணில் சாய்ந்து அடக்கமாக நின்று புன்னகையோடு "என்னை எப்பவாவது பார்த்த ஞாபகமிருக்கா?" என்று கேட்டாள்.

"பத்து நிமிஷத்துக்கு முன், மூடிய கதவின் மீது சாய்ந்து கொண்டு தன்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து, முரட்டுத் தனமாய்ச் சட்டையைப் பிடித்து 'ஒருமையில் பேசிய அவளா இவள்?' என்று யோசித்தான் ராமநாதன். பிறகு, வெகுநாள் பழகிய நண்பனை அல்லது உறவின்னை உபசரிப்பது போல் அழைத்து உட்காரச் சொல்லி, உடை மாற்றிக் கொள்ளப் போகும்போது 'ஒரு நிமிஷம்' என்று நாகரிகமாய் அனுமதி கோரியதையும் எண்ணிப் பார்த்தான். இப்பொழுது முற்றிலும் ஒரு குடும்ப ஸ்திரீ போன்ற அடக்கமாகத் தன் எதிரில் நிற்கும் அவளைக் கண்டு அவளை அளக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் ராமாதன்.”

'போனி டெய்'லாகக் கட்டியிருந்த கொண்டையை அவிழ்த்துத் தோள் வழியே முன்புறம் போட்ட கூந்தலைப் பின்னிக்கொண்டே அவனிடம் சொன்னாள் அவள்; "உங்களை எனக்கு முன்னேயே தெரியும். ஒரு பத்து நாளைக்கு முன்னே சினிமா தியேட்டர்லே பார்த்தேன். நீங்களும் என்னைத் தான் கவனிக்கிறீங்கன்னு நெனச்சி ரெண்டு தடவை சிரிச்சேன். அப்புறம்தான் தெரிஞ்சிது. நீங்க அந்த வட நாட்டுக் குட்டிக்கு வலைபோடறீங்கன்னு. சரின்னு நான் குறுக்கே வரலே..."

'ஓ! அன்னிக்கா... உனக்கு அவளைத் தெரியுமா?'

"தெரியும்; ஆனா பழக்கமில்லை, இந்த ஊர்க்காரி தான். அடிக்கடி பார்த்திருக்கிறேன்..."

"இல்லியே... ரெண்டு நாளைக்கு முன்னே தான் பம்பாய்லேருந்து வந்து முஸாபரி பங்களாவிலே தங்கியிருக்கோம்னு சொன்னாளே..."

அதை கேட்டு அவள் அடக்கமாகத் தலைகுனிந்து வாய்க்குள் சிரித்துக் கொண்டாள்; 'தன்னைத்தானே ஏமாத்திக்கிற தொழில்லே இன்னொருத்தரை ஏமாத்தறது பெரிய தப்பா?' அவள் தனக்குள் முனகிக் கொண்ட வார்த்தைகள் அவனுக்குச் சரியாக விளங்கவில்லை. எனினும், அவள் என்ன சொல்லி இருக்கக்கூடும் என்று ஓரளவு ஊகித்துக் கொண்டான்.

"பழக்கத்தினாலே வந்துட்டேன்னு, நீங்க சொல்றதுக்கு முன்னாலேயே எனக்குத் தெரியும். நீங்க பழக்கமுள்ளவர்னு அதைத்தான் சொல்ல வந்தேன்" என்றாள்.

"ஆமாம்... எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு... இப்ப நீ மறுபடியும் வெளியே போகணுமில்லியா?" என்று குனிந்த தலையோடு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே சொன்னான் ராமநாதன்.

"ஸ் நீங்க அதுக்காக ஒண்ணும் வருத்தப்பட வேண்டாம். நீங்க பழக்கத்தாலே வந்துட்ட மாதிரிதான் நானும் பழக்கத்தாலேதான் உங்களைக் கூப்பிட்டேன்.

இல்லேன்னா எனக்கு இன்னிக்கு வெளியே போகணும்ங்கிற அவசியமே இல்லை. கையிலே பணமிருந்தாலும் சம்பாதிக்க முடியறப்பல்லாம் சம்பாதிக்கத்தானே வேணும். இந்தத் தொழிலிலே? ...ம் நான் இனிமே வெளியே போக மாட்டேன் இன்னிக்கி, என்கிட்டே நெறயப் பணமிருக்கு."

"நெறைய இருக்கா?" என்று சிரித்துக்கொண்டே தலை நிமிர்ந்தான் ராமநாதன்.

"நிறையன்னா, நூறும் இருநூறுமா? யார் தர்ரா! நேத்து ஒரு முப்பது ரூபா கெடச்சது. அதிலே செலவெல்லாம் போக இருபது ரூபாயும் சில்லறையும் இருக்கும்... ஏன். உங்களுக்கு ஏதாவது கடன் வேணுமா... வெளையாட்டுக்கு இல்லே; நெஜமா - நெஜமாகவே கேக்கறேன், வேணுமா?" என்று இரண்டு தடவை 'நிஜமா, உபயோகிக்கும்போது முதலில் விளையாட்டாகவும் பிறகு மனப்பூர்வமாகவும் அவள் கேட்டது அவனுக்குப் புரிந்தது. அவன் கேட்டிருந்தால் நிச்சயம் தன்னிடம் உள்ளதை அவள் கொடுத்திருப்பாள். அவள் சொன்னதைக் கேட்டு அவன் நன்றியறிதலுடன் சிரித்துக் கொண்டே, புகைத்த சிகரெட்டைக் காலிபாக்கெட்டில் நெரித்து அணைத்தான்.'

"ஆமா, உங்ககிட்டே எவ்வளவுதான் பணமிருக்குது?" என்றாள் அவள்.

"என் கிட்டேயா? நீ இவ்வளவு வெளிப்படையாகச் சொன்னப்புறம் நானும் சொல்லிடணுமில்லையா?" என்றவாறு ஜிப்பா பாக்கெட்டில் கைவிட்டு, நான்காய் மடித்துத் திணித்திருந்த அந்த 'சோதனை' பத்திரிகையை எடுத்து வெளியில் போட்டான். பிறகு பாக்கெட்டிலிருந்த கையை எடுத்து அவள் முன் நீட்டியபோது, ரூம் சாவியோடு பதினெழு பைசாக்கள் இருந்தன.

"இதென்ன சாவி?"

"ரூம் சாவி."

"ஓ! சாயங்காலம் காபி சாப்பிட்டீங்களோ?"

“இல்லை! காபி சாப்பிடத்தான் போனேன். வழியிலே பத்திரிகை வாங்கிவிட்டேன்."

"ஆமா, அது என்ன பத்திரிகை, அவ்வளவு சுவாரஸ்யமா படிச்சிட்டு நடுத்தெருவிலே பித்துக்குளி மாதிரி சிரிச்சீங்க?” என்று அவள் கை நீட்டிப் பத்திரிகையை வாங்கினாள். அதைப் பிரித்து பார்ப்பதற்குள் வேறு ஏதோ நினைவு வந்தவளாய். கையிலுள்ள பத்திரிகையோடு எழுந்து சென்று தெருக்கதவைத் திறந்து வெளியே தலையை நீட்டி "டே, சோமாறி! இங்கே ஓடியா!” என்று யாரையோ செல்லமாக அழைத்தாள். அவள் திரும்பி வந்தபோது அவள் பின்னால் நிஜார் அணிந்து வெற்றுடம்போடு ஒரு பன்னிரண்டு வயது சிறுவன் வந்தான். அவன் கூடத்தில் உட்கார்ந்திருந்த ராமநாதனைக் கீழ்க்கண்ணால் அடிக்கடி பார்த்துக் கொண்டான்.

"காக்கா கடைக்குப்போயி" என்று பையனிம் சொல்லும் போதே, ராமநாதன் பக்கம் திரும்பி அவனிடம் "இங்கு காபி கெடைக்காது; டீ வாங்கியாச் சொல்றேன்" என்று அனுமதி கோருவது போல் சொன்ன பிறகு, பையனிடம் 'ரெண்டு டீ - நல்லா, ஸ்ட்ராங்கா, மலாய், போட்டு... உங்களுக்கு மலாய் போட்டா புடிக்குமோ?’ என்று அவனைத் துரிதப்படுத்திய பிறகு ராமநாதனிடம் கேட்டாள்.

"ஓ! ரொம்ப புடிக்கும். எங்க ஊர்லெல்லாம் அப்படித் தான்; இங்கே கூட அந்த மாதிரி உண்டோ?” - அவளைப் போல் தானும் சரளமாய்ப் பழகிப் பேச வேண்டும் என்ற உணர்வில் பேசினான் ராமநாதன்.

"சர்தான்... ஐயா, பெரிய பெரிய ஓட்டலுக்குத்தான் பேறது போல இருக்கு பட்டணத்துக்கு வந்தப்புறம்! டீக் கடைங்கள்லே எங்கேயும் அப்படித்தான் - ஏண்டா வாயைப் பார்த்துக்கிட்டு நிக்கிறே? சீக்கிரம் வாங்கிக்கிட்டு ஓடியா பார்ப்போம்"... என்று ஒரு ரூபாயைக் கொடுத்தாள், பையனிடம். சிறுவன் அவசரமாகத் திரும்பினான்.

"இரு இரு!”... வேற ஏதாவது வேணுமா? சிகரெட் இல்லே போல இருக்கே... தோ, இந்த சிகரெட்டு வாங்கிக்க” என்று

காலி பாக்கட்டைக் காட்டினாள்.

"அதுக்குத் துட்டு பத்தாதே!” என்றான் சிறுவன்.

"அரைப் பாக்கட் போதும்" என்றான் ராமநாதன்.

ஏனாம்? ஒரு பாக்கட்டே வாங்கிட்டு வா" என்று இன்னொரு ரூபாயையும் கொடுத்து அனுப்பினாள்.

சிறுவன் போன பிறகு பாயின் மற்றொரு மூலையில் உட்கார்ந்து அந்த 'சோதனை' பத்திரிகையைப் புரட்டினாள் அவள். "ஆமா இது என்னா பத்திரிகை? படத்தையும் காணோம், ஒண்ணையும் காணோம்! இதை எட்டணா குடுத்து யாரும் வாங்குவாங்க...?”

"அதுக்கும் உன்னை மாதிரி என்னை மாதிரி சில பேர் இருக்காங்க!”

"எதுக்கு. உங்களோட என்னையும் சேர்த்துக்கிறீங்க? நான் ஒண்ணும் இந்த மாதிரி வாங்கமாட்டேன்... இது ரெண்டும் தான் எனக்குப் புடிச்ச பத்திரிகை... இதிலே தொடர்கதை வருது; ஒவ்வொரு வாரமும் என்ன ஆகும் என்ன ஆகும்னு மனசு அடிச்சுக்குது...” என்று ரொம்பப் பிரபலமான இந்த இரண்டு பத்திரிகைகளையும் அட்டையின் மேல் சரளா என்று "ஆங்கிலத்தில் அழகாகக் கையெழுத்திட்டிருப்பதைக் கண்ட ராமநாதன். "உன் பெயர் சரளாவா?” என்று கேட்டான். "ம்...” என்று அவனைப் பார்க்காமலே தலையசைத்தவாறு, படங்களில்லாத அந்தப் பத்திரிகையிலே எதையோ சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தாள். சற்று நேரம் இருவரும் பேசாமிலிருந்தனர், அவளையே பார்த்துக் கொண்டிருந்த ராமநாதன் "சரளா! நான் உன்னை ஏதாவது கேட்டா தப்பா நெனச்சிக்கமாட்டியே...” என்ற பீடிகையோடு அவளைப் பற்றி என்னவோ கேட்க ஆரம்பித்தபோது ராமநாதனை அவள் தலைநிமிர்ந்து பார்த்தாள். ஒரு பார்வையிலேயே அவன் உள்ளத்தில் உருவாகும் நினைவுகளைப் பார்க்க முடிந்தது அவளால்: அவள் முகத்தில் திடீரென ஒரு கடுமை பிறந்தது.”

"வேண்டாம்! நீங்க என்ன கேப்பீங்கன்னு எனக்குத் தெரியும்! 'நீ யாரு? உன் கதை என்ன? நீ ஏன் இப்படியானே? ஐயோ பாவம்!'... இதானே கேக்கப் போறீங்க...? போதும்! இந்த மாதிரி கேக்காத ஒருத்தனைக்கூட நான் பார்த்ததில்லே. ஒவ்வொருத்தன்கிட்டேயும் அவனவனுக்குத் தகுந்த மாதிரி புளுக வேண்டியது. ஏன்னா, மனுஷனுக்கு அனுதாபப்படறதுக்குக் கூட சுவராஸ்யமா ஒரு கதை வேண்டியிருக்கு... இடியட்ஸ்! தயவு செய்து நீங்களாவது கேக்காம இருங்க; உங்க கிட்டயாவது புளுகாம இருக்கேன்" என்று அவனிடம் கெஞ்சுவது போல் கேட்டுக் கொண்டாலும், அவள் முகத்தில் ஒரு துயரம் கலந்த எரிச்சலும், மனத்தில் ஒரு மறைமுகமான கோபமும் மூண்டு ஒரு வினாடியில் தணிந்ததை அவன் கண்டான்.

"நான் எப்படி இருக்கேனோ அப்படியே என்னைப் பார்க்க உங்களுக்குத் தெரியாதா? இது ஒரு தொழில்... அவ்வளவு தானே? இந்தத் தொழிலோட சம்பந்தப்படாதவங்க தூரத்திலே இருந்து என்னைத் திட்டட்டும், வருத்தப் படட்டும். இது ஒரு தொழில்னு தெரிஞ்சு, இங்கே போனா இது கிடைக்கும்னு வந்துட்டு நான் எதை விக்கிறேனோ அதையே வாங்க வந்தப்புறம் 'ஐயோ! உன் கதி இதுவா'ன்னா அயோக்கியத்தனமில்லே...?

அவளது வார்த்தைகள் அவன் செவியில் அறைவது போல் இருந்தன. ஏனெனில், அவனும் அது போல் என்னவோ கேட்கத்தான் பீடிகை போட்டான். ஆனால், அது அவளை இவ்வளவு மோசமான கோபத்துக்கும் எரிச்சலுக்கும் ஆளாக்கும் என்று அவன் நினைக்கவில்லை.

"இல்லை; நான் அந்த மாதிரி எதுவும் கேட்க வரல்லே சரளா நீ என்கிட்ட இவ்வளவு பிரியம் காட்டறதும் உபசாரம் பண்றதும் எதுக்குன்னு..." என்று என்னவோ தடுமாறிச் சொன்னான் ராமநாதன்.

"உன்னை எனக்குப் புடிச்சிருக்கு" என்று மறுபடியும் 'ஒருமை'யில் பேசினாள். "என்னிஷ்டம் நான் யாராவது ஒரு கௌரவமான மனுஷன்கிட்டே கௌரவமாக நடந்துகிட்டா

அதுகூடத் தப்பா? காசே குறின்னு நிக்கணும்னு என் தலையிலே எழுதி வெச்சி இருக்கா? முடியாது? இப்ப நூறு ரூபாய் தூக்கிக்கிட்டு ஒருத்தன் வந்தாக்கூட 'சீ, போ! முடியாதுன்னு சொல்வேன்? என்னிஷ்டம்... காசாம் காசு? தூ! யாருக்கு வேணும்?' என்று அருவருப்புடன் சற்று நேரம் தலைகுனிந்த படி உட்கார்ந்திருந்தாள். பிறகு கொஞ்சம் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்துச் சொன்னாள்; "ம்... அதுவும் சரிதான்... பணமும் வேண்டி இருக்கிலே... ஆனா பணம் மட்டும் போதுமா? அப்படீன்னா, பணத்தை வெச்சிட்டு அவனவனும், பேசாம இருக்க வேண்டியது தானே? எதுக்கு எங்கிட்டே கொண்ணாந்து திணிக்கிறான்? நான் மட்டும் பணத்தைச் சேத்து வெச்சிக்கிறதுக்கா இருக்கேன்... அவன் குடுத்த பணத்தை வேற எங்கேயாவது குடுத்து எனக்கு வேணும்கறதெ வாங்கிக்கிறேன்... பணத்துக்காக பணத்துக்காகன்னா என்ன அர்த்தம்? உனக்கு வேணுங்கறது உங்கிட்டே இல்லே... எனக்கு வேணுங்கிறது என்கிட்டே இல்லே... பணம்கிறது யாருகிட்டே எது இல்லைன்னாலும் அதெ வாங்கித் தருது... இவ்வளவுதானேய்யா பணத்துக்கு மதிப்பு...? - அவள் பேசிக் கொண்டே இருந்ததை அவன் வியந்து கேட்டான்.

"உங்க கையிலே பணத்தோட நீங்க வந்திருந்தீங்கன்னா அந்தப் பணத்தை எப்படிக் கறக்கலாம்னுதான் நானும் யோசிப்பேன். ரெண்டு பேரு சந்தோஷமா இருக்கணும்னா யாராவது ஒருத்தர் செலவு பண்ணித்தான் ஆகணும். எங்கிட்ட இப்ப பணமிருக்கு; நான் செலவு பண்றேன். என்ன, சரிதானே? 'சீ! நமக்கு செலவு பண்றதான்'னு தோணுதா? அப்படி தோணினா, நீங்க எழுந்து வெளியே போகலாம்."

“இல்லை சரளா, இல்லை; நான் உன்னை மதிக்கிறேன்... எனக்குச் சமமா மதிக்கிறேன்..." என்று சொல்லும்போது ராமநாதனின் கண்களில் என்னவோ ஓர் உணர்ச்சி கலங்கியது. அவள் பதறிப் போனாள்; “நான் தப்பா ஏதாவது பேசினேனா...? உங்க மேலே எனக்கு ஒரு வருத்தமும்

இல்லே... வேறே என்னவோ கோவம் - மன்னிச்சுடுங்க!” என்று கையைப் பற்றி நெருங்கினாள்.

அப்பொழுது வாசற் கதவைத் திறந்து கொண்டு 'டீ' வாங்கச் சென்ற சிறுவன் திரும்பி வரவே, அவர்களிடையே விம்மியெழுந்த உணர்வுகள் சமனப்படுத்தப்பட்டன.

இரண்டு வட்டங்கள் உள்ள ஒரு கம்பித் தூக்கில் 'டீ' கிளாஸ்களை ஏந்தி வந்த சிறுவன் அவற்றை அவர்கள் முன் வைத்துவிட்டு, சிகரெட் பாக்கெட்டையும் சில்லறையையும் ராமநாதனிடம் நீட்டினான். ராமநாதன் சிகரெட்டை வாங்கிக்கொண்டு சில்லறையைப் பாயின் மீது வைத்தான். சிறுவன் அங்கேயே நின்றான்.

"அவனுக்கு ஏதாவது சில்லறையை கொடுத்தனுப்புங்க" என்றாள் சரளா. ராமநாதன் பாயின் மீதிருந்த சில்லறையில்லிருந்து பதினைந்து பைசாக்களை எடுத்துப் பையனுக்குத் தந்தான்.

"டேய், எவ்வளவு? பதினைந்து காசா? அடி சக்கெ! இவரு ரொம்பத் தாராளமா இருக்காரில்லே. சரி, ஓடிப் போ! அப்புறம் வந்து கிளாஸை எடுத்துக்கிட்டு போகலாம்...” என்று ராமநாதனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டியவாறு பையனிடம் சொன்னாள். சிறுவன் நன்றியுடன் ராமநாதனுக்கு சலாம் வைத்துவிட்டு வெளியே ஓடினான். அவள் டீயை எடுத்து அவனிடம் தந்தாள். பிறகு தன் கிளாஸிலிருந்து டீயின் மீது மிதந்த பாலேட்டை அவன் தம்ளரில் வடித்தாள்.

"ஏன், உனக்கு 'மலாய்' பிடிக்காதா?" என்றான் அவன்.

"உங்களுக்குத்தானே ரொம்பப் பிடிக்கும்" என்று அவள் சிரித்தாள்.

அவன் டீயைக் குடிக்கும்போது, அவனைப் பார்த்தவாறே டீயைப் பருகிய சரளா, "நிஜமாகவே உங்களை எனக்குப் புடிச்சிருக்கு" என்றாள். "என் பேரை நீங்க தெரிஞ்சிக்கிட்டதனாலே கேக்கறேன் - உங்க பேரு...?”

"ராமநாதன்..."

"ஆமா நீங்க ரூம்லே தனியா இருக்கற மனுஷன் கையிலே காசில்லாம - இருக்கும்போது வாரி இறைச்சுட்டுக் கஷ்டப்படலாமோ?"

"இருக்கும்போது வாரி இறைக்கிறேன்னு யாரு சொன்னா உனக்கு?"

"ஒருத்தர் வந்து சொல்லணுமா... ஆளைப் பார்த்தா தெரியலை? அது சரி; கையிலே பணமில்லாம ராத்திரிச் சாப்பாட்டுக்கு..."

"ஓ! அதுக்கெல்லாம் ஒண்ணும் கஷ்டமில்லே; எங்க லாட்ஜ்லே முன்பணம் வாங்கிட்டுத்தான் சாப்பாடு போடறாங்க..."

"சரி நீங்க இன்னிக்கி என்னோட விருந்தாளியா இருக்கீங்களா? மாட்டேன்னு சொல்லக்கூடாது. நீங்க இங்கே சாப்பிடணும்னுதான் இவ்வளவு கேட்டேன். நான் ரொம்ப நல்லா சமைப்பேன்..." அவளது பேச்சைத் தொடர்ந்து சிந்தனையும் எண்ணத்தைத் தொடர்ந்து வார்த்தையும் வர இருந்தபோது அவள் பேசுவதையே 'சடக்'கென்று நிறுத்திக் கொண்டாள். அந்த ஒரு வினாடி அவள் என்னவோ ஆகி, பிறகு தன்னிலை பெற்றாள். எல்லோருக்குமே ஓர் இறந்த காலம் இருந்திருக்குமல்லவா?

"நீங்க இங்கேதான் சாப்பிடப் போறீங்க! ரொம்ப நாளைக்கு அப்புறம் நான் சமைக்கப்போறேன்" என்று கூறி விட்டு, சமையல் காரியங்களைக் கவனிக்க அடுப்பருகே சென்றாள் அவள்.

முற்றத்தில் சமையலுக்கான பாத்திரங்களை, சேலைத் தலைப்பை வரிந்து செருகிக்கொண்டு விளக்கிக் கொண்டிருந்த சரளாவிடம் தூணருகே வந்து நின்று ராமநாதன் கேட்டான்; "பாத்திரமெல்லாம் இருக்கிறதைப் பார்த்தா, நீ சமைக்கறதே இல்லேன்னு தோணுதே -"

நெற்றியில் வழிந்த வியர்வையை, புளியும் சாம்பலுமிருந்த புறங்கையால் துடைத்தவாறு தலை நிமிர்ந்தாள் சரளா. "தனக்குத் தானே சமைச்சி சாப்பிடறது ரொம்பக் கண்றாவியா இருக்கும். சமைக்கிற அனுபவமிருக்கிறவங்களுக்குத்தான் அது புரியும். என் சமையல் எப்படி இருக்குன்னு ருசிபார்த்து சொல்றதுக்குக்கூட ஒருத்தர் இல்லாத இடத்திலே எதுக்கு சமையல்? ஆறணாவை விட்டெறிஞ்சா சோறு வருது. சமைச்சி இன்னொருத்தருக்குப் பரிமாறி, தானும் சாப்பிடறதில்லே கெடைக்கிற சந்தோஷம் இருக்கே... ஓ! இன்னிக்கி உங்க தயவிலே எனக்கு அந்தச் சந்தோஷம் கெடைக்கப் போகுது!" என்று அவள் சிரிக்கையில் அந்தச் சிரிப்பில் ஒரு துயரமே மிகுந்திருந்தது.

பாத்திரம் தேய்த்து முடிந்ததும் அடுப்புப் பற்ற வைத்து உலை வைத்துவிட்டு ராமநாதனிடம் வந்து மிகுந்த அன்போடும் அக்கறையோடும் "உங்களுக்கு என்ன சமையல் பிடிக்கும்?" என்று விசாரித்தாள்.

அவனுக்குப் பதில் சொல்லச் சங்கடமாக இருந்தது.

"நீங்க சகஜமாகவே பேசமாட்டேங்கிறீங்க, உங்களுக்கு இன்னது புடிக்கும்னு சொல்றதுக்கு என்ன தயக்கம்..." என்று அவள் வற்புறுத்திக் கேட்கவே ராமநாதன் புன்னகையோடு சொன்னான்:

"ராத்திரியிலே எனக்கு வத்தக்குழம்பும் சுட்ட அப்பளமும் இருந்தா, அதான் பெரிய விருந்து."

அவனது 'செலக்ஷன்' அவளுக்கும் பிடித்திருந்தது.

"அது சரி, நல்லாத்தானிருக்கும்... ஆனா, வத்தலுக்கு எங்கே போறது...? ஒண்ணு பண்ணட்டா. தக்காளி போட்டு வத்தக்குழம்பு மாதிரியே செஞ்சிடறேன் என்னா, சரி தானா...? அப்புறம் அப்பளம் மட்டும் போதுமா என்ன? கூட உருளைக்கிழங்கு சிப்ஸ், ரசம் தயிர்... ஓ! ஓ பிரமாதம்...!" என்று அவனது யோசனையோடு தனது யோசனையையும் சிலாகித்துக் கொண்டாள். பிறகு பென்சிலையும் ஒரு

துண்டுக் காகிதத்தையும் எடுத்து, தூணருகே சாய்ந்து உட்கார்ந்து சின்ன லிஸ்ட் தயார் செய்தாள். கையில் லிஸ்டுடன் தெருவாசற் கதவைத் திறந்து, மீண்டும் "டேய்... சோமாறி! என்று அழைத்தாள்."

"தோ, வந்துட்டேன் அக்கா." என்று குரல் கொடுத்தவாறு ஓடி வந்தான் காக்கி நிஜார் சிறுவன்.

அந்தச் சிறுவன் பின்தொடர உள்ளே வந்து அறைக்குள் சென்று ஒரு பையும் பணமும் கொணர்ந்து அவனிடம் கொடுத்து,

"சீக்கிரம்... அஞ்சு நிமிஷத்துலே இந்தச் சாமான் எல்லாம் வாங்கிட்டு ஓடி வரணும்" என்று சொன்னவுடன் பையன் குதித்துக் கொண்டு ஓடினான்.

அன்று இரவு ஓர் இளம் பெண்ணின் வளையலணிந்த கரம் பரிமாறிச் சாப்பிடும் அனுபவம் பெற்ற ராமநாதன், தாம்பத்திய சுகத்தின் உண்மையான சுவையையும் ஓரளவு கண்டான். - கண்டு என்ன செய்வது?

தாஜ்மகால் கட்டிய ஷாஜஹான் மீது கொண்ட பொறாமை இன்னும் கொஞ்சம் அவனுக்கு வலுப்பட்டது.

'அதற்கெல்லாம் - அந்த மாதிரி நிரந்தர இன்பத்துக்குத் தாங்கள் பிறக்கவில்லை' என்பவை அவன் மட்டுமா, அவளும் உணர்ந்தவள் தான்.

அவர்கள் இருவரும் அன்றிரவு அனுபவித்த இன்பங்களில் எல்லாம் ஒருவித சோகத்தின் பூச்சே மேலாகவும் உள்ளோட்டமாகவும் இருந்தது.

மறுநாள் காலை, இருள் விலகிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவன் அங்கிருந்து புறப்பட்டான். கதவைத் தாழிடுவதற்காக அவனுடன் தெருவாசலுக்கு வந்தாள் அவள். அவளிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது அவனுக்கு வார்த்தைகளே வரவில்லை. நன்றி தெரிவித்தால் அவள் என்ன சொல்வாளோ என்று பயந்து, சொல்லாமல் இருக்க முடியாமல் திணறித் திணறி "ரொம்ப

நன்றி" என்று வாய்க்குள் முணகியவாறு தலை குனிந்தான். அவனுக்கு மேல் படியில் நின்றிருந்த அவள், இப்பொழுதான் வாலிபப் பருவ முற்ற சிறுவன் போல் தன் எதிரில் நாணமும் வெட்கமும் மிகுந்து நிற்கும் ராமநாதனின் கிராப்புச் சிகையை அன்புடன் விரல்களால் நீவியவாறு "... எதுக்கு நன்றி சொல்லணும்? எனக்கு ஒரு புருஷன் இருந்தா அவன்கிட்டே கூட நான் பணம் வாங்குவேனா?" என்று நெஞ்சடைக்கக் கூறும் போது ஆதரவுக்காகக் தவிப்பது போல் அவள் அவனது முகத்தை இரண்டு கைகளாலும் இறுகப் பற்றினாள்.

"நான் வரட்டுமா? அடுத்த வாரம் நிச்சயம் வருவேன்" என்று கண்கள் பளபளக்க அவன் கூறியபோது அவள் கரங்கள் அவன் முகத்தை ஏந்தி இருந்தன. - ம்... பெரிசா காதல் பண்றதா நெனச்சி வந்தியா என்று முதல் நாள் மாலை அவள் கேட்ட கேள்வி இப்பொழுது இருவர் காதிலும் ஒலித்தது. இப்பொழுது இவர்கள் இதயங்கள் இருக்கும் நிலை என்ன? இந்த நிலைக்குப் பெயர்த்தான் என்ன? - காதலா?

"சீசீ! இல்லை' என்று மறுத்தது அவள் உள்ளம்; 'நிச்சயம் நான் அடுத்த வாரம் வருவேன்' என்று காதலர்களைப் போல் உறுதி சொல்லிக் கொண்டதையும், அவன் முகத்தைத் தான் கையிலேந்தி நிற்பதையும் உணர்ந்த அவள் மனம் உலுப்பி எழுந்தது: "யோவ்! நீயும் நானும் எந்தவித உறுதியும் சொல்லிக்கக் கூடாது. தெரியுமா? நீ வருவேன்னு நான் காத்திருக்கணுமோ? ஏனாம்? போதும் போதும் நான் யாருக்காவும் காத்திருக்கத் தயாராயில்லே, இனிமே" என்று சொல்லும் அவள் எதை நினைத்துக் கண்கலங்கினாள் என்று அவனுக்கு புரியவில்லை. - ஆமாம்; எல்லாருக்குமே ஓர் இறந்தகாலம் இருந்திருக்குமல்லவா?

அவள், தன் கண்கள் கலங்கியது அவனுக்குத் தெரியாதிருக்கும் பொருட்டு வேறு பக்கம் முகம் திருப்பிக் கொண்டு சொன்னாள்: "ஹ்ம் நாளையைப்பத்தி நமக்கென்ன கவலை? என்னைத்தேடி நீங்க வரும்போது

நான் எவனோட இருப்போனோ? நான்தான் வேணும்னு நெனைக்க உங்களுக்குத் தான் என்ன உரிமை இருக்கிறது...” என்று அவள் கேட்டதற்கு அவன் என்ன பதில் சொல்ல முடியும்? அவர்கள் இருவருமே மௌனமாய்ப் பிரிய மனமில்லாதவர்கள் போன்று நின்றிருந்தனர். அப்போது எதிர்வீட்டுக் கதவு திறந்தது; எதிர்வீட்டுக்காரி வாசலில் வந்து நின்று இவர்களைப் பார்த்தாள்.

"அதோ பாருங்க. நேத்து சாயங்காலம் வெச்ச பூவும் பொட்டும் கலையாது வந்து நிக்கிறா, பாவம்! அப்படின்னா, என்னா அர்த்தம்? தலையிலேருக்கிற பூ கசங்கலேன்னா, நேத்து ராத்திரி அவ பட்டினின்னு அர்த்தம், நாங்க எல்லோரும் ஒரே மாதிரிதான். ஆனா, அவளும் மத்தவங்களும் இங்கேயே ரொம்ப காலமாக இருக்கறவங்க, நான் புதிசா வந்தவள்ங்கறதனாலே 'போட்டிக்கு வந்தவ'ள்னு எம்மேலே அவுங்களுக்குப் பொறாமை கூட இருக்கும். அதுக்கென்ன அடுத்த தடவை நீங்க அவசியம் வாங்க, நான் தான் வேணும்னு வரவேண்டாம். யாருக்கும் நான் போட்டியில்லே நான் கெடைக்க முடியாத அந்த சந்தர்ப்பத்திலே நீங்க அவ வீட்டுக்குத்தான் போகணும்... சரிசரி; இதைத் தான் சொல்ல நான் யாரு...” என்று எதிர்வீட்டுக்காரியின் பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டதனால் தனக்குள் முணகிக் கொண்டாள். அப்புறம் திடீரென்று "சரி போயிட்டு வாங்க!” என்று அவன் முகத்தைக் கூடப் பார்க்காமல் நிர்தாட்சண்யமாய் உள்ளே போய் அவன் முகத்தில் அறைவது போல் கதவை மூடிக்கொண்டாள். மூடிய கதவை வெறித்தவாறு ஒரு வினாடி நின்ற பிறகு தெருவில் இறங்கி நடந்தான் ராமநாதன்.

அவன், சந்திலிருந்து பெரிய தெருவுக்குத் திரும்பும் போது அவநம்பிக்கையுடன் திரும்பிப் பார்த்தான். உள்ளே போன சரளா கதவைத் திறந்து கொண்டு தெருவாசலில் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது கண்டு மலர்ந்த சிரிப்புடன் கையை ஆட்டினான். தொலைவிலிருந்த அவளும் தலைக்கு மேல் கையசைத்து விடை தந்தாள்.

அவள் தனக்குள்ளேயே எவ்வளவு போராடி எவ்வளவு தோல்வியுறுகிறவள் என்று எண்ணியவாறே சந்திலிருந்து திரும்பும்போது அவன் மனசு ஏனோ தவியாய்த் தவித்தது. எல்லாவற்றுக்கும் மேலாய் எதிர்வீட்டுக்காரியைக் காட்டி, 'அவள் தலையிலே இருக்கிற பூ கசங்கலேன்னா நேத்து ராத்திரி அவ பட்டினின்னு அர்த்தம்' என்று சொன்ன சரளாவின் வார்த்தைகளை நினைத்தபோது, தனக்குத் தெரிந்த உண்மையின் உணர்வைப் பாதிக்கும் வேகத்தோடு கூடிய தோற்றத்தையோ தொனியையோ அனுபவித்த சோகத்தில் அவன் கண்கள் கலங்கின... இமை விளிம்பில் முத்தாய் உருளாத விவஸ்தை கெட்ட கண்ணீர் நீண்டு கிடந்து கனத்ததை உள்ளங்கையால் தேய்த்துக் கொண்டான் ராமநாதன்.

அவளும், பார்வையிலிருந்து அவன் மறைந்த பின்னும் தலைக்கு மேல் அசைத்த கை துவண்டு விழ, உள்ளே சென்று மூடிய கதவின் மீது சாய்ந்து துயரம் கலந்த புன்னகையோடு பெருமூச்செறிந்தாள்.

- பிரிந்த பின், இரண்டு ஹிருதயங்கள் கனத்ததும், இருவர் கண்களும் கலங்கிக் குளமானதும் பரஸ்பரம் இருவருமறியாத இரண்டு ரகசியங்களாயின.

ராமநாதன் லாட்ஜுக்குத் திரும்பும்போது கிருஷ்ணய்யர் மொட்டைமாடியில் தேகாப்பியாசம் செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் 'ஓய் கிருஷ்ணய்யரே! இன்னிக்கி என்னமோ பெரிசா இலக்கணம் சொன்னீரே... வேசிக்கு உம்ம இலக்கணத்தை அவளும் கூட மீறிவிட்டாள் ஓய்!" என்று கத்தவேண்டும் போலிருந்தது அவனுக்கு. நேரே ரூமுக்குக் கூடப் போகாமல் மொட்டை மாடிக்கு ஓடினான்.

ஆனால், அவன் அங்கே போனபோது, இவனும் பேச முடியாதபடி, அவரும் இவன் பேச்சைக் கேட்க முடியாத படி தலைகீழாய் நின்று சிரஸாசனம் செய்து கொண்டிருந்தார் கிருஷ்ணய்யர். அவருக்குத் தொந்தரவு இல்லாமல் சற்றுத்

தள்ளிப்போய் நின்று வெளுத்து ஓளிவீசிவரும் கிழக்கு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் ராமநாதன்.

இரவெல்லாம் சரியாகத் தூங்காமலிருந்தும்கூட அவன் மனத்திலும் உடலிலும் ஒரு கிளர்ச்சியும் உற்சாகமுமே இருந்தது.

'அவள்' பொதுவாக வேசிகளுக்குரிய இலக்கணத்தை மீறிவிட்டாள். தான் 'அது' மட்டுமல்ல, அதற்கு மேல் அல்லது அதற்கு மாறானவள் என்று கூட உணர்த்தி விட்டாள். நான்? இன்னும் கிருஷ்ணய்யர் சொல்வது போல் ஒரு ஸ்திரீலோலன்தானா? அது மட்டும் தானா...? என்ன தான் அவள் ஆயிரந்தடவை முகத்திலடித்தாற் போன்றோ, அல்லது சகஜமாய் நானிருந்ததற்கு நன்றி செலுத்தியோ உபசார வார்த்தைகள் சொன்னபோதிலும், நான் எவ்வளவு சுயநலமாக நடந்து கொண்டிருக்கிறேன்...! எவ்வளவு கேவலமான ஸ்திரீலோலனாகி அவளுக்குக் கடன்பட்டு வந்து நிற்கிறேன்... என்று தான் அவளிடம் 'கௌரவமாக' நடந்து கொள்ளாமலிருந்து விட்டதற்காகத் தன்மான உணர்வில் மனம் புழுங்கினான் ராமநாதன்.

எதற்காகவும் அவள் தன்னைச் சற்றும் தாழ்வாக எண்ணவில்லை என்று அவன் மனம் அறியும். எனினும் அதே மனம் தான். தன்னை இழிவான ஸ்திரீலோலனாக்கி, அவளை மரியாதைக்குரிய வேசியாக்கி, அவள் முன்னே தன்னை ஓர் அடியாய்க் குறுக்கிக்கொண்டு, தன் முன்னே அவளைப் பிரமாண்டமாய் உருவகித்து நாணி ஒடுங்கியது.

'சீ! இதைப் போய் கிருஷ்ணய்யரிடம் வேறு பெருமையாய்ச் சொல்லிக் கொள்ள ஓடி வந்தேனே! என்று மனசுக்குள் தன்னை கண்டித்துக் கொண்டான் ராமநாதன்.

'அப்படின்னா, அவர் சொன்ன இலக்கணம் சரியில்லேன்னு அவருக்குச் சொல்ல வேண்டாமா?'

சொல்லணும் சொல்லணும்... ஆனா என்னைப் பார்த்து அவர் சிரிக்கப்போற நிலையை மாத்திக்கிட்டு வந்து கிருஷ்ணய்யர் கிட்டே ரொம்ப விஸ்தாரமா எல்லாத்தையும்

சொல்லணும். அவர் நல்ல மனுஷன். உணர்ச்சிகளை மதிக்கிறவர். கண்ணிலே தண்ணி விட்டுடுவார்... அதுக்கு என்ன பண்ணணும்...? ம், மாசம் பொறந்து கையிலே பணம் வரட்டும்...' என்று தன் மனத்துக்குச் சொல்லிக் கொண்டான். நல்ல தீர்மானத்துக்கு வந்தவன் போல் திருப்தியுடன் தலையை ஆட்டிக்கொண்டு, தனது மகிழ்ச்சியைத் தனக்குள் புதைத்துக்கொண்டு மொட்டை மாடியிலிருந்து இறங்கி ரூமுக்கு போனான்.

அவன் வந்தது, போனது எதையும் கவனிக்காமல் கிருஷ்ணய்யர் தலைகீழாய் நின்று கொண்டிருந்தார், வெகு நேரத்துக்குப் பின் அவர் ஆசனங்களை முடித்தபோது உலகம் விழித்து, விடிந்தபின் பரவிய வெளிச்சத்தில் தனது பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தது.

*****

# 3

தன் வாழ்நாளில் எந்த ஒரு குறிப்பிட்ட பெண்ணின் பாலும் அந்த மனம் பறிகொடுக்காத ராமநாதன், சரளாவின் மூர்த்திகரத்தில் கட்டுண்டு அவளது குணநலன் வயப்பட்டு, மனம் பறிகொடுத்து, அவள் நினைவாகவே அந்தப் பத்து நாட்களைக் கழித்தான்.

மாதக் கடைசி நாளன்று சம்பளம் வாங்கும்போது ஒரு மாத போனசும் சேர்ந்துவர நான்கு மடங்கு மகிழ்ச்சியுடன் கையில் முந்நூறு ரூபாயுடன் ஆபிசை விட்டு வெளியே வந்ததும், அப்படியே ஓடிச்சென்று சரளாவின் முன் நிற்க வேண்டும் போலிருந்தது.

ஆமாம்; அவள் எதிரில் போய் நின்று அவளது இனிய முகத்தைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அவளைத் தீண்டவும் அவன் இன்று தயாரில்லை அவனும் 'ஸ்திரீலோலர்'களுக்கே உரிய பொதுவான இலக்கணத்தை இன்று மீறியாக வேண்டும். அவன் அதுமட்டுமல்ல, அதற்கு மேல் அல்லது அதற்கு மாறான...

கடைத்தெருவில் வந்து கொண்டிருக்கும் போது திடீரென்று அவனுக்கோர் ஆசை பிறந்தது. ஒரு ஜவுளிக் கடையில் நுழைந்து அறுபது ரூபாய்க்கு, அவள் நிறத்துக்குப் பொருத்தமாய்த் தேடி நீல நிறத்தில் சன்னமாய்ச் சரிகைப் கரையிட்ட ஒரு பட்டுப் புடவையை வாங்கிக் கொண்டு வெளியே வருகையில், தன்னைப் பற்றி எண்ணி அவனுக்கே சிரிப்பு வந்தது. தான் ஒரு பெண்ணுக்காகப் புடவை வாங்கிச் செல்ல நேருமென்றோ, தன் மனத்தில் இவ்விதம் ஒரு பெண்ணின் நினைவு ஆட்சி செலுத்து மென்றோ அவன் கனவுகூடக் கண்டதில்லை. சிரிப்பு வந்தால் அவனுக்கு அடக்கத் தெரியாது. அவ்விதம் அடக்கத் தெரியாமல் சிரித்ததனால்தானே அன்று அந்த பஸ் ஸ்டாண்டில் இவளுடைய பரிச்சயம் அவனுக்கு ஏற்பட்டது. இப்பொழுது வழி நெடுக இடையிடையே லேசாகத் தனிமையில் சிரித்துக் கொண்டே நடந்தான்.

'போனவுடன் இந்தப் புடவையைக் கண்டு அவள் எவ்வளவு ஆனந்தப்படுவாள்! ஒரு வேளை ஏறுக்கு மாறாய் ஏதாவது பேசினாலும் பேசுவாள், அவள் என்ன செய்தாலும் நல்லாத்தானிருக்கும். 'இப்பவே இதை உடுத்திக்கணும்'னு நான் சொல்வேன். அவள் ஒரு நிமிஷம்' என்று அனுமதி கேட்டுக்கொண்டு அறைக்குள் போவாள். அதுக்குள்ளே நான் தெருவாசற்படிக்குப் போய் அந்த 'சோமாறியைக் கூப்பிட்டு, 'காக்கா கடைக்குப் போயி. 'மலாய்' போட்டு ரெண்டு டீ வாங்கி வரச் சொல்வேன்...'

'அப்புறம் இன்னிக்கி சாப்பாடு வெளியே அவளைக் கூட்டிக்கிட்டு ஹோட்டலுக்குப் போயி விதவிதமா சாப்பிடலாம். 'சமைக்கிறேன்'னு அவ சொல்லுவா - அவள் சமையல் தான் அன்னிக்கி எவ்வளவு நல்லா இருந்தது...! தக்காளி போட்டு, எங்கம்மா வைக்குமே, அந்த மாதிரியே... எவ்வளவு சீக்கிரம் சமைச்சு எவ்வளவு அன்போடு பரிமாறினா! பொண்ணுன்னாலே - அவ எவ்வளவு மோசமான தேவடியாளானாலும் - அவகிட்டே கொஞ்சம் 'அம்மாயிஸம்' இருக்கத்தான் இருக்கு! இவகிட்டே நெறையவே இருக்கு! ம், இன்னிக்கு அவளைச் சமைக்கவிடக்கூடாது; கேட்டா, 'நீ இன்னிக்கி என்னோட விருந்தாளி'ன்னு சொல்லணும்.

'அப்புறம் சினிமா...! அப்புறம், வீட்டுக்கு வந்து விடிய விடிய அவளோட பேசிக்கிட்டே இருக்கணும். அவளும் ஏதோ கொஞ்சம் படிச்சவளா இருக்கணும்... அனுபவம்! வாழ்க்கையிலே நல்லா அடிவாங்கி இருக்கணும்... அதான் சில சமயத்திலே ரொம்ப அறிவுபூர்வமா பேசறா... ஒரு ஆணும் பெண்ணும் பேசிக்கிட்டே இருக்கறதைவிட, அறிவு - உணர்வு பூர்வமான சம்பாஷணைக் கலப்பைவிட என்ன இன்பப் பரிவர்த்தனை இருக்கு உலகத்திலே!

'நாளைக்கிக் காலையிலே ரெண்டு பேரும் மனசிலே தாங்கமுடியாத சந்தோஷ உணர்வோட, புனிதமாப் பிரியும் போது அவள் கொஞ்சம் கோபத்தோடேயே கேக்கலாம்; யோவ்! நீ யாருய்யா எனக்கு சும்மா வந்து இவ்வளவு செலவு பண்ணிட்டுப் போறதுக்கு?'ன்னு... அப்போ நான்

சொல்லுவேன்; 'ஏன் உனக்கு ஒரு புருஷன் இருந்து, அவன் புடவையும் பணமும் கொண்டுவந்து கொடுத்தாக் கூட நீ சும்மா வாங்கிக்கமாட்டே போலிருக்கே!ன்னு அவ சொன்ன மாதிரி உருக்கமா சொல்லணும். அவளுக்குக் குரல் கம்மிப் போகும்... அவள் மொரட்டுத்தனமா இருக்க முயற்சி பண்ணாலும் கடைசி வரைக்கும் இருக்க அவளாலே முடியாது... ஆமாம், கடைசி வரைக்கும்.'

- அவளைப் பற்றிய கனவுகளில் சஞ்சரித்தவாறே அவள் வீட்டருகே அவன் வந்தபோது...

மூடிய கதவின் மீது பூட்டு தொங்குவதைக் கண்டு சற்றே அவன் ஏமாற்றமடைந்தான்.

'நீ ஏமாந்தே போனாய்!' என்று சொல்லுவது போல் காக்கி நிஜார் அணிந்த அந்தச் சிறுவன் அவனருகே வந்து,

"சரளா அக்காவைப் போலீஸ்காரங்க புடிச்சிக்கிட்டுப் போயிட்டாங்க...” என்று சாதாரணமாகச் சொன்னான்...

இந்த ஏமாற்றத்திற்கு இணையாய் ராமநாதனின் வாழ்க்கையில் இதுவரை ஏதும் நிகழ்ந்ததில்லை. நெஞ்சில் பெருகி வந்த துயரத்தையும், கண்களில் சுரந்து வந்த கண்ணீரையும் மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் அவள் நினைவுக்கு அஞ்சலி செய்வது போல் அடைத்துக் கிடந்த அந்த வீட்டின் முன்னே ஒரு வினாடி தலைகுனிந்து நின்றான் ராமநாதன்.

அப்போது, "டேய் பையா! அவரை இங்கே அழைச்சிக்கிட்டு வா" என்ற குரல் கேட்டு ராமநாதன் திரும்பினான். “வாங்க!” என்று சிரித்து, அறிமுகமுள்ளவள் போல வரவேற்றாள் எதிர்வீட்டுக்காரி.

'யோவ்! நீயும் நானும் உறுதி சொல்லிக்கக்கூடாது. தெரியுமா...? அடுத்த தடவை நீங்க அவசியம் வாங்க. நான் தான் வேணும்னு வரவேண்டாம். நான் கெடைக்க முடியாத அந்த சந்தர்ப்பத்திலே..." என்ற அவளது வார்த்தைகளை எல்லாம் எண்ணியவாறே எதிர்வீட்டை நோக்கினான் ராமநாதன்.

அவன் மௌனமாக இருப்பது கண்டு எதிர்வீட்டுக்காரி அவனிடம் பேச்சுக் கொடுத்தாள்; "சரளாவை முந்தா நாள் தான் போலீஸ்லே புடிச்சிகிட்டுப் போனாங்க. அவளும் ரொம்ப மோசமாத்தான் நடந்துக்கிட்டா, நல்லவங்க, கௌரவமா இங்கே வந்து போகமுடியலே... அப்படி ஒரு அட்டகாசம் பண்ணினா அவ. போலீசுக்காவது பயப்பட வேண்டாம்? - அதுவும் கெடையாது. நாங்கள்ளாம் போலீங்காரங்கன்னா பயந்து மரியாதையா நடந்துக்குவோம். அவளுக்குத்தான் பெரிய ராணின்னு நெனப்பு. அதனாலே இவளைப் புடிக்கணும்னு ஒரே குறியா இருந்து புடிச்சிட்டாங்க. அப்பக்கூட என்ன திமிரு! அரஸ்டு பண்ணி 'சீக்கிரம் வா'ன்னு ஒரு போலீஸ்காரரு இழுத்தார்னு, இங்கிலீஸ்லே அவரைக் கன்னாபின்னான்னு, திட்டினாளே! அடிச்சுத் தான் இழுத்துக்கிட்டுப் போனாங்க... தெரு சிரிச்சுப்போச்சு, போங்க...!"

"போதும்" என்று அவன் அவளைச் சாந்தமாகத் தடுத்தான். அவன் அவளுக்கு ஒன்றும் பதில் சொல்லாமல் கையிலுள்ள புடவைப் பெட்டியைத் திறந்து பார்த்தான்.

"அவள் இருந்தாலும்கூட இந்தப் புடவையோடேயே உன்கிட்டே அனுப்பி இருப்பா, என்னை... சரி, இதை அவளுக்காக வாங்கி வந்தேன்... ம்... நீ வெச்சிக்க; சரளா உங்ககிட்டே எல்லாம் ரொம்பப் பிரியம் வெச்சிருந்தாள்... ம் நான்..." என்று புடவையை அவளிடம் தந்தபோது அவள் ஒன்றும் புரியாமல் தயக்க நிலையில் அதை வாங்கினாள்.

அன்று எதிர்வீட்டுக்காரி கலையாத தலையும் குலையாத பூவுமாக விடியற்காலை வந்து நின்றபோது சரளா அவளைப் பார்த்துத் தங்களைப் போன்றோரின் நிலை பற்றிக் கூறி வார்த்தைகளை நினைவு கூர்ந்தவாறே திரும்பி நடந்தான் ராமநாதன்.

எதிர்வீட்டுக்காரி கையில் ஏந்திய புடவையுடன் அவன் போவதைப் பார்த்தாள். பூட்டிக் கிடக்கும் சரளாவின் வீட்டுக் கதவைப் பார்த்தாள். ராமநாதனின் செய்கையாலோ

வார்த்தையாலோ அவளுக்குச் சரளாவின் மீதிருந்த அர்த்தமற்ற பொறாமை விலகி மறைந்தது. அவள் கண்கள் எதிர்வீட்டுக் கதவை வெறித்தவாறிந்தன. மூடிய கதவின் மீது சித்திரம் போல் சரளாவின் உருவத்தை அவள் மனம் கற்பித்துக் கொண்டது. சரளாவின் கள்ள மற்ற சிரிப்பையும் அன்பு நிறைந்த முகத்தையும் அவள் அன்புடன் எத்தனையோ முறை எத்தனையோ விதங்களில் உதவி செய்வதையும் எண்ணியபோது அவள் கண்கள் கலங்கின. தெரு சிரிக்க வாழ்ந்த சரளாவுக்குத் தங்கள் சமுதாயம் முற்றும் அழவேண்டும் போலும் அழுத்து போலும் இருந்தது. அவளுக்கு!

*****

# 4

ராமநாதன் சொன்னதையெல்லாம் கேட்டுக் கிருஷ்ணய்யர் உடலும் மனமும் புல்லரிக்க வியந்தார். ஒரு வேசிக்காக அவர் மனம் குழைந்ததைக் கண்டு ராமநாதன் திகைத்தான்.

ஏமாற்றத்தாலும் வருத்தத்தாலும் விபரீதமாய்க் கெட்டுப்போன பின்னும் வீம்புடன் பணம் பேசும் சமூகத்தின் இயற்கைக்கு முரணான தன்மையை எண்ணிய - குழப்பத்தாலும், தளர்ந்துபோய் ஈஸிசேரில் சாய்ந்தான் ராமநாதன், பிடரிக்குக் கீழே அண்டை கொடுத்திருந்த கையின் விரல்களுக்கிடையே பற்ற வைத்த சிகரெட் புகைக்கப்படாமல் சாம்பல் நீண்டு செங்குத்தாகப் புகைக் கோடுகளை உயர்த்திக் கரிந்து கொண்டிருந்தது.

கிருஷ்ணய்யருக்கு அவன் இளகிய மனதை அறிந்த போது சங்கடமாக இருந்தது. அவன் தோளை பிடித்து உலுக்கியவாறு சொன்னார்: "வேசிக்கும், உமக்கும், உம் கவிதைக்கும் இலக்கணமில்லாமல் இருக்கலாம். நாம் வாழும் இந்தச் சமுதாயத்துக்கு ஓர் இலக்கணம் உண்டுன்னாவது உமக்குப் புரியுமா? அது தான்! இதுக்கு அர்த்தம் - என்ன நான் சொல்றது அர்த்தமாச்சா?" என்று காலை மடக்கிப் போட்டு நாற்காலியில் ஏறி நிமிர்ந்து உட்கார்ந்தார் கிருஷ்ணய்யர்.

"இலக்கணமா? சமுதாயத்துக்கா...ம்! அதற்கு இன்னம் இலக்கணமே உருவாகவில்லை ஐயா!" என்று சொல்லி விட்டு கைத்துப்போன சிரிப்புடன். நெஞ்சுக்கு இதமாய் சிகரெட் புகையை இழுத்துப் பலமாக ஊதி விட்டான் ராமநாதன். வளைந்து நீண்டு தொங்கிக் கொண்டிருந்த சிகரெட்டின் சாம்பல் பொட்டெனெ உதிர்ந்து நசித்தது!

அவர்களின் சுவராஸ்யமான விவாதத்தில் அல்லது அதி முக்கியமான விசாரத்தில் அவர்கள் இருவருமே அந்தச் சாம்பலைக் கவனிக்கவில்லை அவர்களுக்கென்ன, அறிவாளிகள்! அறிவுபூர்வமாக எதையும் கடைசி வரை

முடிவற்று - விவாதித்துக் கொண்டிருப்பார்கள்: இலக்கணத்தை வகுப்பார்கள்; மீறுவார்கள்; மீறுவது சரியா? என்று போராடுவார்கள்: மீறியதற்குக் காரணங்களை ஆராய்வார்கள்... கவிதை இதற்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை. கவிதை! சுகம்! எல்லாமே அப்படித்தான்.

(முற்றும்)